ரிஜிஸ்டர் நெ 2041. தனிப்பிரதி விலை ஒரு அணா.

# குடி அரசு

| | |
|---|---|
| வருட சந்தா முன் பணம் | — ரூ. 3—0 |
| 6-மாத சந்தா ,, | — ,, 1—12 |
| வேளி நாட்டிற்கு ,, | — ,, 5—0 |

ஞாயிறுதோறும் வெளிவரும்.

| |
|---|
| வியாபாரிகள் விளம்பரம் அங் 1 க்கு ரூ. 1. |
| கோர்ட் விளம்பரம் அங்குலம் 1 க்கு ரூ. 2. |
| நீடித்த விளம்பரத்துக்கு தனி விகிதம் |

மாலை 8. | ஈரோடு, ஆங்கிரஸ-வரு மார்கழி-மீ 25-உ (8—1—1933) | மலர் 37.


## இந்தியாவின் குறைபாடுகள்.

## The Crux of the Indian Problem

### என்னும் புஸ்தகத்தை வாங்கிவாசியுங்கள்.



இந்து மக்களின் பகுத்தறிவு வளர்ச்சியை பெருக்க என்றே பம்பாய் அரசாங்கக்கல்வி மந்திரியாய் இருந்த Dr. பராஞ்சிபே M. A. D: Sc., அவர்களால் எழுதப்பட்டு, லண்டன் பகுத்தறிவு சங்கத்தாரால் வெளியிடப்பட்ட ஓர் அறிவும், அனுபவமும், ஆராய்ச்சியும் கொண்டதான அறிய நூல் (+இன் தமிழ் மொழி பெயர்ப்பு) ஆகும். இதில் இந்தியக்கல்வியின் சிர்கேடு, மதம், மதபுத்தகங்களும் அதற்குள்ள குற்றங்களும், பகுத்தறிவு, மரணம், ஒழுக்கம், சோதிடமும் சகுனமும், முதலியனபற்றிய ஆராய்ச்சியுர், கண்டனங்களுமநிறைந்த கட்டுரைகள். ஆழ்ந்த அநுபவக்கருத்துக்கள், பாரபட்சமற்ற விளாசகங்கள், இந்திய சமுதாய வாழ்க்கையின் அலங்கோலத்தை அறிய விரும்பும் ஒவ்வொருவரும் படிக்கவேண்டுவதாகியம். முகவுரை, முடிவுரையுடன் 160 பக்கங்களுக்கு மேற்கொண்டது. இதில் எப்படிப்பட்ட தேசியம் வேண்டும்? எப்படிப்பட்ட அரசியல்வேண்டும்? என்பவைகளைப்பற்றியும், யாவற்றிற்கும் இந்திய மக்களுக்கு சுயமரியாதை உணர்ச்சி எற்படவேண்டியதே முக்கிய தேவை என்பதுபற்றியும் தெளிவான நடையில் விளக்கப்பட்டுள்ளது.

இதன் விலை அணு ... ... ... 0—8—0
குடி அரசு சந்தாதாரர்களுக்கு விலை அணு ... 0—6—0
மொத்தமாய் வேண்டியவர்களுக்கு குறைந்த விலைக்கு கொடுக்கப்படும்.

மானேஜர், குடி அரசு புத்தகாலயம், ஈரோடு.

## "கடவுளும், பிரபஞ்சமும்"

வெற சிறந்த ஆராய்ச்சி நூல். கடவுள் ஒருவர் உண்டா என்பதும், கடவுளுக்கும் பிரபஞ்சத்திற்குமுள்ள சம்பந்தா சம்பந்தமும், கடவுளது வேலை என்ன என்பதையும், சுயின்காரமாக ஆராய்ச்சி அறிவுடனும், பூக பௌதிக விஞ்ஞான சான்றுகள விளக்கங்களுடனும், தக்க மேற்கோள் உதாரணங்களுடனும், இனிய தமிழில், எளிய நடையில், யாவரும் படித்துணரும் வண்ணம் எழுதப்பட்ட ஓர்சிறந்த நூல். "கோழி முதலில் உண்டானதா முட்டைமுதலில் உண்டானது", "மரம் முந்தியதா, விந்து முந்தியதா", "பில்லி சூனியம்", முதலியன பற்றிய சந்தேகங்களுக்கு விடையும், அநுபந்தமும் சேர்க்கப்பட்டுளது. அதிக பக்கங்கள், குறைந்த விலை. உங்கள் ஆர்டரை இன்றே பதிவு செய்துகொள்ளுங்கள்.

பிரதி 1-க்கு விலை அணா 0-4-0 தனிப்பிரதி வேண்டுவோர் 5-அணா தபாற்பில்லைகள் அனுப்பவேண்டும்

மானேஜர், குடி அரசு புத்தகாலயம், ஈரோடு.

# இதுதானே தேவை!

இல்லற சுகத்தை யடையச்செய்ய ஏதுவான தாதுபுஷ்டியை அளிக்கும் மாத்திரை.

இணையற்ற மாத்திரையென யாவராலும் புகழப்பெற்று எண்ணிக்கையிலா ஆர்டர்கள் வந்துகொண்டிருக்கும் ஒப்புயர்வற்றது. மாதர்கள் மனதை திருப்தி பண்ணும் மாண்புவாய்ந்த தென்றால் இதைப்பற்றி அதிகம் விளக்குவானேன்!

இது மேகச்சூடு, வெட்டை, ஆண்மைக்குறைவு, வீரியக்குறைவு, நரம்புத்தளர்ச்சி, சோசம் தூவளல், இளைப்பு, தாகம் முதலியவைகளை நீக்கி வீரிய விருத்தி, போகசக்தி, இந்திரியக்கட்டு முதலியவைகளைக்கொடுக்கும். குளிகை 20 ரூ. 2—0—0. (தபால் சார்ஜ் வேறு)

மலையப்பசாமி, வைத்தியசாலை, பழனி. S. I.



Ready for Sale! Ready for Sale!!

## The Crux of the Indian Problem
## By Dr. Paranjpye M. A., D. Sc.

———)o(———

The English edition of the above book published by R. P. A. through Watts & Co., London, is ready for sale with us. All those who are sincerely interested in social advance and rejuvenation must go through Dr. Paranjpye's "Crux of the Indian Problem," a clear and vivid exposition of the present degraded social status of the Hindu Society, its abominable and vain observances practised in the name of Religion & God.
Clear cut ideas! Rationalistic views! Matured sentiments!!

English Print. Well gotup. Neatly bound.

Price per copy ... ... Rs. 1—0—0
For Subscribers of Kudi Arasu As. 0—8—0

Can be had of:—

**Kudi Arasu Book Depot. Erode.**



## ஆஸ்திக நாஸ்திக சம்வாதம்.

கடவுளைப்பற்றி தெள்ளத்தெளிய ஆராய்ந்து முடிவு கட்டும் ஓர் அறிய நூல். டிம்மி 170 பக்கம் கொண்டது. பிரதி ஒன்றுக்கு விலை அணை. 0—6—0

நாஸ்திகன்

C. K. குப்புசாமி, சேலம் பட்டு ஜவுளி, பெரியகாஞ்சீபுரம்.

குருட்டு நம்பிக்கைக்கு ஆதாரம்
கும்பகோண மகாமகம்.



## "தமிழன்"

ஓர் உயரிய சுயமரியாதைத் தமிழ் வாரப்பத்திரிகை.

தமிழர்களுக்காகத் தளராதுழைப்பவன் தமிழன். வெட்டுஒன்றுதுண்டு இரண்டான அபிப்பிராயங்கள் அச்ச மற்ற கண்டனங்கள். அறிஞரின் அறிய ஆராய்ச்சியுரைகள். சமதர்ம முழக்கங்கள் நிறைந்தது.

வருட சந்தா.
உள் நாடு ரூ. 3—0—0.
வெளிநாடு ரூ. 5—0—0.

விலாசம்:—
மானேஜர், "தமிழன்"
ஆண்டர்சன் பேட்டை போஸ்டு,
கோலார் தங்கவயல்.



## 'சமத்துவபோதினி'

தாழ்த்தப்பட்டார் சமத்துவம் முன்னேற்றம் கருதி கொழும்பினின்று வெளியாகும் மாதப்பத்திரிகை

ஆசிரியர்- வி. ஞானன்.

வருஷ சந்தா—2—8—0

விலாச :—சமத்வபோதினி
டிக்கோயா சிலோன்.



## ANANGARANGABATIKA
*(Enjoyment Pill)*
DIVINE REMEDY FOR SEXUAL DISABILITY

and IMPOTENCY-Restore youthful Retaintive & Erective Capacity ENSURE PLEASURE FOR ONE HOUR. Even an OLD one can fully enjoy the HEAVENLY BLISS derived From Sexual intercourse.

Complete satisfaction guarenteed. Money refunded in case of failure Price for 60 Pills Rs. 8 Sample phial of 20 Pills Rs. 3 only. Please write in ENGLISH.

**"SAILASRAM" (K)**
*Chandanpur,*
**(Khulna) E. B. R.**



## எதுவேண்டும்?

'சன்மார்க்க போதகர்' என்னும் நபிகள் நாயகத்தின் திவ்விய சரிதம் விலை அணை 2.

"சன்மார்க்கப் பணிதல்" என்னும் இஸ்லாமிய ஐங்காலத் திறவுகோல் விலை அணை 3.

இரண்டும் வாங்கினால் அணை 1.

ஆர்டருக்கு முந்துங்கள்.

மானேஜர்,
"இந்திய ஒளி" ஆபீஸ்
திருச்சினாப்பள்ளி.



Read.
*The 'Citizen'*
and become a
True Citizen.

The only Monthly Magazine in India purely devoted to the civic, Social and economic Interests of the Indians. Annual Subscription Rs. 2—0—0.

For advertisement please apply to:—
The Publisher
The Citizen
86, East Andar Street,
Teppakulam, Trichy.



## "வெடி குண்டு"
தனிப்பிரதி
விலை அரையணை.

ஏஜண்டுகளுக்கு

மேல்நாட்டு விஞ்ஞான ஆராய்ச்சி கட்டுரைகளும், சமூக சமுதாய அரசியல் செய்திகளுடனும் அச்சமற்ற ஆணித்தரமான அபிப்பிராயங்களையும் கொண்டு கிரவுன் 1-க்கு 2 சைசில் விசித்திர படங்கள் போட்டு 12 பக்கம், ரேப்பருடன் பிரதி ஞாயிறு தோறும் மதுரையிலிருந்து வெளியிடும் "வெடி குண்டு" என்னும் தமிழ் வாரப்பதத்திரிக்கைக்கு எல்லா விடங்களிலும் விற்பதற்கு ஏஜண்டுகள் தேவை. தனிப்பிரதி விலை அரையணை. பிரதி ஒன்றுக்கு இரண்டு பைசா கமிஷன் கொடுக்கப்படும்; எத்தனை பிரதிகள் தேவையோ அத்தனை பிரதிகளின் நான்கு வாரத்திய தொகையை முன் பணமாக அனுப்பப்படாத ஏஜண்டுகளை பதிவு செய்து கொள்ளப்படமாட்டா. முன் பணம் வருடசந்தா ரூ இரண்டு. ஆறு மாதத்திற்கு ஒன்றேகால். வெளி நாடு வருஷசந்தா மூன்று.

A. S. ஆனந்தம்
மானேஜிங் எடிட்டர்
காரியாலயம் தெற்கு வாசல்
மதுரை.



## ஈ. வெ. ராமசாமியின்
## இலங்கை
## சொற்பொழிவு.

24. பக்கம் கொண்டது. விலை பை- 0-0-6 100- புத்தகம்ரூ1-8-0 தபால் சார்ஜ் வேறு. 2ரூ- அனுப்பினால் 100-புத்தகம் தபால் கில்லாமல் அனுப்பப்படும்.

மானேஜர்
'குடி அரசு" ஈரோடு.

# What is wanted? Swaraj or Samadharma Raj?

# எதுவேண்டும்? சுயராஜ்யமா? சமதர்ம ராஜ்யமா?

[தோழர். ம. சிங்காரவேலு பி. ஏ., பி. எல்.,]

(2)

முன் கட்டுரையில், சுயராஜ்யத்தின் லட்சணங்களையும், அதன் குறைபாடுகளையும், எடுத்துக் காட்டினேம். இந்தக் குறைகளையுடைய ராஜ்யம் நமக்கு வேண்டுமா? எனவும் கடாவினேம் இந்தக் கட்டுரையில், சமதர்ம ராஜ்யத்தின் லட்சணங்களையும், அதன் மேம்பாட்டையும், விளக்குவோம்.

சமதர்மம், அல்லது சமதர்ம ராஜ்யமென்றால் என்ன? "சமதர்மம்" என்ற சொல்லுக்குரிய பொருள் என்ன வெனில், ஆங்கிலத்தில், Equal responsibility, அதாவது, சமத்துவப்பொருப்பு என்பதாம். தனவந்தரும், எளியோரும்; முதலாளியும், தொழிலாளியும்; உடையோனும், இல்லாதவனும்; நிலம் படைத்தோனும், நிலமில்லாதவனும், வீடு படைத்தோனும், வீடு இல்லாதவனும், வாங்குவோனும், விற்போனும் எல்லோரும் சரி சமத்துவ பொருப்பு வாய்த்தவர்களாய் இருத்தல், சமதர்மம்எனப்படும். எப்பொழுது சமபொருப்பு இருக்கின்றதோ, அதனோடு சம உரிமையும் உண்டு. அதனை ஆங்கிலத்தில் (Equal rights) என்று வழங்குவார்கள். ஆதலின், சமதர்மத்தில், சரி சம பொருப்பும், சரிசம உரிமையும், (Equal rights and equal responsibility) பொருந்தியுள்ளன. எந்த சமூகத்தில் எல்லா மக்களுக்கும் சம உரிமையும் சம பொருப்பும் உள்ளனவோ", அந்த சமூகம் சமதர்ம சமூகமெனப்படும். அதனை ஆங்கிலத்தில் Socialist community என்று கூறுவர். அவ்வித சமதர்ம சமூக ஆட்சியை, சமதர்ம ராஜ்ய மென்று வழங்குவர். ஆங்கிலத்தில் இதனை Socialist state என்று வழங்கப்படும்.

சிலர், எந்த சமூகமாவது, ஜாதி வேற்றுமை இல்லாமல், இருந்தால், அதனை சமதர்மமென்று நினைக்கின்றார்கள். அது தவறு. மகமதியருக்குள் ஜாதி வேற்றுமை இல்லை. ஆனால், அச்சமூகத்தை, சமதர்ம சமூகமென்று கூற மாட்டார்கள். இன்னுஞ்சிலர், ஜாதி வேற்றுமை உயர்ந்தவன் தாழ்ந்தவன் என்ற வேற்றுமைஇல்லாமல், பொதுவாகஉண்ணுதல்சமதர்மம்என்பார்கள். அதுவும் தவறு. மகமதியர்களும் ஐரோப்பியர்களும், ஜாதி வேற்றுமை இன்றி சரி சமத்துவமாக உண்ணுகின்றார்கள். ஆனால் அவர்களை, சமதர்ம (Socialist) சமூக மென்று அழைக்க முடியாது. கலப்பு மணம் எந்த சமூகத்தில் நடக்கின்றதோ அந்த சமூகம், சமதர்ம சமூக மென்பார் சிலர். அதுவும்தவறு. கலப்புமணம்புரியும் சமூகங்கள், உலகில் பலவுள. அப்படி இருந்தும்அச்சமூகங்களை, சமதர்ம சமூகமென்று அழைப்பதில்லை. மதமற்ற சமூகம், சமதர்மமாகுமா? என்று பார்க்கப்போனால் அதுவும் ஆகாது. நாஸ்திக சமூகத்தாரை, சமதர்மிகளென்று வழங்குவதுமில்லை. ஆனால், ஜாதிஇன்மை, மதமின்மை, சமதர்ம அனுஷ்டானத்தில் சேர்ந்தவைகளாய் இருந்தபோதிலும், இவைகளனைத்தையும் மாத்திரம் அனுஷ்டிக்கப்படும் சமூகம், சமதர்ம சமூகமாகாது. சரி சமத்துவமும், சம உரிமையும், பொருள் படைத்தலில், அதாவது, பொருளாதாரத்தில் (Economical) இல்லாவிட்டால் மற்றஎந்தஉரிமைஇருந்தும் பயனில்லை. எந்த பொருப்பு இருப்பினும் பயனில்லை. பொருளாதாரத்தில் சமஉரிமை (Equal rights) சம பொருப்பு, (Equal Responsibility) எந்த சமூகத்தில் இல்லையோ, அந்த சமூகம், சமதர்ம சமூகமாகா.

பாரத ராமாயண காலமுதல், எவ்வளவோ கடவுளற்ற சமூகங்கள் இருந்தன; ஜாதி அற்ற சமூகங்கள் இருந்தன. இன்றைக்கும் இருந்துவருகின்றன. ஆனால், அவையாவும் சமதர்ம சமூகமெனச்சொல்ல முடியாது. அப்படியானால் சமதர்ம மென்றால் என்ன? நாட்டில் விளையும் விளை பொருளும், செய்யப்படும் செய்பொருளும், அந்நாட்டிலுள்ள யாவருக்கும் சரி சமத்துவமாசவே வினியோகமாகும் சமூகமெதுவோ, அது தான் சமதர்ம சமூகமெனப் படுமென அறிக. மற்ற சமூகங்கள் யாவும், முதலாளி சமூக மென்றுகிலும், பொருளாளி சமூக மென்றுகிலும், சிறு முதலாளி சமூகமென்றுகிலும் வழங்கப்படும். இத்தியாதி சமூகங்கள் ஜாதி இல்லாதவர்களால் நிறைந்து இருக்கலாம் அல்லது மத மற்றவர்களால் நிறைந்து இருந்தாலும் இருக்கலாம். கலப்பு மணம் செய்கின்ற வர்களாகவும் இருக்கலாம் இருந்தாலும் இத்தியாதி சமூகங்கள் சமதர்ம சமூகமாகா.

சமதர்ம சமூகத்தில், மற்ற சமூகங்களில் இருந்து வரும் முக்கிய லட்சணங்கள் இல்லாமலிருக்கும் அவையாவன, லாபம் (Profit) சம்பாதிக்கும் நிட்டமும், சகல பொருள்களையும் அடைந்துள்ள லட்சணமும், சமதர்ம சமூகத்தில் இல்லாமலிருக்கும். சமதர்மத்தில், இன்னெரு விசேஷமும் உண்டு. அதாவது விளையும் பொருள்களும், செய்யும் பொருள்களும் விளைவிக்கச் செய்யும் சமூகத்திற்கே ஏற்றத் தாழ்வின்றி வினியோகம் செய்யப்படும். சமதர்ம சமூகத்தில் நிலத்திர்வை வாங்கும் நிலச்சுவானும் இரான் குடிக்கூலி (Rent) வாங்கும், வீட்டு சொந்தக்காரனும் இரான். லாபம் சம்பாதிக்கும், வர்த்தகனும் இரான். வட்டிவாங்கும் வணிகனும் இரான். தற்காலத்திலுள்ள நிலச்சுவானும், வர்த்தகனும், வணிகனும், வாடகைவாங்குவோனும், சமதர்ம சமூகத்தில் விளைவிக்கும், செய்யும், வினியோகிக்கும் மக்களுக்குள் வித்தியாசமின்றிகலந்து சமத்துவமாக வாழ்வார்கள். சொத்து இருக்கும்ஜாதிஎன்றும், (Haves) இல்லாத ஜாதி என்றும், (Have nots,) சமதர்மத்தில்இருக்காது. எஜமான் ஜாதி என்றும் வேலை செய்யும் ஜாதி என்றும் சமதர்மத்தில் கிடையாது. தற்கால உலகத்திலோ இரண்டு ஜாதி உண்டு, அவையாவன. பொருளாளி, தொழிலாளி. இவ்விரண்டு இனத்தாரும், சமதர்மத்தில் ஒருவருக்குள் ஒருவர் ஐக்கியமாகி விடுவார்கள். சமதர்மத்தில் ஒரே இனந்தான் இருக்கும், அதாவது உழைக்கும் இனம் வொன்று மாத்திரம் தான். சமதர்மத்தில் ஒவ்வொருவனுக்கும் உழைப்பதற்கு உரிமையும் உண்டு, பொருப்புமுண்டு. "உழைக்காதவனுக்கு உணவு இல்லை" என்பதே சமதர்மக் கொள்கை. தற்காலத்தில் உழைப்பின்றி சோம்பேரிகளாய் வாழும் சில மக்களுக்கு சமதர்மத்தில் இடமில்லை. சமதர்மத்தில் அன்னேருக்கு அதாவது, சோம்பேரிகளுக்கு வாழவும் முடியாது.

சமதர்மத்தில், உழைப்பவன் ஒருவன் அனுபவிப்பவன் வேறொருவன் என்ற ஆபாச வித்தியாசமான நிலமையே கிடையாது. "உழைப்பவனுக்கு உரியது உழைப்பின் பயன், என்பது தான், சமதர்மத்தின் தருமம். சமதர்மத்தில் எல்லோருக்கும் உழைக்க வேலை யுண்டு. உண்டாக்கப்படும் பொருள்களும், விளையும் பொருள்களும் தினசரி வாழ்வுக்கு வேண்டிய படியால், சமதர்ம சமூகத்தில், வேலை எல்லோருக்கும் இருந்துவரும். சமதர்மத்தில் வேலை இல்லை யென்று சொல்ல வராது. எந்தவேலையாகிலும் இருந்து கொண்டே இருக்கும். சமதர்ம சமூகத்தில், வேலை செய்தோர் போதாமல் இருக்குமே அல்லாது, யாருக்கும் வேலை இல்லாமல் இருக்காது.

மனிதருக்கு எந்த காலத்திலும் திருப்தி என்பது கிடையாது. திருப்தி அடைந்த மனித சமூகம் இறந்த சமூகத்திற்கு சமானமாகும். (Extinct society) அதிருப்தியே, மனித சமூகத்தின் இயற்கை குணமாகும். அதிருப்தியால் தான் மனித சமூகம், மற்ற மிருகாதிகளை வெனறு, தப்பிப் பிழைத்து வந்திருக்கிறது. "ராமன் ஆண்டாலென்ன, லட்சுமணன்ஆண்டாலென்ன" வென்று எண்ணி எந்திருப்பானேயாகில், மனிதனை அவனுடன் வாழ்ந்து வந்த கொடிய மிருகாதிகள், வாயில் போட்டுக் கொண்டிருக்கும்.

"ஊரை ஆளும் ராஜா எவனைப் இருந்தாலும், நோட்டிக்கு பில் சுமக்கும் வேலை தான்" என்று, 8 கோடி தாழ்த்தப்பட்டோர் எண்ணி வந்ததினாலேயே, அவர்களை தீண்டாதவர்களென்றும், செல்வமடைய பொருப்பற்றவர்களென்றும், கோயிலுக்குள் நுழையக் கூடாதவர்களென்றும், பண்ணை ஆட்களென்றும், பரையர்களென்றும், அடிமை ஆட்களென்றும் அழைக்கப் பட்டு வந்திருக்கின்றனர் இவ்வினத்தாருடையமனத் திருப்தியே, இவர்களை முன்னேற்ற மடைய வொட்டாமல் செய்து வந்திருக்கிறது. நம்நாட்டியர்களில் சில சோம்பேரிகள் "ஆங்கிலேயர்களுக்கு சந்திரனிடத்தில் பொன் சுரங்கம் இருப்பதாகத் தெரிந்தால் அங்கேயும்போய் பார்ப்பார்கள்" என்று ஏளனம் செய்வதை கேட்டும் இருக்கின்றேன். எழுதியுள்ளதையும் படித்துமிருக்கின்றேன். இந்த மனப்பான்மை தான் இத்தியரை கடந்த இரண்டாயிரயிரம் வருஷங்களாக யாவற்றுக்கும் கிரேக்கருக்கும் (Greeks) சிதியர்களுக்கும் (Scythions) மங்கோலியருக்கும் (Mongals), டார்டாருக்கும் (Tartars), (Hollands) உலாந்தகாருக்கும் டச்சுக்காருக்கும் (Dutch), போர்ச்சுகீஸுகளுக்கும் (Portuguese), பிரஞ்சுகாரர்களுக்கும் (Freneh) கடைசியில் ஆங்கிலேயர்களுக்கும் (English) அடிமைகளாய் இருப்பதற்கு காரணமாய் இருந்த

தொடர்ச்சி 17-ம் பக்கம் பார்க்க.

# நாடார் யுவர் மகாநாடு.

## தலைவர் தோழர் கே. கே. ஏ. பி. பெரியசாமியின் பிரசங்கம்.

### பொருளாதாரக் கஷ்டத்தைத் தீர்க்க சமதர்மமே தக்க மருந்து.

சென்னையில் டிசம்பர் 31-தேதி கூடிய வாலிபர் மகாநாட்டின் தலைவர் தோழர் கே. கே. ஏ. பி. பெரியசாமியின் சொற்பொழிவு:—

சகோதரர்களே!

ஓர் தேசமோ, அன்றி ஓர் சமூகமோ முன்னேற்றமடைய வேண்டுமாயின், அங்குள்ள வாலிபர்களின் இடையரா முயற்சி இன்றியமையாததாகும். சுமார் 40 வருடங்களுக்கு முன்னதாகச் சாதாரண நிலைமையிலிருந்த ஜப்பான் தேசமானது அங்குள்ள வாலிபர்களின் முயற்சியால் விளர்ச்சி செய்ததின் பயனாக, கல்வி, கைத்தொழில், விஞ்ஞானம், விவசாயம், முதலிய வகைகளில் அபார முற்போக்கடைந்து இன்று உலக வல்லரசுகளில் ஒன்றாகத் துலங்குவதையும் அதுபோலவே சைனா, ருஷியா, துருக்கி, ஸ்வீடன், அயர்லாந்து முதலிய தேசங்களும் அங்குள்ள வாலிபர்களினாலேயே விடுதலை பெற்றுள்ளதையும் கண்கூடாகக் காண்கின்றோம். எனவே சமூகமுன்னேற்றத்திற்காக இங்கு கூடியிருக்கின்ற வாலிபர்களான நாம் நமது வருங்கால முன்னேற்றங் கருதி நம் முன் கொண்டுவரப்படும் தீர்மானங்களைத்தருவி ஆராய்ந்து நிறைவேற்றி அதன்படி நடக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

#### கல்வி

பெரும்பாலும் வர்த்தகர்களாக இருக்கும் நம்மவர்களுக்கு உயர்தரக்கல்வி எத்தனை அவசியம் என்பதும் வாலிபர்களான உங்கள்மனதில்உறைவிடம் பெற்றிருப்பதை நான் நன்குணர்வேன். உயர்தரப் படிப்பில்லாமலே சொந்த முயற்சியாலும், உழைப்பினாலும் இவ்வுலகில் பலர் முற்போக்கடைந்திருப்பதை கண்கூடாகக்காண்கின்றோம். உயர்தரக்கல்வியில் பாண்டித்தியம் பெற்ற பட்டதாரிகளில் அநேகர் வேலையில்லாத்திண்டாட்டத்தால் பீடிக்கப்பட்டுவருவதானது நாட்டின் பொருளாதாரக் கஷ்டத்திற்கு ஓர் உதாரணமாகும். இதர மாகாணங்களில் ஒரு பி. ஏ. பட்டதாரியின் விலை மதிப்பு ரூ. 20 முதல் ரூ. 25 வரையிருக்கின்றது. நம்மாகாணத்திலோ மூர் மார்க்கட்வீலையை விட சவுதம்என்று சொன்னால்அது குற்றமாகிவிடாது. "எட்டுச்சுரைக்காய்கறிக்குதவாது'என்பது பழமொழியேயாயினும் அதுஅறிவிற்கும் அனுபவத்திற்கும் ஒத்ததாயிருக்கின்றது என்பதை புஸ்தகப்படிப்பால் பாண்டித்தியம் பெற்றவர்கள் பலர் இன்றுபசிப்பிணிக்குஆளாகிவருவதினின்றும் தெரிந்துகொள்ளலாம். ருஷியாவை எடுத்துக் கொள்வோமாயின் அங்கு நமது காட்டுக்கல்வி முறையை ஒழித்து புதியமுறையால் கல்விபோதிக்கப்படுகிறது.

ருஷியா தேசத்தின் மாஸ்கோ என்ற நகரிலுள்ள எட்டு வயது முதல் பதினேழு வயது வரையுள்ள பள்ளி சேர்ந்து, படிக்கும் நேரம் நீங்கலாக மற்ற நேரங்களில் படியாத தொழிலாளர்கள் வசிக்கும் இடங்களுக்கு சென்று அவர்களுக்குப்படித்துக்கொடுக்கின்றார்கள். மற்றும் தேச முன்னேற்றத்திற்கான வழிகளில் சித்தத்தை செலுத்திச் வருகிறார்கள் சிறு பிராயத்திலிருந்தே இவர்களுக்கு தொழில், விவசாயம், ரசாயனம், முதலிய கல்விகளோடு தேசப்பயிற்சிக்கான வகையிலும், கல்விபோதிக்கப்பட்டு வருகிறது தேசப்புனருத்தாரண கைங்கரியத்தில் இச்சிறுவர் சிறுமிகள் ஈடுபடுகின்றார்கள். இதனாலன்றே வேலையில்லாத்திண்டாட்டமும், வறுமைப்பிணியும், வியாபாரமந்தமும், பொருளாதார நெருக்கடியும், அடிமைத்தனமும், அந்நாட்டிலில்லை. ருஷியாவின் முற்போக்கைக் கண்டு இதர வல்லரசுகளும் திடுக்கிடுகின்றதென்றால் அந்நாட்டின் செல்வச்சிறப்பை சொல்லவும் வேண்டுமோ!

#### விவசாயம்

பொன் விளையும் நாடு என்றும் புண்ணிய பூமி என்றும் புகழ்பெற்ற நம்மிந்தியநாடு தற்பொழுது கஞ்சிக்குக் காற்றாய்ப் பறப்பதற்குக் காரணம் நாம் நமது விவசாயத்தை சுமார் 2000 வருஷங்களுக்கு முன்னிருந்த நிலைமைபோலவே இன்னும் கடைபெற்று வருமாறு செய்து வருவதுதானென்னப் புலப்படுகிறது. நம் நாட்டில் ஒரு ஏக்கர் நிலத்தில் ரூ. 100 வரும்படி வருமானம் மேல் நாட்டில் ரூ. 1000 வருமானம் வரக்கூடிய வழியில் உழைத்து வருகின்றனர். அதன் காரணம் யாதெனில்: மேல் நாட்டினர்களின் விவசாயம், முயற்சியையும், அறிவையும் கொண்டு நடைபெறுவதாகும். நம்மவர்களின் விவசாயம் மூடப்பழக்க வழக்கத்தையும் குருட்டு நம்பிக்கையையும் கொண்டு நடைபெற்று வருவதேயாகும்.

மேல் நாட்டினர் பூமிக்கு எத்தகைய பயிரிடுவதென்பதிலும் எந்த விதமான பயிருக்கு எத்தனை எருயிடுவதென்பதையும் கவனித்து விவசாயத்தை நடத்துகின்றனர். ஆஸ்திரேலியாவில் பழ விவசாயக்காரர்கள் புளிப்பான பழங்கள் காய்க்கும் மரத்தை இனிப்பாகவும், தூற்றுக்கணக்காகக் காய்க்கும் மரங்களை ஆயிரக்கணக்காகக் காய்க்கும்படி செய்யவும், சொற்ப நாட்களில் கெட்டுப்போகும் பழங்களை அதிக நாள்கள் கெடாமலிருப்பதற்காகவும், ரசாயன சாஸ்திரப்பிரகாரம் திராவகங்களை செலுத்தி விருத்தி செய்கின்றனர். ருஷியாவில் ரசாயன முறைப்படி இயற்கை சாதனங்களைக்கொண்டு கோதுமைகளை அதிகமாக விளைவிக்கச்செய்து இதர தேசத்தினருடன் போட்டி போடுகின்றனர். அந்நாட்டினர் பசியின்றிப் புசிப்பதற்குப் போதிய கோதுமைகளை அரசாங்கத்தார் களஞ்சியங்களில் சேகரித்து வைக்கின்றனர். ஆனால் துர் அதிர்ஷ்ட இந்தியாவிலோ பரந்த பூமிகளெல்லாம் பார்க்க பாழடைந்திருக்கிறது. எனவே நம்நாட்டு விவசாயத்தை விருத்தி செய்வதற்கும் நம் மாணவர்களுக்கு அதில் பயிற்சியை உண்டுபண்ணுவதற்கும் ஏதுகரமான விவசாயக்கலாசாலைகளை கிராமங்களில் ஏற்படுத்தி அதில் போதிய பயிற்சியை நம்மவர்களுக்கு ஊட்டத்தக்க திட்டத்தை இம்மகாநாட்டில் கவனிக்கக்கோருகிறேன்.

#### சமுதாயம்.

இது காறும் நடைபெற்று வந்த நமது மகாநாடுகளில் சமுதாய சீர்திருத்த விஷயமாக எவ்வளவோ பேசப்பட்டுவந்தும்பகுத்தறியும்தன்மையும் பரோபகார சிந்தனையுமுடைய வாலிபர்கள் சமுதாய சீர்திருத்தத் துறையிலே தங்கள் செய்யவேண்டிய கடமையாது என்பதை உணர்திருந்தும், கல்வி, ஈகாரீகம், கைத்தொழில், விஞ்ஞான ஆராய்ச்சி முதலியவைகளின் அணுவளவேனும் ஏற்படாதிருந்த முற்காலத்தில் கையாளப்பட்டு வந்த பழைய பழக்க வழக்கங்களையே இன்றுவரை அனுசரித்து வருகின்றார்கள். இதர தேசத்திலுள்ள சமூகத்தவர்களின் முன்னேற்றத்தையும் நம்மவர்களின் நிலையையும் ஒப்பிட்டுப்பார்ப்போமானால்மலைக்கும், மடுவுக்குமுள்ள வித்தியாசத்தைவிட அதிகப்படியானதென்பது தெற்றென விளங்கும்.

தேச விடுதலைக்கு இன்றியமையாதது சமூக முன்னேற்றமும், சமூக முன்னேற்றத்திற்கு அடிப்படையானது பெண்கள் விடுதலையும் என்பது அறிஞர்களின் துணிபு. ஆனால் நாம் மட்டுமல்ல நமது நாட்டிலேயே பெரும்பாலும் பெண்களை பாவப் பிறப்பென்று கருதி அவர்களை அறிவற்றவர்களாக்கி பல வகைகளிலும் கொடுமைப்படுத்தி வருகின்றார்கள். ஆணுக்கோர் நீட்டம்பெண்ணுக்கோர் சட்டம் வகுக்கப்பட்டிருக்கும் பழக்கத்தை விடுத்து நமது குல சிறுமிகளுக்கு சொத்துரிமை வழங்கியும், அறிவுக்கண்களை திறந்தும்அஞ்ஞான நிலைமையை அகற்றுவதோடுகின்னஞ் சிறு வயதில் அறியாப்பருவத்தில்விதவைக்கோலமானவர்களின் துயரை நீக்க சென்ற பிறையாறு மகாநாட்டில் நிர்மானித்துள்ளபடி விதவைகளை மறுமணம் செய்ய நம்குல வாலிபர்கள் முன்வரவேண்டும். கலியாணம் என்னும் அர்த்தத்தையே அறிந்து கொள்ள சக்தியற்ற சிறுமிகளுக்குத் திருமணம் செய்துவைக்கும் கொடிய பழக்கத்தை நிறுத்தி சாரதா சட்டப்படி பக்குவ மெய்தியவர்களுக்கே காதல் மணம் செய்வித்தும், நம் குல சிறுமிகளுக்கு கல்வி, கைத்தொழில் முதலியவற்றை புகட்டியும் நமது பெண் சமூகத்தை முன்னணிக்குக் கொண்டுவரவாலிபர்களாகிய நாம் முயற்சிக்க வேண்டும்.

எல்லாம் வல்லவனென்றும் ஏகபரம்பொருளென்றும், நம்மை சிருஷ்டித்து ரக்ஷிக்கின்றவனென்றும்சொல்லப்படும் கடவுள் பெயரால் செலவிடப்படும் ஏராளமான பொருட்சிலவை சுருக்கி அதைக்கல்வி யபிவிருத்திக்கும் கைத்தொழில் முன்னேற்றத்திற்கும் செலவிடவேண்டுவதோடுகூடவே நம்மவர்களைக் கொண்டே நமது ஆலயங்களில் ஆராதனை முதலியவைகள் செய்விப்பதற்கான காரியங்களில் நமது வாலிபர்கள் தங்கள் கவனத்தைச் செலுத்துவதுடன் சுப அசுப காரியங்களில் பகுத்தறிவையும் சிக்கனத்தையும் கைக்கொண்டு நடக்க வேண்டும். எத்தனை ஆயிரக்கணக்கான வருடங்களாக கையாளப்பட்டு வருவதேயாயினும், அது அறிவிற்கும் அனுபவத்திற்கும் முற்போக்கிற்கும் ஒத்துவராததாயிருக்குமாயின் அத்தகைய மூட பழக்க வழக்கங்களையும், குருட்டு நம்பிக்கைகளையும் அர்த்தமற்ற சடங்குகளையும் நம் சமூகத்தினர்களிடமிருந்து ஓட்டுவிப்பதற்கான வழிகளில் முயற்சிக்கவேண்டும். நம்மவர்களுக்குச் சொந்தமான ஆலயம், கல்விக்கழகம், சத்திரம் முதலியவைகளில் ஜாதகத பேதமின்றி சகலருக்கும் சமத்துவம் வழங்குவதற்கான நன் முயற்சியிலும் நம்மவர்களுக்குள்ளாக இருந்துவரும் தென்னாட்டார், வடநாட்டார், கிறிஸ்தவர், இந்து, முதலாளி, தொழிலாளி, உயர்ந்தன், தாழ்ந்தவன் என்னும் பேதாபேதங்களையும் ஒழித்து சமுதாய சமத்துவத்தை நிலைநாட்ட நமது வாலிபர்கள் முன்வரவேண்டும்.

#### அரசியல்.

சமுதாய சீர்திருத்தத்துறையில் முன்னணியில் நிற்கவேண்டுமென விரும்பும் நம்மவர்கள் அரசியல் துறையிலும் முற்போக்கடைய வேண்டுவது அவசியமாகும். ஆதலால் இனி வரப்போகும் புதிய அரசியலில் சீர்

தொடர்ச்சி 16ம் பக்கம் பார்க்க.

# மதம் மக்களுக்குச் செய்த நன்மை என்ன?

## மதத்தை நான் ஏன் மறுக்கிறேன்?

(தோழர் பெட்ரண்ட் ரஸ்ஸல் M. A., F. R. S.)

(முன் தொடர்ச்சி)

(1) மதத்தைப்பற்றிய மறுப்புகள் இரண்டு உண்மைகளை ஆதாரமாய் வைத்து எழுதப்படுவதாகக் கூறலாம்—ஒன்று அறிவின் சம்மந்தமான உண்மை; மற்றொன்று பழக்க வழக்கங்களுக்கு அடிப்படையான கொள்கைகளின் சம்மந்தமான உண்மை.

அறிவின் சம்பந்தமான மறுப்பு என்னவெனின்,—மதத்தை மக்கள் நம்பவேண்டுமென்பதற்கு மதவாதிகள் கூறும் அத்தாக்ஷிகள் பதத்தறிவுக்கு பொருத்தமாறு இல்லை என்பதேயாகும். மதத்தின் பெயரால் தழுவப்படும் பழக்க வழக்கங்களைப் பற்றிய மறுப்பு எவ்வகையானதெனின், மதங்கள் என்பவை—மனிதர் மிருகங்களைப்போல் மனிதரை மனிதர் கொன்று தின்றுகொண்டு காடுமேடுகளில் நிர்வாணமாய் அலைந்து திரிந்தகாலத்தில் ஏற்பட்டனவாதலின், அவைகூறும் கொள்கைகள் அனைத்தும் சகோதரத்வம் சாதர்மம் பொதுவுடமை முதலிய தற்கால நாகரீகக் கொள்கைகளுக்கு முற்றிலும் மாறுபட்டதாகவும், அக்காலத்திய மிருகத்தன்மையையே மேலாகப் பறை சாற்றுவதாகவுந்தான் இருக்கும் என்பதாம்.

(2) பகுத்தறிவின் சார்பிலிருந்து எழும் எதிர்ப்புகளை இன்னும் விளக்கமாக எடுத்தாராய்வோம். பிரத்தியக்ஷ பிரமாணங்களையே பெரிதென மதிக்கும் தற்கால நாகரீக உலகம், மதக்கொள்கைகள் உண்மையா பொய்யா? என்பதைப் பொருட்படுத்துகிறதில்லை; பின்னர் எதைக் கவனிக்கிறதெனின் மதம் நமக்கு விளைவிப்பது நன்மையா தீமையா? என்பதையே. ஆனால் இந்த இரண்டு விஷயங்களும் ஒன்றை யொன்று சார்ந்ததாகவே இருக்கின்றன. இந்த இரண்டு கேள்விகளுக்கும் விடைஒன்றைத்தான்கூறப்படலாமே யொழிய, ஒன்றை மறுத்து மற்றொன்றிற்கு விடை கூறுதல் பகுத்தறிவுக்கு ஏற்றதாகாது.

இதனாலே தான், நாம் கிறிஸ்துவராக இருக்கும் போது எவ்வெவற்றை நன்மைகள் என்பதாகக் கருதுகின்றோமோ, அவைகளையே நாம் கிறிஸ்துவரல்லாதாராக மாறும்போது நன்மைகளாக நம்புவதற்கு இடமில்லாமற் போகின்றது. நன்மை யென்றால் அது எக்காலத்தும் எந்த மதஸ்தருக்கும் ஒரே தன்மையுடையதாகத்தானே இருக்கவேண்டும். எனவே, கிறிஸ்து மதம் நன்மையானதாகவும், அம்மதத்தின் பற்றை விட்டவர்களுக்கு தீமையாகவும் இருக்கக் காரணம் என்ன?

இதனால், தீமைகளை நன்மைகளாக்கக் கருத வேண்டிய நிலைமையில் மதம்மக்களை மயக்கி பலவந்தப்படுத்தி வருகிறதென்பது விளங்குகிறதல்லவா? தவிர, ஒருவன் ஒருசில கொள்கைகளை அதற்கு ஆதாரமான அத்தாக்ஷிகள் இருந்தாலும் இல்லாவிட்டாலும் கட்டாயம்நம்பியேதீரவேண்டுமென்ற நிர்ப்பந்தம் ஏற்படுகிற போது, அவ்விதப்பற்றுதலால், அவனுக்கு அக்கொள்கைகளுக்கு மாறுபட்ட ஆதாரங்கள் வெளிப்படும்போது அவற்றின் மீது குரோதமும், அவ்விதமாறுபட்ட ஆதாரங்களில் உள்ள உண்மையை ஓர்ந்து பாராமல் கண்மூடித்தனமாக இருக்கவும் அது அவனைச் செய்கின்றது. எனவே இவற்றிலிருந்து மாந்தரின் அறிவை அழித்து, உணர்ச்சியை ஒடுக்கி கண் மூடி வழக்கத்திற்கு நிர்பந்தப்படுத்தி வருவது மதம் தான் என்று அழுத்திக் கூறுவதில் தப்பிதம் என்ன இருக்கிறதென்பதை ஆராய்ந்து தெளிவீர்களாக.

3. நவீன ஆராய்ச்சியின் பயனாக நாம் அறிந்த விஞ்ஞான தத்துவங்களில் (Scientific truths) பிரபலபற்றுதலிருக்க வேண்டியதே, நமது முன்னேக்கத்திற்கு அத்யாவசியமெனினும்,—ஒருவனை அவன் சில தத்துவங்களை கட்டாயம் நம்பித்தான் ஆகவேண்டுமென்றமதத்திட்டம்நிர்ப்பந்தத்திற்கு உள்ளாக்கி விட்டால் மேற்குறிப்பிட்ட விஞ்ஞான தத்துவங்களை அங்கீகரித்தல் என்பது அவனுக்கு எவ்வாறு இயலும்? அதனாற்றான் மதம் மக்களுக்கு நன்மை பயக்குமா? என்ற கேள்வியை ஆராய்வதற்கு முன் மதம் உண்மையா? என்பதைப் பரிசீலனை செய்தாக வேண்டுமென்பதாக முன்னர் கூறினேன். கிறிஸ்துவர்களுக்கும், மகமதியர்களுக்கும், யூதர்களுக்கும் மதம் என்பதில் உள்ள அடிப்படையான தத்துவம் கடவுள் உண்டு எனும் கருத்தேயாகும். மதத்தின் ஆதிக்கம் மேலோங்கியிருந்த அந்நாளிலே மட்டும் "கடவுள்" என்ற சொல்லிற்கு ஏதோ ஒரு தாத்பரியம் இருந்ததாகக் கொள்ளலாம்; ஆனால் இப்போதோ வெனின் பகுத்தறிவு வளர வளர, உண்மை விளக்கம் ஓங்க ஓங்க, கடவுள் என்ற பதத்தின் அர்த்தம் படிப்படியாக மறைந்து கொண்டே போய் கடவுள் என்ற பதத்திற்கே ஒரு அர்த்தமுமில்லாத நிலைமைக்கு—சொல்ல முடியாத நிலைமைக்கு இப்பொழுது வந்துவிட்டது. இங்கு தர்க்கத்திற்கென ஓர் உதாரணத்தை எடுத்து விளக்குவாம். கடவுள் என்ற பதத்தை விளக்க மாத்யூ ஆர்னல்ட் (Mathew Arnold) என்பார் கூறியுள்ள தாத்பரியத்தைப் பார்ப்போம்.

"மனிதசக்திக்கு மேம்பட்ட சரியான காரணங்களுக்கு ஆதாரமான ஓர் சக்தி"—"A Power not ourselves that makes for righteousness என அவர் கடவுளை விளக்குகிறார். அவருடைய இந்த விளக்கத்தை விவரிக்கவே இன்னும் பல விளக்கங்கள் தருவிக்க வேண்டியிருக்கின்றன. இவ்விதம் அவரது விளக்கத்தின் அர்த்தமின்மை இன்னும் நன்றாக வெளிப்படுமாறு நான் கூறும் விஷயத்தை நன்கு கவனியுங்கள். இந்த நீண்ட நிலவுலகில் நாம் அநுபவிக்கும் காரணகாரியங்களைத் தவிர, வேறு உலகங்களில் ஏதாவது நமக்கு வேலை இருக்கின்றதா? என்பதை அறிவின் பிரகாசத்தில் நீங்கள் விசாரணை செய்தால் அவரது விளக்கத்தின் நிலைமை வெட்ட வெளியாகிவிடும். இதே மாதிரியாகத்தான் கடவுள் என்ற பதத்திற்கு வெவ்வேறு-ஒன்றிற் கொன்று மாறுபட்ட-மூலைக்கே புரட்சியைக் கொடுக்கக் கூடிய-அறிவிற்கே எட்டாத பொருள்களை வெகு நளினமாகக் கூறி வருகின்றார்களே தவிர வேறு உண்மையை விளக்கும் உரையை தெள்ளிதில் விளக்கும் வண்ணம் பகர்கின்றார்களில்லை!

4. மதவாதிகள் மதத்தின் சார்பாகக்கூறும் தர்க்கம் சுருக்கமாகக் கூறவேண்டுமானால் இதுவேயாகும்:— "நானும் எனது நண்பர்களும் எவ்வளவு அபார புத்திநுட்பமும் நன்னடத்தையும் உடையவர்களாக இருக்கின்றோம் பாருங்கள். இவ்வளவு புத்திநுட்பமும் மேலான நடத்தையும் ஒருவித காரணமும் இல்லாமல் ஏதோ அகஸ்மாத்தாக உற்பவித்ததென நீங்கள் நினைத்து விடவேண்டாம். எங்களைப் போன்ற வரைக் கூட சிருஷ்டி செய்யக்கூடிய அத்தனை அபார சித்த சக்தியும் மேலான குணநிசயங்களையும் ஒருங்கே கொண்டுள்ள ஓர் பரம புருஷன் கடவுள் இருந்தாலொழிய இந்த உலகமாகிய யந்திரத்தினின்றும் எங்களை உற்பத்திசெய்தல் முடியவே முடியாது" என்பதேயாகும். இவர்கள் கூறும் இந்தத் தர்க்கத்தில் எவ்வளவு உண்மை இருப்பதாக நினைத்து அவர்கள் கூறுகின்றார்களோ அந்த உண்மையை இவ்வுலகினின்று என் அறிவிற்குப் புலப்படத் துணிகின்றதில்லை யென்பதை வெளியிட மிகவும் விசனிக்க வேண்டியவனாகவே இருக்கின்றேன். என்? இந்த உலகமோ மிகமிகப் பரந்ததோர் சோனமாகும்.

எட்டிங்டன் [Eddingtn] நாம் நம்பினால், அவர் கூறுவதுபோல் இவ்வுலகத்திலே மானிடப் பிறவியை விட இதற்கு மேலாக வேறெந்தப் பிறவியும் இருக்கின்றது என்பதாக நினைக்கவோ இடமில்லை. இவ்வுலகம் [Earth] அடக்கிக் கொண்டிருக்கும் பதார்த்தங்களின் [Matter] தொகுதிக்குள்ள தாரதம்மியத்தை ஒப்பிட்டுப் பார்ப்பவர்களுக்கும் அதன் வித்தியாசம் இத்தகையதென்பது நன்கு விளங்கும். இம்மனிதனது உடலில் அடங்கியுள்ள அணுக்களே போல் எத்தனையெத்தனை கோடானகோடி அணுக்கள் இந்த நிலவுலகில் அடங்கியிருக்கின்றன பாருங்கள். எனவே சற்று நன்றாகக் கவனியுங்கள்: இத்தனை கோடானகோடி அணுக்களிலிருந்து இத்தகைய மேலான அறிவாற்றலுடைய ஓர் மகன் உற்பவிப்பதென்பது சாதாரணமாக அகஸ்மாத்தாக நேரிடக்கூடாத சம்பவம் என்பதாக நினைக்க இடம் இருப்பினும்,—அத்தனை கோடானகோடி அணுத்திரள்களில் இத்தகைய அபாரசக்திகளையுடைய ஒரு சில அணுக்களாவது இருக்கக்கூடும்—என்பதாக நினைக்கவும் ஆதாரம் அங்கேயே இருக்கின்றதன்றோ! எனவே அவர்கள் கூறும் தர்க்கத்திற்கு ஆதாரமான உண்மையின் இன்மை நன்கு விளங்குதல் காண்க.

5. மேலும், இந்நிலவுலகின் நற்பிரஜையாகிய இந்த மானிடப் பிறவியை நான் ஒரு பிரமாதமாகவும் கருதுகின்றதில்லை என்? இங்கு காணும் சராசரப் பொருள்களிற் காணும் அதிசயங்களுக்கெல்லாம் தலைமை பூண்டு நிற்கும் மானிடப் பிறவியில் இன்னும் மேலான சக்திகளும் அதிசயங்களும் இருக்கவேண்டும்—என்பதே எனது அபிப்பிராயம்.

ஆனால் நாம் கண்கூடாகக் காணும் தற்போதைய மாந்தர் நிலை அத்தகைய நான்-நினைக்கும் நிலைக்கு மிகவும் தாழ்ந்தே இருக்கின்றது. எனினும், இப்போதுங்கூட என்னைவிட மிகச் சிறந்த மனிதர்களும்-என்? என் அறிவிற்கும் எட்டாத அத்தகைய அபார சக்தியையுடைய மக்களும் இவ்வுலகில் அநேகர் இருக்கின்றார்கள் என்பதையும் நான் கண்கூடாகவே கண்டுள்ளேன். அத்தகைய புருஷ சிரேஷ்டர்களின் தனித் தராதரத்தை ஒருபுறமிருக்க, மதவாதிகள் பறை சாற்றுவது போல் என்றும் சர்வ வல்லமையும் நிறைந்த தன்மையுடைய ஓர் தனி முதற் கடவுள் இருந்திருப்பின், அவர் ஆதிகால முதல் இந்நாட் பரியந்தம் சர்வ வியாபகமாகச் சதா உழைத்து வந்திருப்பது உண்மை யெனின்,-மக்கள்

தொடர்ச்சி 16-ம் பக்கம் பார்க்க.

# குடியானவர்கள் துயரம். கடவுளைக்கண்டது யார்?

(C. S;—B. A.)

தென்னாட்டில் குறிப்பாக தென்ஞாட்டில் குடியானவர்கள் நிலை எப்படி உளது என்பதைப்பற்றி அறிய விரும்புவோர் கீழ்க்கண்ட வழக்கைப் படித்துணர்க.

தஞ்சை ஜில்லா, மன்னார்குடி தாலூக்கா துளஜேந்திரபுரத்தில் மிராசுதார்கள், இனம்தார்கள், பிராமணர்கள் அந்த கிராம மஜரா குச்சிப்பாளையம் மனைக்கட்டுகளில் குடியிருப்பவர்கள் குடியானவர்கள்; அம்பலக்கார வகுப்பினர்.

குறிப்பிட்ட வழக்கில் வாதி தியாகராஜ சாஸ்திரி; மிராசுதார்களில் ஒருவர். பிரதிவாதி குடியானவர் காத்தான் அம்பலக்காரர் என்பவர்.

வாதியின் மனைக்கட்டில் காத்தான் குடி இருந்து வருகிறார். வாதிதானே உட்குடி என்றும், பரம்பரை பாத்யம் உடையவர் என்றும், காத்தான் புறக்குடிதான் என்றும், அவர் வழக்கமாக செய்துவந்த பணிகளை செய்ததால் மனையை விட்டுவிடவேண்டும் என்றும் வழக்காடினர்.

வழக்கமாக செய்துவந்த பணிகளாவன:—

நிலத்தை உழல்
பந்தல் போடுதல்
சந்தனம் அரைத்தல்
தீவட்டி பிடித்தல்
விரகு உடைத்தல்
பாடைக்கு மூங்கில் வெட்டல்
செத்த ஆடுமாடுகளை புதைத்தல்
முதலிய மற்றும் பல.

வழக்கை விசாரித்த நீதிபதி நிலத்தை உழுதுவரும் வரையில்தான் மனைக்கட்டுகளில் குடி இருக்க உரிமை உண்டு என்றும், காத்தான் நிலத்தை உழாததால் மனைக்கட்டை விட்டு வெளியேறவேண்டியதென்றும் என்று கண்டு வாதியின் பக்கம் தீர்ப்பளித்த போதிலும் தீர்ப்பில் கூறுவது பின்வருமாறு.

"தம் மனைக்கட்டுகளில் குடி இருந்துவரும் அம்பலக்காரர்களை இந்த மிராசுதார்கள தம் அடிமைகளாக கருதுகின்றனர். என், வாதி அவ்வித்தம் தெளிவாகக் கூறவும் வெட்கப்படவில்லை. தங்களை பிராமணர்கள் என்று சொல்லிக்கொள்வதால் உயர்ந்தஞானமும், ஜனசமூகத்திடம் மிகுந்த அன்பும் உடையவர்களாய் இருப்பார்கள் என்று எதிர்பார்க்கப்படும் இம்மிராசுதார்கள் இக்குடியானவர்களை தம் அடிமைகளாகப்பாவிப்பது ஆச்சரியமாய் இருக்கிறது. இப் பிராமணர்கள் தம் குடிகளை கேவலம் ஜங்கமப்பொருளாகவும், விலக்கு வாங்கப்பட்ட அடிமைகளாகவும் நினைப்பதை என்னென்பது! இம் மனப் பான்மையே அசிங்கிதமாய் இருக்கிறது. ஆயினும் இந்த நியாயமில்லாத வாதத்தை பிராமணர்கள் ஒருவர் பின் ஒருவராய் முன்வந்து ஆதரித்து சாட்சி கொடுக்கின்றனரே! அவ்வேலைகளை அம்பலக்காரர்கள் செய்யார்கள் என்று நான் கூறவில்லை. அம்பலக்காரர்களை கூலி கொடுத்தால் அப்பணிகளை செய்வதாகக் கூறுகின்றார்கள். அவர்கள் ஏழைகள் வயிற்றை வளர்க்க அவ்வேலைகளை செய்தல்கூடும். ஆனால் அப்பணிகளை ஆற்றியே தீரவேண்டும் என்றும், மறுத்தால் மனைக்கட்டுகளை விட்டுவிடல்வேண்டும் என்றும் சொல்வதை அம்பலக்காரர்களும் இன்ப துன்பங்களை துரக்கூடிய மக்கள் என்றும் அவர்கள் கேவலம் அசையும் பொருள் அல்லவென்றும் உணர்ந்த எவரும் இக்காலத்தில் ஆமோதிக்க முடியாது"

இந்த தீர்ப்பை இம்மாதம் 15-ந் தேதி அன்று நீதிபதி வெளியிட்டார்

நீதிபதி குறிப்பிட்டவாறு படித்த பிராமணர்களை இவ்வாறு மனப் பான்மை கொண்டிருப்பின் படிப் பறியாத வேளாள பிரபுக்களைப்பற்றி வாசகர்களை ஊகிக்கவேண்டுகிறோம்.

## தென்னை சுயமரியாதை இளைஞர் மன்றம்.

ஷிமன்றத்தின் வாந்திக்கூட்டம் இரண்டாவது தடவையாக 25-12-32 ஞாயிற்றுக்கிழமை மாலை 2மணிக்கு கூடப்பட்டது. அதுசமயம் தோழர். தர்மதீரர் அவர்கள் தலைமை வகித்தார். மன்றத்தின் அங்கத்தினர்களில் ஒருவராகிய தோழர் கே. கிருஷ்ணசாமி "சுயமரியாதையும், இளைஞர் கடமையும்" என்பது பற்றி சொற்பொழிவு நிகழ்த்தினர். ஒரு கிருபர்

## ஓர் பெரியார் மரணம்.

அருப்புக்கோட்டைத்தாலூகா சுக்கிலநத்தம் கிராமப் பிரபல மிராசுதாரும், சமூக சேவையே பெருஞ்சேவையெனமதிப்பாரும், பார்ப்பனவலையில் சிக்குண்டு மூடநம்பிக்கையில் ஆழ்ந்துகிடக்கும் தன்கள் வகுப்பினிடையே சுயமரியாதை சுடரைக் கொளுத்தி தம் யேகபுத்திரர் வெங்கசாமியாருக்கு சுமார் நான்கு வருஷங்களுக்கு முன்னுல் இயக்கத்தோழர் ஈ. வெ. ராமசாமியாரை அழைத்து வந்து திருமணமுடித்து இருவரைக் கல்ஜோடிபோன்ற பேரன்மார்களை கண்குளிரக்கண்டு வாழ்ந்த பெரியார் துரைச்சாமிரெட்டியார் 1932ஞடிசம்பர்மீ25த்தேதி காலகதியடைத்து விட்டார். என சுயமரியாதசங்க காரியதரிசி எழுதுகிறார்.

(திருமங்கலம்—மணிமாறன்)

கடவுளோடு போர் புரிய வோ, கடவுளைப் பற்றி ஆராய்ச்சி செய்யவோ, அல்லது கடவுள் இல்லை யென்று நிரூபிக்கவோ சுயமரியாதை இயக்கம் எழுந்ததல்ல. கடவுளைப் பற்றியே கவலை வேண்டாம் என்று மக்களுக்கு எடுத்துச் சொல்லி மக்களிடத்துள்ள குருட்டு நம்பிக்கை, மூடபக்தி முதலியவற்றைப் போக்கி, மக்கள் யாவரும் பகுத்தறிவுள்ளவர்களாய், யாவரும் சமத்துவமாக வாழ்வதோடுசுயேச்சையுள்ளவர்களாய் சுதந்திர நாட்டில் வாழவே சுயமரியாதை இயக்கம் ஆரம்பிக்கப் பட்டு அதற்காகவே உழைத்து வருவதாகும். ஆனால் ஏமாற்றிப் பிழைப்பவர்கள், பாமர மக்களின் உழைப்பினுல் தன் வாழ்வை நடத்திக் கொள்ளும் வைதீகர்கள், புரோகிதர்கள் முதலிய யாவரும் இவ்வியக்கத்தைக் கண்டு வெருண்டு இவ்வியக்கத்தின் மேல் சேறி விழுந்தனர். "நாங்கள் முன்னோர்கள் எழுதி வைத்த ஆகமங்கள் சாஸ்திரங்களின்படியே நடப்போம்" என்றனர் அதற்கு பதில் சொல்லுகையில் மக்களுக்குக் கேடுண்டாக்கும் அச்சாஸ்திரங்களை, ஆகமங்களை அடியோடு அழியுங்கள்" என்று சுயமரியாதை இயக்கம் விளம்பியதுடன் அச்சாஸ்திரங்களின் வண்டவாளங்களையும், சூழ்ச்சிகளையும் விளக்கமாக எடுத்துக் காட்டிற்று. அதைக்கண்டசோம் பேரிக் கூட்டம் "அவைகள் ஒழிந்தால் மதங்கள் ஒழிந்து விடுமே" என்று கூப்பாடு போட்டன. அதற்குப் பதில் சொல்லும் முறையில்,

"மக்களுடைய முன்னேற்றத்திற்கும், ஒற்றுமைக்குத்தடையாயுள்ள அம்மதங்களும், அவற்றின் ஆதாரங்களோடு-சாஸ்திரங்களோடு மறையட்டும்" என்று சு. ம. இயக்கம் இயம்பவே சுயமரியாதை இயக்கத்தார்கள் "மதத்துரோகிகள்" என்று கூச்சலிட்டதோடு, "மதம் கடவுளால் ஆக்கப் பட்டது அதைக் குற்றம் சொன்னுல் கடவுள் தண்டனைக்கு உட்பட வேண்டும்" என்று சோம்பேரி மடங்கள் பூச்சாண்டி காட்டின. அதாவது தங்கள் பாரத்தைக்கடவுள் தலையில் போட்டனர். இந்தச் சமயத்தில் நான் கடவுளைப் பற்றி சுயமரியாதை இயக்கம் தனது அபிப்பிராயத்தைத் தெளிவாய் வெளிப்படுத்த வேண்டிய அவசியம் வந்து விட்டது.

"மக்களுடைய முன்னேற்றத்திற்கும், அவர்களது சமத்துவ வாழ்விற்கும் அறிவு வளர்ச்சிக்கும் ஒற்றுமைக்கும், சமதர்ம வாழ்விற்கும் தடையாக நிற்கும் ஜாதி, சடங்கு, சாஸ்திரம், மதம் முதலியவைகளைக் கடவுளே உண்டாக்கியவரென்றுல்அவற்றிற்கு கடவுளே காரணமானுல் கிளைகளுடன் சுற்றங்களுடன் ஒழியவேண்டியதே யாகும்" என்றும், "சுயமரியாதை இயக்கம் சமதர்ம இன்ப வாழ்விற்கே உழைக்கும்" என்றும் அதனுல் கடவுள்பாடு திண்டாட்டமானுலும் கவலை கிடையாது என்றும் ஒரு கடவுளுடைய வாழ்விற்காக பல கோடிமக்கள் கஷ்டப்பட முடியாது" என்றும் சுயமரியாதை இயக்கம் புகன்றதோடு "அப்படிப்பட்ட கடவுள் என்ற வஸ்து யாங்குளது? அதன்வேலை என்னவென்றும் ஆராய்ச்சிசெய்து "கடவுள்" என்பதுது ஒரு கற்பனைச் சொல் என்னும் உண்மை கண்டு, தக்க ஆதாரத்தோடு, வீரத்தோடு வெளியிட்டது.

பாபம்! என் செய்வார்கள்? கடவுளின் பேரால், புராணத்தின் பேரால் மதத்தின் பேரால், சாதியின் பேரால் கடவுள் செயலின் பேரால்பிழைத்து வந்தவர்களின் பிழைப்புக்கு மோசம் வரவே பதறினர்கள். கூல்திகக் கூட்ட மென்று நம்மை எகினர்கள். கடவுளையும், புராணத்தையும், சடங்கையும் நம்பும் தலைவர்களடங்கிய தேசிய சபையில் மொய்த்தார்கள். "மத நடு நிலை" (Religious neutrality) தீர்மானம் நிறை வேற்றினர்கள். நாஸ்திகத்தைப் பரப்பும் கோஷ்டியாரை நசுக்கும் படி அரசாங்கத்தைக் கூட தூண்டவும் ஒரு சிலர் தளம்பினர். காங்கிரசிடம் கூலி பெற்று காலித்தனமும் செய்தார்கள்.

என்ன செய்தாலும், யார் எதிர்த்தாலும் உண்மையையும், மக்களின் சமதர்ம வாழ்விற்கு வேண்டியனவற்றையும் ஆண்மையோடு நமதியக்கம் மறைக்காமல் சொல்லியே வருகிறது, மற்ற நாட்டில் சமதர்ம வாழ்விற்கு முட்டுக் கட்டையாக முன் வந்த மதம், கடவுள் அவைகளின் இல்லிடம் மற்ற யாவும் எப்படி அழிந்தொழிந்ததோ அதுபோன்றே நமது நாட்டிலுள்ள அம்மாசுகள், மறுவுகள் எல்லாம் வெகு விரைவில் அழிக்கப் பட்டு விடும் என்பது உறுதி கடவுளைப் பற்றி 'பிளேட்' கொடுப்பதாலும். கடவுளுக்கு 'ரத்ன கிரீடம்' செய்து வைப்பதாலும், புதுப்புது கோவில்கள் பிரதிஷ்டை செய்வதாலும், கடவுளிடம் ஹரிஜனங்களை கொண்டு போய விட்டு காவல்வைப்பதாலும் கடவுள் பிழைக்க மாட்டார். கடவுளை நேரில் கண்டேன் என்றும், கடவுள் எனக்குக்குக் கட்டளையிட்டார் என்றும் தோழர் காந்தியார் சொல்லுவதால் எல்லாம் இனி கடவுள் உலகில் பிழைத்துக் கிடக்கப்

தொடர்ச்சி 15ம் பக்கம் பார்க்க.

# மதத்தைப்பற்றி லெனின் எழுதியது.

6-ம் அத்தியாயம்.

## A. M. Gorky க்கு இரண்டு கடிதம்.

இதில் கடவுளைப்பற்றிய தத்துவார்த்தங்களுக்கு சமாதானம் இருக்கிறது.

[S. R. & E. V. R. மொழிபெயர்ப்பு]

(சென்ற வாரத்தொடர்ச்சி)

டால்ஸ்டாயின் எண்ணங்களில் கண்ணாடியில் தெரிவதுமாதிரி நமது குடியானவர்களின் எழுச்சியின் பலவீனங்களுடையவும் குறைகளும் சாயல் தெரிகின்றது. அந்தச் சாயலில் காட்டாண்மைக் கட்டுப்பாட்டிலிருந்த கிராமங்களின் வலுக் குறைவும், சிக்கன வாழ்வு கடத்தும் குடியானவன் வாழ்க்கையில் பதிந்திருக்கும் கோழைத்தனமும் வெளியாகின்றது,

1905, 1906 வருஷங்களில் நடந்த சிப்பாய் கலகத்தைக் கவனிப்போம். இந்தக் கலகத்தில் புரட்சி யுத்தத்தில் சேர்ந்தவர்கள் குடியானவர்களுக்கும், தொழிலாளர்களுக்கும் இடையே உள்ள வருப்பைச் சேர்ந்தவர்கள். ராணுவத்தில் தொழிலாளர்களின் துணை மிகவும் சிறுபாகமாகையால் குடியாவின் மற்ற பாகங்களில் ஏற்பட்ட அளவு ஒற்றுமை ராணுவத்தில் கிளப்பிய இயக்கத்திற்கு கிடைக்கவில்லை மேலும்தொழிலாளர் சமூகம் முழுவதும் திடீரென சோஷ்யல் டிமாக்கரிட் கக்ஷியை சேர்ந்தபொழுது ஏற்பட்ட கக்ஷி வகுப்பு உணர்ச்சியும்ராணுவக் கலகத்தில் ஏற்படவில்லை. ஆனால் இந்தக் கலகங்கள் வெற்றி பெறுவதற்குக் காரணம் ராணுவ உத்தியோகஸ்தர்கள் கலகத்தில் தலைமை வகிக்கவில்லை என்று நிரூபிப்பது தவராகும். நரோத்னயவோலயா காலத்திற்முப்பிறகு நமது புரட்சியில் ஏற்பட்ட தீவிர முற்போக்கைக் கவனித்தோமானால் இந்த முற்போக்குக்குக் காரணம் பழய தாராள நிலச்சுவான்தார்களும், "தாராள" உத்தியோகஸ்தர்களும் யாரை "அறிவற்ற மாடுகள்" என்று கூறி அவர்களுடைய சுதந்திரத்தைக் கண்டு பயந்தார்களோ அவர்களே இப்பொழுது அந்த உத்தியோகங்களுக்குவிரோதமாக ஆயுதமெடுத்தும் சிப்பாய்க்குக் குடியானவனிடம்அனுதாபம்உண்டாயிற்று.நிலம்என்று சொன்னமாத்திரத்தில் சிப்பாய்களுடைய கண்ணில் ஒளிவிசிற்று.

ராணுவத்தில் அனேக சமயங்களில் சிப்பாய்கள் இஷ்டப்படி நடத்த சமயங்கள் வாய்த்தன. ஆனால் அந்தச் சமயங்களைத் திடமாக உபயோகப்படுத்தவில்லை. சிப்பாய்கள் மனது நிடம்படாமல் அலைந்துகொண்டிருந்தது. வெறுக்கப்பட்ட ஒரு சேனதிபதியைக் கொன்றபிறகு சில நாளில், சில சமயத்தில், சில மணி நேரத்தில் சிப்பாய்களுக்குப் புத்தி மயங்கிவிடும். மற்ற சேனதிபதிகளையெல்லாம் விடுதலை செய்வார்கள். அதிகாரிகளுடன் ராஜி பேசுவார்கள். பிறகு அதிகாரிகளால் தண்டிக்கப்படும்பொழுது சுடப்படுவதாய் இருந்தாலும் பேசாமல் உட்படுவார்கள். சமக்கடிபடுவதாய் இருந்தாலும் உடம்பைவளைத்து, விளைத்துக் கொடுப்பார்கள். மாடுகள் மாதிரி பழய பாரத்தைச் சுமந்து கொண்டே டால்ஸ்டாய் சொல்லிக்கொடுத்த மாதிரி சிறிதும் தவராமல் நடந்தார்கள்.

ஜனங்களிடம் வெகு காலாய் வளர்ந்து வந்த வெறுப்பும் வாழ்க்கையை மேன்மைப்படுத்த வேண்டும் என்கின்ற பழுத்த ஆவலும், பழைய நம்பிகைகளை எறிந்துவிட விருப்பமும் இவை எல்லாம் டால்ஸ்டாயில் எதிரொலிக்கின்றன. இதைதுடுகூட ஜனங்கள் இன்னும்விளைத்தெரியாமல் இருப்பதும்,களவு காண்பதுபோன்ற வீண் யோசனைகளில் ஆழ்ந்திருப்பதும்,அரசியல் அனுபோகமற்றிருப்பதும், கிராம வாழ்க்கையில் புரட்சிக்கு வேண்டிய வலுவில்லாமல் இருப்பதும் இவை எல்லாம் டால்ஸ்டாயில் எதிரொலிக்கின்றன. பொது மக்களிடம் புரட்சி யுத்தம் கிளம்பித்தான் ஆகவேண்டுமென்பற்கு சரித்திர பொருளாதார நிலைமைகளே போதிய காரணங்களாகும். இந்தக் காரணங்களே பொதுமக்கள் என் யுத்தத்திற்கு தயாராய் இல்லை என்பதையும் புரட்சி யுத்த ஆரம்பத்தில் ஏற்பட்ட தோல்விகளுக்கு முக்கிய காரணமாகிய "கெடுதலை எதிர்க்காதே" என்னும் டால்ஸ்டாயின் கொள்கையையும் விளக்கிக்காண்பிக்கும்.

தோல்வியடைந்த சேனைகள் ஒரு நல்லபாடம் கற்றுக்கொள்ளும என்பதாக ஒரு பழமொழி உண்டு. சாதாரண சேனைகளோடு ஒரு புரட்சி வகுப்பு சேனையை ஒத்திட்டுப்பார்ப்பது சில அம்சங்களில் தான் பொருந்தும், முதலாளித்தனத்தின் வீழ்ச்சி மணிக்கு, மணி மாற் மாற் வருகிறது. இதன் காரணமாய் நிலச்சுவான்தார்களாகியபிரபுக்களையும்அவர்கள் அரசாங்கத்தையும் கோடிக்கணக்கானகுடியானவர்கள் வெறுத்தநிலைகுடியானவர்களுக்குஎற்பட்டஒற்றுமைபின்பலத்தால் ஒரு ஜனநாயக புரட்சி யுத்தம் கடத்தத்தூண்டிய நிலைமை இன்னும் வரவர நெருக்கடியாகி வருகிறது. குடியானவர்கள் நிலைமையில்லை பண்டமாற்று, மார்க்கட்டுக்குத் தருந்தாப்போல் செல்வாக்கு, பணத்தினுடைய ஆதிக்கம் முதலியனவின் விருத்தியால் பழய துருப்புப்பிடித்தகாட்டாண்மைத்தனமும் அதற்குத்தகுந்தபடி எற்பட்ட மதத்துவ எண்ணங்களும் வரவர மறைந்து வருகின்றன. ஆனால் புரட்சியின் ஆரம்பகாலத்தில் பொதுஜனப் புரட்சியில் இடைத்த முதல் தோல்வியின் மூலம் ஒரு காரியம் நிறைவேற்றி. பொது மக்கள் ஒரு காலத்தில் இளகிய மனதுடையவர்களாகவும், உறுதியற்றவர்களாகவும் இருந்ததெல்லாம் ஓரே கடையாய் அடிபட்டுப்போயிற்று. வேலி வரம்புகள் எல்லாம் ஒழுங்கு படுத்தப்பட்டிருக்கின்றன. வகுப்புகளுக்கும், கட்சிகளுக்கும் மத்தியில் உள்ள எல்லைகள் நிர்ணயஞ் செய்தாகி விட்டது. புரட்சி வாதிகளான சோஷ்யல் டிமாக்கரிஸ்ட் கட்சியின் ஒழுங்கு தவராத நிரந்தரமான பிரசாரத்தின் மூலம் Stolaypin ன்டோலி ப்பின் உடைய படிப்பினை என்னும் சம்மட்டியின் உதவியினால் சோஷ்யலிஸ்ட் தொழிலாளர்களிடமிருந்து மாத்திரமல்லாமல் குடியான பொது மக்களிடமிருந்தும் டால்ஸ்டாய் வாதிமனப்பான்மை சரித்திர பூர்வமாக ஏற்பட்ட துயரத்திற்கு இரையாக்காமல் மேலும், மேலும் வலுவடைந்த வீரர்கள் கட்டாயம்விளைக்கிவம்புவார்கள்.

6-ம் அத்தியாயம்.

## A. M. Gorky க்கு இரண்டு கடிதம்.

இதில் கடவுளைப்பற்றிய தத்து வார்த்தங்களுக்குச் சமாதானம் இருக்கிறது.

அன்புள்ள Alexi-Maxi-mooich அவர்களே!

தாங்கள் என்ன காரியம்செய்துகொண்டிருக்கிறீர்கள்? இது மிகவும் மோசமான காரியமாகும். நீங்கள் இவ்வளவுக்கு போய்விடுவீர்கள் என்று நான் நினைக்கவில்லை. கேற்றையதினம் Rych பத்திரிகையை நான் பார்த்தேன்.அதில்டாஸ்ட்டாயிவ்க்கி Dostoyevsky ஐப்பற்ற கூக்குரலுக்கு நீங்கள் அளித்த பதிலைப் பற்றி சந்தோஷப்பட ஆரம்பித்தேன். ஆனால் இன்றையதினம் நம்முடைய தீவிரப்பத்திரிகை கிடைத்தது. அதில் தங்களுடைய கட்டுரையில் "Rych" "நிப்ச்" பத்திரிகையில் பிரசுரிக்காத பாகம் ஒன்று காணப்பட்டது அது பின்வருமாறு:—

"கடவுளைத் திருத்தும் வேலையைத் தற்காலிகமாய் விட்டு விடவேண்டும். அது பிரயோஜனமற்ற வேலையாகும்,மறைத்து வைக்கப்படாத பொருளைத்தேடிப்பயனில்லை. விழுந்த விளக்கமல் அருப்பு அருக்க முடியாது. உங்களிடம் கடவுள் இல்லாததற்குக் காரணம் நீங்கள் அவரை இன்னும் (இன்னும்) சிருஷ்டிக்துக்கொள்ளவில்லை,அதற்காகத்தான் தேடிப்பிடிக்கமுடியாது. நீங்கள் அவரை சிருஷ்டிக்துக்கொள்ளவேண்டும்.ஜீவனிடம் கடவுளைக்கண்டுபிடிக்கும் குணமில்லை, உணடாக்கும்குணமே இருக்கிறது.

இதிலிருந்து விளங்குகின்றதென்னவென்றால் தாங்கள் கடவுளைத் தேடும் வேலையை ஆட்சேபிப்பதெல்லாம் தற்கால மாகத்தான் என்று தெரிகிறது. பின்னும் புலப்படுகின்ற தென்னவென்றால் நீங்கள் கடவுளைத்தேடும் வேலைக்குச்சொல்லும் ஆட்சேபம் கடவுளைத்தேடும் வேலைக்குப் பதிலாகக் கடவுளைச்சிருஷ்டிகரும் வேலையை மேற்பாட்டுக்கொள்ளுவதற்காக என்கிறீர்கள்.

ஐயோ! இப்பொழுது! நீங்கள் இந்த வழியில் அறிவைச் செலு

த்துவதை நினைக்க நினைக்க என் மனம் வேகாதா? கடவுளைத் தேடுவதற்கும், கடவுளை அடைப்பதற்கும், கடவுளை திருஷ்டிப்பதற்கும், கடவுளை உற்பத்தி செய்வதற்கும் ஆகிய இவற்றில் ஒன்றுக்கொன்றளவளவுமித்தியாசமிருக்கிற தென்றும் ஒரு மஞ்சள் பூசத்திற்கும், ஒரு நிவவர்ண பூசத்திற்கும் உள்ள வித்தியாசம் எவ்வளவோ அவ்வளவுதான். எல்லா கடவுள் களையும், எல்லா பூதங்களையுமொழித்து பிரேத வணக்கம் என்ற எண்ணத்தையே மாற்றிவிட முயற்சிக்காமல் கடவுளைத்தேடுவ தெனப் பேசிக்கொண்டு மஞ்சள் பூதம் நல்லதா? நீலப்பூதம் நல்லதா? என்று வாதிப்பதும் ஒன்றும் பேசாமல் சும்மா இருப்பதைவிட நூறுமடங்கு மோசமான காரியமாகும். கடவுள் என்பது அந்தக் கடவுளை எவ்வளவு பரிசுத்த குணங்கள் உள்ளதாகவும், மேன்மையுள்ளதாகவும், நாம் கண்டுபிடிக்காமல் திருஷ்டித்ததாகவும் இருந்தாலும்கூட அது பிரேத வணக்கமேயாகும்.

ஜனநாயகம்—பொதுமக்கள்—பொதுஜன அபிப்பிராயம்—வின் ஞானம் ஆகியவைகளுக்கு சற்றும் மதிப்பு கொடுக்காததும், மிகவும் சுதந்திரம் பெற்றதாக கருதப்படுவதும் ஆன அமெரிக்கா சுவிட்ஜர்லாண்ட் போன்ற நாடுகளில் பொது மக்கள் தொழிலாளர் ஆகியவர்களுடைய மனத்தில் இம்மாதிரி பரிசுத்தமான ஆத்மார்த்திகமாய் கருதப்பட்ட சிறு கடவுளைப்பற்றிய எண்ணங்களைத்தித்துத் தொழிலாளர்களுடைய சுயராஜ்ய விரோதமாக அவர்களையே நடக்கும்படி செய்துவிடுகிறார்கள். அதனால்தான் மதத்தைப்பற்றிய சகல எண்ணங்களும், கடவுளைப்பற்றிய சகல எண்ணங்களும் இந்த எண்ணங்களோடு பட்டுப்படாத சம்மந்தம் வைத்திருப்பதுடன் ஆன எல்லா காரியங்களும் வாயால் சொல்ல முடியாத மிக கேவலமானதும் பொருக்குத்தக்கதுமான காரியமாகும். இம்மாதிரி எண்ணங்களை நாம் இப்படி தொத்து வியாதிகளைப்போல் வெறுப்பதால்தான் பணக்கார வகுப்பார் இவற்றை பொருத்துக்கொள்வதோடு சில சமயம் விருப்பமாயும் வரவேற்கிறார்கள்.

பாமர மக்களுடைய கண் களுக்கு வெளிப் படையான ஸ்தூலமான குற்றங்களும், ஏமாற்றுகளும் பலவந்தங்களும் பொறாமை நோய்களும் தெளிவின்றனவே ஒழிய சூக்ஷ்மமான ஆத்மார்த்தமான கடவுள் தோற்றமும் அழகிய எண்ணங்களால் அலங்கரிக்கப் பட்டிருக்கும் கடவுள் தோற்றமும் தெரிவதில்லையே நான் சமீபத்தில் ஜெர்மனி பத்திரிகை ஒன்றில் ஒருகத்தோலிக்க பாதிரி சிறு பெண்களை கற்பழித்ததாகப் பார்த்தேன். இம்மாதிரி பெயர் வழிகளால் ஜனராயகத்திற்கு எற்படும் ஆபத்தைவிட பாதிரி உடை தரிக்காமலும், பாதிரிகள் போல்லைதிகமதத்தை ஆதரிக்காமலும், எண்ணத்தில் ஜனநாயகப் பாதிரிகளாய் விளங்கி கடவுள்களை உண்டாக்க வேண்டுமென்றும், திருஷ்டிக்க வேண்டுமென்றும் பிரசாரம் செய்பவர்களால் ஏற்படும் ஆபத்தே பெரிதானது. முதலில் குறிப்பிட்ட பாதிரியை சுலபமாக வெளிப்படுத்தி தண்டித்துத் துரத்தி விடலாம். ஆனால் இரண்டாவது குறிப்பிட்ட ரகப் களை அவ்வளவு சுலபமாக துரத்தி விட முடியாது. இவர்களை வெளிப் படுத்துவதை முதலாவதுகாரர்களை வெளிப்படுத்துவதை விட ஆபிரமடங்கு அதிகமான கஷ்டமான காரியம். தான்பாபி என்றும், பல வீனமென்றும் சொல்லித் திரியும் சுயநலக்கூட்டத்தார் எவரும் இவர் களை முற்றும் கூற முன் வர மாட்டார்கள்.

இப்போது நம்நாட்டில் பார்ப்பனர் என்றும் பலவீனர்கள் என்றும் முறையிடுவதில் கைதேர்ந்த ருஷியர்களின் சுயநல ஆன்மாக்களைப் பற்றித் தெரிந்திருக்கும் (ருஷியர் கள் மாத்திரம் என்? இத்தாலியர் கள் இவ்விஷயத்தில் பின்னடைந் தவர்கள் அல்லர்) இந்த ஆன்மாக் களின் முன்நிலையில் அவர்கள் ஆசைப்படும் ஒரு நிர்பண்டத் தை தாங்கள் ஆடம்பரமாக அலங் கரித்து வைத்து அவர்களை மயக்குகிறீர்கள். இந்த நிர் பண்டத்தின் மேலிருக்கும் சக்கரைப் பூச்சை நீக்கிப் பார்த்தால் உள்ளுக்குள் பேராபத்தை விளைவிக்கும் விஷம் இருப்பது தென்படுகிறது. ஆ! இது மிகவும்கஷ்டமான நிலை; நாம் மாரடித்துத் கொண்டு அழுத கால மெல்லாம் தண்டி விட்டது, கட்சிடத்தில் குற்றமிருப்பின் அதை நிதான ஆராய்ச்சி செய்து சீர்திருத்தம் செய்யும் காலம் இது.

கடவுளை அடைத்துக் கொள் வது நம்மையே மொத்து கொண்டு மாரடித்துக்கொள்ளுவதைவிடமிக வும் மோசமானது காரியமல்லவா? கடவுளைச் செப்பனிடும் வேலையி னும், அல்லது கடவுளைச் செப்ப னிடுவதைப் பற்றிசிந்திப்பதிலும் கருத்தைச் செலவழிக்கும் ஒவ் வொருவரும் மிகவும் மோசமான விதமாய் மாறடித்துக் கொள்ளு கிறார்கள். எதெனன்றால் அவர் கள் ஒரு உருப்படியான கேலி யில் ஈடுபடுவதை விட்டு விட்டு தன்னைப் பற்றிய யோசனையி லேயே ஆழ்ந்து தன்னையே பெரி தென எண்ணிக் கொண்டு தன் னுடைய குணாங்களில் எவை மிக வும் அசுத்தமாகவும், மூட்டாள் தனமாகவும் அடிமைத்தனமாக வும் உள்ளனவோ அவைகளைக் கட வுள் குணமெனச் செப்பனிட்டுக் கொண்டு அவற்றைப் பற்றிய யோசனையிலாழ்ந்து விடுகிறார்கள்.

நலிவுற்றவர்களைக் குறிக்கா மல் பொது ஜனசமூகத்தைப் பற்றிய அளவில் யோசிப்போமா னால் கடவுளைச் செப்பனிடுவது என்பதெல்லாம் ஒரு புத்தி மழுங் கிய-பலமற்ற-சுயநலப் பிரியமான தானே பெரிதென்ற எண்ணத்தி னுள் மூழ்கி இருப்பதேயாகும். ஒரு சுயநலப் பிரியனை சுலப மாக்காரன் அப்படிப்பட்ட எண் ணத்தில் ஆழ்த்திருக்கும் போது தன் குறும்புகளை மிகைப் படுத்தி மதிமயக்கியும் கவிட்புறும் விஷயங்களை நிலைமை யை அடைகிறான்.

இவ்விஷயங்களைத் தாங்கள் ஆன் மாவைப்பற்றி எழுதியதில் உண மையாக விளக்கி இருக்கிறீர்கள் ஆனால் அவ்விடத்தில் தாங்கள் குருக்கள் ஆத்மாவைப் பற்றிப் பேசாமல் பொதுவாக சொல்ல பணக்காரர்களைப்பற்றி குறிப்பிட் டிருக்க வேண்டும். எதெனன்றால் பூதர், இதாலியர், இங்கிலீஷ் வகுப் பைச் சேர்ந்த சொல்லப் பணம் படைத்தவர்கள் எல்லாம் ஓரே மாதிரியாகவே நடக்கிறார்கள். ஆழ்ந்திப் போன சுயநலத்தை காணுவதென்பது எப்பொழுதும் சகிக்கமுடியாத காரியம்தான். ஆனால், இந்மாதிரி ஜனநாயக சுயநலம் என்று பெயர் வைத்துக் கொண்டு பிரேத வணக்க எண் ணங்களிலேயே ஈடுபட்டிருக்கும் கக்ஷியைக் காணுவது கொஞ்சங் கூட சகிக்க முடியாததாகும்.

தங்களுடைய கட்டுரையைக் கவனமாய்ப் படித்துப் பார்த்து இம்மாதிரி தாங்கள் தவறிவிட்ட தற்குக் காரணம் என்ன என்று என்னால் கண்டுபிடிக்க முடிய வில்லை என்பதை ஒப்புக்கொள்ளு கிறேன். அது என் என்று எனக்குப் புரியவில்லை. தாங்களா கவே ஏற்கனவே கண்டிக்கப்பட் டிருக்கிற "பாப மன்னிப்பு" வின் மிகுதியோ அல்லது அதின் எதி ரொலியோ? அல்லது ஒரு வேளை தொழிலாளி நோக்கத்தை விட்டு விட்டு பொதுவான "ஜனநாயக நோக்கத்திற்கு" ஆளாக முயற்சித்து முடியாமல்போனதோ அல்லது ஒருவேளை "பொதுவான ஜனநாயகத்தோடு" வார்த்தையா டும்பொழுது முழுக்கைகளோடு பேசுவது மாதிரி கொச்சைப் பேச்சுப் பேசுவீர்களோ? அல் லது இயற்கணம் படைத்த வகுப் பாருடன் அவர்களுக்குப் புரிந்த பாஷையில் பேசுவதற்கு அதை அவர்கள் மனப் பான்மையிலு ள்ள குற்றங்களுக்கு சற்று சலு கைகாட்ட வேண்டுமென்று எண் ணினீர்களோ?

எப்படி இருந்தாலும் இந்தப் படி தாங்கள் கடப்பது எவ்விதத் திலும் எக்கப் பொருளிலும் தவறல்லவா?

ஜனநாயக ஆசை எற்பட்டிருக் கும் தேசங்களில் தொழிலாளர் வகுப்பைச் சேர்ந்த ஆசிரியர்கள் ஜனநாயகப் பொது மக்களுடைய பொதுஜன அபிப்பிராயம், விஞ் ஞானம், இவற்றின்பெயரால் பிர சாரம் செய்வது அசம்பாவித மென நான் முதலிலேயே கூறி இருக்கிறேன். ஆனால் ருஷியா வைப்பற்றி என்ன என்ற கேள்வி பிறக்கலாம் ருஷியாவில்கூட அம் மாதிரியான பிரச்சாரம் தகுதி அற்றது என்றே நினைக்கிறேன். எதெனன்றால் அந்தப் பிரசாரம் ருஷியாவிலும் அம்மாதிரிக்காரர்களைப் புகழ்வதுமாதிரி தோன் றும் (Russkye Myst) ருஷிய் அறிவு என்ற மாதப் பத்திரிகை (இது ருஷிய முதலாளிகளுடைய எகாதி பத்தியத்தை ஆதரித்து வந்ததாகும்.) யைச்சேர்ந்த (Izzoyer) இஸ்ட்சாகிர்என்பவரும் இம்மாதிரி பொதுவான அர்த்த மற்ற அறிக்கைகளில் கையொப்பம் இடுவார். இம்மாதிரி அறிக் கைகளுக்கும் Izzoyer உடைய கொள்கைகளுக்கும் வித்தியாசம் கண்டுபிடிப்பது தங்களுக்குச் சுல பமாயிருக்கலாம். ஆனால் அந்த அறிக்கையை வாசிப்பவர்களுக்கு அந்த வித்தியாசத்தை கண்டுபிடி க்க முடியாத நிலையில் அந்த அறி க்கைகளை வெளியிடுவதில் என்ன பயன்? ஜனநாயகம் என்ற ஏதோ ஒரு கலப்படத்தை வாசகர்களு க்குக் கொடுப்பதை விட்டு விட்டு அற்பபணக்காரவகுப்பார்பலவீன த்தோடும் பரிதாபகரமாகவும், நிடமில்லாமல் சலனப்பட்ட மன துடனும், பலனற்றும் கனத்துப் போய் அநாதரியப்பட்டு கடவுள் சிந்தனையிலும் தன்னைப்பற்றிய சிந்தனையிலும் ஆழ்ந்து கடவுளை

தொடர்ச்சி 14ம் பக்கம் பார்க்க.

ரோஜா முத்தையா

## கோவில் நுழைவுக்குக் காந்தியின் நிபந்தனை.

1.

தோழர் காந்தி சொன்னதாவது:—

"பின்வரும் யோசனை யொன்றை நான் கூறினேன், ஒவ்வொரு தினமும் சில மணிநேரம் ஹரி ஜனங்களையும், அந்த வகுப்பாருடனிருப்பதை ஆட்சேபிக்காத இதர இந்துக்களையும் கோவிலில் அனுமதிக்கவேண்டும். ஹரிஜனங்கள் ஆலயப்பிரவேசம் செய்வதை ஆட்சேபிப்போருக்காக சில மணி நேரத்தை ஒதுக்கி வைக்கவேண்டும். திருத்திகை ஏகாதசி தினத்தன்று ஹரிஜனங்களும், இதர இந்துக்களும் சேர்ந்து சென்று ஈஸ்வர தரிசனம் செய்வதும், அதன் பிறகு புண்யாவாசனம் செய்வதும் வழக்கமாக இருக்கிறபடியால், நான் கூறும் உத்தேசத்தை ஏற்றுக்கொள்வதில் எவ்வித கஷ்டமும் இல்லை".

## ராஜி புரட்டு.

காந்தி—சாஸ்திரிகள் ராஜியைப்பற்றி பார்ப்பனரல்லாத பத்திரிகைகளின் அபிப்பிராயம்.

தமிழ்நாடு பத்திரிக்கையின் 3-1-33 தேதியின் தலையங்கச் சுருக்கம்.

II.

"குருவாயூர் விஷயத்தில் மகாத்மா காந்தி ஒரு புதிய யோசனையைச் சொல்லியிருப்பதாக இன்று நமக்கு ஓர் செயதி கிடைத்திருக்கின்றது. அது உண்மையானால், "தீண்டாதார்" என்ற மக்களுடைய இழிவும், மேல்ஜாதியினுடைய உயர்வும் மறுபடியும் உறுதியாக்கப்பட்டதென்றே சொல்லலாம். அதாவது தாழ்த்தப்பட்டவர்களும், உயர் ஜாதியினரும் கலந்து ஒன்றுபடாமல், தனித் தனியே ஆலயத்தில் நுழையலாமென்ற சமாதான முறையை காந்தி கூறுகிறார் என்று ஏற்படுகின்றது. இதனால் யாருக்குக் கௌரவமென்று மகாத்மாவைக் கேட்கிறோம். ஆலயதரிசனம் வேண்டுமென்று தீண்டாதார் கேட்கவில்லை. அம் மக்களுக்கு ஏற்பட்டுள்ள இழிவைப் போக்கவே, சர்வ ஜனங்களுக்கும் ஆலயதரிசன உரிமையை அமைக்க வேண்டுமென்ற இயக்கம் தோன்றியது. புதிய யோசனை ஒப்புக்கொள்ளப்படுமாயின், தீண்டாதாருடைய தாழ்மைக்குப் புதிய முத்திரையிட்டதுபோல ஏற்படுகின்றதென்பதை நாம் அதிகமாக விவரிக்கத் தேவை இல்லை.....

சட்ட மூலமாக சர்வ ஜனங்களுக்கும் ஆலயதரிசன உரிமை ஏற்படுத்தவேண்டும்; இல்லையேல் சத்தியாக்கிரகம்செய்து உண்மை பக்தர்கள் சாகவேண்டும். இவ்விரு முறைகளும் தவறுமாயின், வேற்றுமைகளுக்கு அறிகுறியாக நிற்கும் கோவில்கள் நிர்மூலமாகும் காலம் வெகு தூரத்திலில்லையென்பதை யாவரும் அறிந்திருக்கும்படி கோருகிறோம் எனினும் குமாரபட்டர்களின் மாயவலையிலிருந்து அவர் தப்புவிக்க முடியவில்லையென்பதற்காகவே, சில தேசபக்தர்கள் அவரிடமிருந்து விலகினார்கள். மகாத்மா மோசம் போவரென்பதை, குருகுல தகராறிலிருந்து நாம் கண்டறிந்திருக்கிறோம்.

## ஜஸ்டிஸ் தலையங்கச் சுருக்கம்.

III.

காந்திஜி ராஜிதிட்டத்தைத்தாழ்த்தப்பட்டோரின் நன்மையின் உண்மையில் நாட்டங் கொண்டவர்கள் கண்டு பெரிதும் வருந்துவர். சுயமரியாதையுள்ள தாழ்த்தப்பட்ட ஹிந்துக்கள் இத் திட்டத்திற்குத் தண்டம் சமர்ப்பித்து புறக்கணிப்பர். பிராயச்சித்த அபிஷேக யோசனைகளைக் கேட்டு பகுத்தறிவுள்ள எந்த உண்மையான சீர்திருத்தக்காரர்களும் திடுக்கிட்டுப் போவர். கேவலம் கோவிலில் நுழைவதா தற்போதைய பிரச்சினையல்ல. அதற்கு அடிப்படையாக உள்ள தீண்டாமைக் கொள்கையைப்பற்றியே தகராறு ஏற்பட்டுள்ளது. பிராயச்சித்தமேன்பது, தீண்டாமையை ஊர்ஜிதப்படுத்துகிறது. மேலும் வைதிகர்கள் மட்டுமின்றி, சீர்திருத்தக்காரர்களும் பிராயச்சித்த அபிஷேகங்களை ஒப்புக்கொள்வதாக ஏற்படும். இது மிக ஆபத்தானது. தீண்டாதாரெனப்படுவோர் ஆலயத்தில் நுழைவதால் தீட்டுப் பட்டுவிடுமென்ற மூடத்தனமான நம்பிக்கையைச் சீர்திருத்தக்காரர்களும், காந்தி திடப்படிஒப்புக்கொள்வதாகும். பிரஸ்தாபத்திட்டம்சனாதனிகளையே ஆதரிப்பதாக இருப்பதால், அதைச் சீர்திருத்தக்காரர்களும் தாழ்த்தப்பட்டோரும் அங்கீகரிக்கமுடியாது. அடிப்படையான கொள்கையில் விட்டுக் கொடுக்கமாட்டாரென்று பெயர் பெற்றுள்ள காந்திஜி இவ்விதத் திட்டம் தயாரித்துள்ளதைக் கண்டு, நமக்கு அளவற்ற வருத்தம் போக்க வழியில்லை. வைதிக பிராமணரிடையே செல்வாக்கை இழந்துவிடவேண்டியிருக்குமோ என்று காந்திஜி பயப்படுவதாகத் தோன்றுகிறது.

## நாடார் மகாநாடு.

சென்னையில் நடந்த நாடார் மகாநாட்டில் தலைமை வகித்த தோழர் செந்திக்குமார் அவர்களின் சொற்பொழிவு அடுத்தவாரம் வெளிவரும்.

## நல்ல சேதி.

புதுக்கோட்டையில் தோழர் ராகவப்பாவின் முட்டாள் தனத்தினால் எற்பட்ட கலவரத்தைப் "பார்ப்பனர்-பார்ப்பனரல்லாதார் கலவரம்" என்பதாகப் பெயர் கொடுத்துப் பார்ப்பனரல்லாதார் உணர்ச்சியையும் சுயமரியாதையையும் சுரண்டச்செய்து வந்தருளியான புதுக்கோட்டைக் கலவரக் கேசானது தள்ளும்படி ஆகிவிடுமெனக் கருதி புதுக்கோட்டை சர்க்கார் கேசை வாப்ஸ்வாங்கிக் கொண்டதாகவும், சிறை வைக்கப்பட்டவர்கள் எல்லாம் விடுதலை செய்யப்பட்டு விட்டதாகவும் சேதி கிடைத்திருக்கிறது. இதற்கு முக்கிய காரணம் கேசை விசாரித்த நீதிபதி தோழர் கு. கோவிந்தன் நாயரின் அஞ்சா நெஞ்சம் படைத்த நடு நிலைமையே யாகும் என்று தைரியமாய்ச் சொல்லுவோம்.

சுயமரியாதை வீரர்
மு. வல்லத்தரசு.

புதுக்கோட்டை அரச வம்சத்தைச் சேர்ந்த சுயமரியாதை வீரர் தோழர் முத்துசாமி வல்லத்தரசு புதுக்கோட்டை கலவரத்துக்கு மூலகாரணஸ்தர் என்று பார்ப்பனர்களால்கட்டிவிடப்பட்ட கட்டுக் கதையை நம்பி புதுக்கோட்டைச் சர்க்கார் அவரை யும் இலண்டனில்தங்கியிருந்துவிட்டு மல் பிறகு சிறிதுகாள் பொருத்து அச்சமஸ்தானத்துக் குள் இருக்கவே கூடாது என்று நாடு கடத்தியதும் அதனால் அவர் சென்னைக்கு வந்து சுயமரியாதை கார்ஜனை செய்து வந்ததும் யாவரும் அறிந்ததே. இப்போது சர்க்கார் உண்மையை அறிந்து எவ்விதத் தியாகத்தையுமில்லாமல் மேற்படி உத்திரவைக் கேன்சில் செய்து விட்டார்கள்.

இனி நம்வீரர்வெற்றிபுதுக்கோட்டையை சுயமரியாதைக் கோட்டையாக விளங்கச் செய்யுமென்று நம்புகிறோம்.

ஈரோடு
## முதலாளிக்கு கான்சாயபு பட்டம்.

ஈரோட்டில் பிரபல குடும்பத்தாரும் தலைமுறை தலைமுறையாய் முதலாளி என்று அழைக்கப்படும் செல்வக் குடும்பஸ்தாரும் ஈரோடு சேர்மனுமான முதலாளி தோழர் கே. ஏ. கேஷத்தாவுத் அவர்களுக்கு சர்க்காரால் வருஷப்பிரப்பு தினத்தை முட்டி கான் சாயபு என்ற பட்டம்கொடுக்கப்பட்டிருப்பதாய் கெஜட்டில் வெளியாகி இருக்கிறது. இதற்கு காரணம் எவ்வளவோ சீர் கேட்டுக்கும், பகல் கொள்ளைக்கும்மற்றும் பலவித அபாசஞ்ஜல்களுக்கும் ஆளாகியிருந்த ஈரோடு முனிசிபல் திருவகமானது தோழர் கேஷத்தாவுத் அவர்கள் சேர்மெனாய் அமர்ந்தபிறகு பலதுறைகளிலும் முற்போக்கடைந்து, கட்சிப்பிரதி கட்சிக்கு இடமில்லாமலும் பணங்கள் முதலியவைகள் கொள்ளை போவதற்கு இடமில்லாமலும் நாணயத்துடனும் பொருப்புடனும் நடத்தப்பட்டு வந்திருப்பதை சர்க்கார் உணர்ந்தும் அந்தப் படியே பல வருஷாந்திர அறிக்கைகளிலும் சர்க்காரால் வெளியிடப் பட்டும் வந்ததுமே காரணம் என்று சொல்லுவதில் சிறிதும் மிகையிருக்காது. இவை எப்படி இருந்தபோதிலும் இந்த கான்சாயபு என்ற பட்டம் முதலாளி கேஷத்தாவுதை வந்தடைந்து பெருமைபெற்றதே ஒழிய இப்பட்டத்தால் தோழர் கேஷத்தாவுத்துக்கு புதிய பெருமை ஏதும் வந்துவிடவில்லை என்பதையும் அவர் அதை ஒரு பொருளாய் மதிப்பவரல்ல என்பதையும் உலகம் நன்றாய் உணரும். ஆகையால் இது விஷயத்தில் தோழர் கேஷத்தாவுத்தைப் பாராட்ட சிறிதும் அவசியம் காணப்படவில்லை. வேண்டுமானால் அந்தப்பட்டத்தை பாராட்டலாம்.

என்றாலும் கவர்னர் பிரபு முதல் நிர்வாகசபை மெம்பர்கள், மந்திரிகள் மற்றும் பல கலெக்டர்கள், ஜமீன்தார்கள் முதலிய அனேக அதிகாரிகளும், செல்வவான்களும் பாராட்டுக்கு தந்திகளும் கடிதங்களும் அனுப்பி இருப்பதுடன் பலர் அவரை சென்று கண்டவண்ணமாய் இருக்கிறார்கள். எனவே இத்தமாதிரியான சாரமற்ற பட்டங்களுக்குராட்டில் இருக்கும் மயக்கம் எவ்வளவு என்பது இதனால் விளங்குகின்றது.

## துக்கிடா.

கேள்வி:—கர்ப்பத் தடையைப் பற்றி சதா பேசுகிறீர்களே, அதற்கு மார்க்கம் என்ன?

விடை:—கர்ப்பத்தடைக்கு மார்க்கமா வேண்டும். அப்படியானால் நமது "விதவை"ப் பெண்களைப் போய் கேள், அவர்கள்உடனே வெகு சுலபமாக மார்க்கம் சொல்லுவார்கள்.

கேள்வி:—அதெப்படி?

பதில்—அவசியமேற்பட்டால் மார்க்கம் தென்படும். If there is a necessity there is a way.

## திருத்தம்.

28, 29-12-32 தேதிகளில் நடந்த சுயமரியாதை இயக்க வேலைத்திட்டக் கூட்டத்தில் நியமிக்கப்பட்ட கமிட்டி மெம்பர்களின் பெயர்கள் சென்ற வாரம் வெளியிட்டதில் தவறுதலாக சாமி சிதம்பரனார் என்று வெளியிட்டதில் அதைசிவகாமி, என்று வாசித்துக்கொள்ளவேண்டுகிறோம்.

(பதிப்பாளர்)

குடி அரசு.

*ரோடு 1923 ஜனவரிமீ 8-உ

# காந்தியின் மற்றொரு ராஜி.

—0—

## தீண்டாமை ஒழிப்பா? நீலிப்பா?

—:0:—

அரசியலில் வேலையற்றதினால் பாமர மக்களுக்கு தம் மீது ஏற்பட்ட கலிப்பையும், வெறுப்பையும் தீர்த்துக் கொள்ளுவதற்காக சமூகத்துறையில் ஏதோ பெரிய தொரு சீர்திருத்தம் செய்வதாக வெளிப்பட்டு, அவ்வெறுப்பை மாற்றிக் கொள்ளலாம் என்று கருதிய தோழர் காந்தியவர்கள் "பிள்ளையார் செய்யப் போய் குரங்காய் முடிந்தது" என்ற பழ மொழிப்படி மக்களின் அதிக மான வெறுப்புக்கு ஆளாக நேரிட்டு, இப்போது அதிலிருந்தும் தப்புவதற்கு ஒரு பெரிய குட்டிக் கரணம் போடவேண்டிய தாய் ஏற்பட்டு விட்டது.

அதென்னவெனில் தோழர் காந்தி, இர்வின் பிரபுவிடம்செய்து கொண்ட ராஜியின் பயனைப் இந்திய ஏழை மக்களின்மீது ஆயுதக்காரர்கள் ஆட்சியையும், முதலாளி ஆட்சியையும் இந்திய மகாராஜாக்கள் ஆட்சியையும் எப்படி நிரந்தரமாய் இருக்கச் செய்து விட்டாரோ அதை போல் தாழ்த்தப் பட்ட மக்களுக்கு என்று கள்ளிக்கோட்டை சாமூதிரினிடமும், சால்திகளிடமும் செய்து கொள்ளும் ராஜியானது தீண்டப் படாத மக்களுக்கு தீண்டாமை என்பது என்றும் நிரந்தரமாய் இருக்க ஏற்பாடு செய்து தர வேண்டிய நிலைமைக்கு வந்து சேர்ந்து விட்டது. இதுபார்ப்பன தேசிய வாதிகளுக்குஓர்பெரியவெற்றியேயானாலும் பார்ப்பனரல்லாத "தேசியவாதிகள்" இதற்கு என்ன பதில் சொல்லுவார்களோ தெரிய வில்லை. என்றாலும் எப்படியோ தமிழ்நாடு பத்திரிகையும், தோழர் வரதராஜலுவும், ஜஸ்டிஸ் பத்திரிகையும் ஒரு வழியில் ஆதரியமாயி இதன் இரகசியத்தை வெளியாக்கி விட்டன. என்றாலும் மற்றவர்கள் என்ன சொல்வார்களென தெரிய வில்லை. என்னவோ சொல்லிக் கொள்ளட்டும். தேசியம் என்பது ஒழியும் வரையோ, அல்லது தேசிய வாதிகள் என்பவர்கள் வாழ வேறு மார்க்கம் கண்டு பிடிக்கும் வரையோ இப்படிப்பட்ட விஷயங்களில் அவர்கள் தைரியமாய் உண்மை சொல்ல முடியாதாதலால் காந்தியாருக்கும், அவரது பார்ப்பன வகுப்புகளுக்கும் மின் தாளம் போட்டுத்தானாக வேண்டும், அவர்களைப்பற்றி இப்போது நாம் கவலைப்படவில்லை. ஆனால் தீண்டப்படாதார் என்ற மக்கள் இதற்கு என்ன பதில் சொல்லுவார்கள் என்பது ஒரு சிக்கலான பிரச்சினையாகவே இருக்கின்றது.

மக்களுக்கு உண்மையான சுயமரியாதை உணர்ச்சி என்பது இல்லாத காரணத்தால், தான்உலகில் அரசனும், குருவும், பணக்காரனும் மேல் ஜாதிக்காரனும் ஏற்பட இடமுண்டாயிற்று என்பதோடு, ஏழையும் தொழிலாளியும் கூலியும் "சூத்திரனும்" (அடிமையும்) "சண்டாளனும்" ஏற்பட இடமுண்டாயிற்று என்றும் வாதிய மாய் கூறுவோம்.

இந்தகாரணத்தால்தான் இன்று நமது "தெய்வத்தன்மை" பொருந்திய "ஞான பூமி" யாகிய இந்தியாவில் 16 கோடி "சூத்திரர்" (அடிமை) என்பவர்களும், 7 கோடி "தீண்டாதார்கள்" "சண்டாளர்கள்" என்பவர்களும் பல ஆயிரக்கணக்கான வருடங்களாய் இருந்து வருவதுடன் இவற்றை இன்றும், என்றும்நிலை நிருக்க வென்று சங்கராச்சாரி "லோக குருக்களும்" "மகாத்மாக்களும்" இருந்து வருவதுடன் இவர்களுக்கு இடமும், ஆக்கமும் அளிக்க "ஜாதி மத நடுநிலைமை" வகிக்கும் "மகா காருண்யம் நிறைந்த" சக்கரவர்த்திகள், மகாராஜாக்கள் ஆட்சிகளும் இருந்து வருகின்றன.

சாதாரணமாக ஆட்சி என்பது மக்களுக்கு சமதர்ம நீதிசெலுத்த வேஏழிய, அதாவது வலியோரை வலியோர் வஞ்சித்து வதைக்காமல் இருப்பதற்கே ஏழிய பூனைக்கு குரங்கு மத்தியஸ்தமாய் இருந்த கதைபோல் "எப்படியோ வலிமை பெற்ற அயோக்கியமூர்க்கர்களுக்கும், அவர்களால் வலிமை யற்ற சாதுக்களுக்கும் நடுநிலைமை வகிப்பதற்கு" அல்ல என்பதை உலகில் எந்த அரசாட்சியும் இது வரை உணர்ந்து நடந்ததாக தெரியவில்லை. என்றாலும் தாழ்க்கப்பட்ட மக்களாகிய தீண்டாதார் என்னும் மக்களுக்கு சுயமரியாதை உணர்ச்சி கடுகளாவாவது இருக்குமானால் அவர்கள் ஒரு நாளும் உதைத்த காலுக்கு முத்தமிடுவது போல் இந்த கோவில் நுழைவு சூட்சிக்கு ஆளாகி இருக்கவேமாட்டார்கள்.

எனெனில் இன்றைய கோவில் நுழைவு கிளர்ச்சியில் "கடவுளைநம்பி புகுபவன் தான் கோயிலுக்குள் போக இஷ்டப்பட வேண்டும்" என்றும் இன்றைய கோயில் பிரவேசக் கிளர்ச்சி "கடவுளை நம்புகிறவர்களைப் பற்றியது தான்" என்றும் தன்மையாய் விளக்கமாய் பறை யடிக்கப் பட்டிருக்கிறது.

அது மாத்திரமல்லாமல் "இந்துக்கள் தான் இந்துக் கோவில்களுக்குச் செல்ல ஆசைப் படலாம் என்றும் "இந்துக்கள் தான் கோயில் பிரவேச முயற்சியில் கலந்துகொள்ளலாம்" என்னும் நிபந்தனைகளும் ஏற்படுத்தப் பட்டிருக்கின்றன. ஆகவே, கடவுளைப்பற்றிய நம்பிக்கை இல்லாதவனுக்கும், தன்னை ஹிந்து என்று சொல்லிக்கொள்ள இஷ்டப்படாதவனுக்கும் இந்த கோவில் நுழைவு கிளர்ச்சியில் கலந்து கொள்ளவோ, கோவிலுக்குள் போக ஆசைப்படவோ செய்வது நியாயமாகாது என்பது வெளிப்படை. அதனாலேயே அப்படிப்பட்ட அனேகர் அதில் கலந்து கொள்ளாமல் இருந்தாலும் இருக்கலாம்.

இவை ஒரு புறமிருக்க உண்மையிலேயே கடவுள் அதாவது "சகலத்தையும்படைத்து, காத்து, நடத்தும் சர்வ சக்தியுள்ள" ஒரு கடவுளும், முன் பின் ஜன்மம் உள்ள இந்து மதத்தையும் நம்புகின்ற, ஒப்புக்கொள்ளுகின்ற ஒரு இந்துதீண்டாதவன் என்கின்ற வன் கோவிலுக்குள் பிரவேசிக்க முயலுவது அறிவுடைமையா? அல்லது சுயமரியாதை உடமையா? என்று பார்த்தால் இரண்டும் மற்ற தன்மை என்று தான் சொல்ல வேண்டும். ஏனெனில் ஒரு ஆஸ்திக இந்து சர்வ சக்தி உள்ள கடவுளால் தான், முன் ஜன்ம கர்மத்தால் தான், தான் பிறந்ததாக கருதியாக வேண்டும். அன்றியும் தான் தீண்டப்படாதானாய் பிறந்ததற்கும் அல்லது கருதப்படுவதற்கும் அந்த கடவுள் தான் காரணம் என்பதையும் உணர்ந்தாக வேண்டும். ஆகவே தன்னை இந்த நிலை ஆக்கிய ஒரு கடவுளை-அதாவது தீண்டத்தகாதவனாய் ஆக்கிய ஒரு கடவுளை-தீண்டத்தகாதவன் என்று சொல்லும்படி செய்த ஒரு கடவுளைப் போய், அதன் இருப்பிடம் சென்று தரிசிப்பது, பூஜிப்பது, பிரார்த்திப்பது, வணங்குவதுஎன்ன பலனைகளான காரியங்கள் அனுவளவாவது சுயமரியாதைக்கு ஏற்றதா? என்று கேள்க்கின்றோம். இந்தப் படியான சுயமரியாதை அற்ற மக்களைக் கொண்ட நாட்டுக்கு "தேசியம்" வேண்டும், "சுயராஜ்ஜியம்" வேண்டுமென்று கொல்லிக் கொள்வதில்-அதற்காக பாடுபடுகின்றோம் என்று சொல்லப்படுவதில் எதாவது அர்த்தம் இருக்க முடியுமா என்றும் கேள்கின்றோம்.

இவை ஒரு புறம் இருக்க, தீண்டாதார் சமூகம் என்பதாக ஒரு சமூகம் இந்த நாட்டில் நிரந்தரமாய் இருப்பதற்காக இந்த கோவில் நுழைவு என்னும் பேரால் ஒரு புதிய சூழ்ச்சி செய்யப்படுவதாய்த் தெரிகின்றது. அதென்னவென்றால்இப்பொழுது தீண்டாதாராய்க் கருதும் ஒரு சமூகத்திற்கு ஹரி ஜனங்கள் என்று புதிதாக ஒரு பெயரை இட்டு அதை அவர்களையே ஒப்புக் கொள்ளச் செய்தாய் விட்டது.

இதனால் இந்த ஹரிஜனங்கள் என்கின்ற பெயர் உலகில் உள்ள வரை தீண்டாதவர்கள் என்பவர்கள் இருக்கவே தீருவார்கள் என்பது நிண்ணம். அதுபோலவே இப்போது தோழர் காந்தியார்ஜா மோரினிடமும், சாஸ்திரிகளிடமும் செய்துகொள்ளும் ராஜி ஒப்பந்தப்படி தீண்டப்படாதார் கோவிலுக்கு போக என்று ஒரு தனிநேரம் ஏற்படுத்திக் கொண்ட பிறகு இந்தக்கோவில்கள் உள்ள வரையிலும் தீண்டாதார் என்கின்ற கூட்டம் இருந்தேதான் தீரும்.

தீண்டாதார் தினமும் ஒரு குறிப்பிட்ட நேரத்தில் கோவிலுக்குப் போய் வணங்கிவிட்டுவருவதும் அவர்கள்வெளியேவந்தவுடன் அக்கோவிலுக்குசுத்தி (சம்ரோட்சணை) செய்வதுமான காரியங்கள் அத்தீண்டப்படாதார் என்பவர்களை தினம்தினம் எவ்வளவு இழிவுபடுத்தி அவ்விழிவை நிலைக்கச் செய்கின்றது என்பதை நினைத்துப்பாருங்கள்.

இன்றைய தினம் தீண்டாதாருக்கு யாராவது உண்மையான —பயன் தரும்படியான— அவர்களது இழிவு நிரந்தரமாய் நீங்கும் படியான நன்மை செய்கின்றவர்கள் இந்நாட்டில் உண்டு என்றால் அதில் தோழர் டி. ஆர். ராமச்சந்திர அய்யர் என்பவரே முதன்மையாவார் என்று சொல்லுவோம். ஏனெனில் அவர்தான்உண்மையை தைரியமாய்ச் சொல்லுகின்றார்,

அதாவது "தீண்டாதார் என்பவர்கள் இந்துக்கள் அல்ல" என்கிறார்கள். அதையேதான் நாமும் சொல்லுகின்றோம். வெகு காலமாகவே சொல்லியும் வந்திருக்கின்றோம். மற்றும் அவர் சொல்லுகிறபடி அரசாங்க சட்டமும் ஏற்பட்டுவிடுமானால் (அந்தப்படி ஏற்படுவதை தோழர் காந்தியே கெடுத்தார்) அன்றே இந்தியாவைப்பிடித்த தீண்டாமைக் கொடுமை மாத்திரமல்லாமல், அடிமைத்தன்மைக் கொடுமையும் ஜாதி ஆணவமும் ஒழிந்தது! ஒழிந்தது!! ஒழிந்தது!!! என்றே சொல்லுவோம், எப்படி என்பது இந்துக்கள் அல்லாத கிறிஸ்துவரையாவது மகமதியரையாவது மற்ற எவரையாவது தீண்டாதவர்கள் என்று சொன்னால் என்னபலன் கிடைக்கும் என்று பார்த்தால் விளங்கிவிடும். ஆகவே இன்று தோழர் டி. ஆர். ராமச்சந்திர அய்யரைக்குற்றம் சொல்லுபவர்களே நாம் தீண்டாதாரின் எதிரிகளென்றே சொல்லுவோம். தீண்டாதவர்கள் இந்துக்கள் அல்லவானால் அவர்களேபின்னையார் என்று சொல்லுவது என்று சிலர் கேள்க்கக் கூடும். அவர்கள் யாராயிருந்தாலும்நமக்குக் கவலை இல்லை. கழுதைகள் என்று அழைத்தாலும் சரி, நாய்கள் என்று அழைத்தாலும் சரிநாம் அதைப்பற்றி இவ்வளவு கவலைப்படுவதில்லை. ஏனெனில் இன்று தீண்டாதாரை தீண்டாதார் என்று கருதும் மக்கள் நாய்களையும், கழுதைகளையும் தீண்டாதார்என்றுகருதுவதுமில்லை அவரை தீண்டாமல்இருப்பதுமில்லை தீண்டினால் குளிப்பது மில்லை. மற்ற விஷயங்களிலும் கழுதைகளுக்கும், நாய்களுக்கும் உள்ள சுதந்தரங்களை தீண்டாதார்களுக்கு அளிக்கவும் அவர்கள் சம்மதிப்பதுமில்லை.

அவைகளைப் பொருத்தவரை மாத்திரமல்லாமல் உண்மையைப்பேசப்போனால், இந்துக்கள் என்று சொல்லிக்கொள்வதின் காரணமாம் 'சூத்திரர்கள்' என்று அழைக்கப் படுகின்ற 15 கோடிமக்களைக்கூட சூத்திரர்கள் என்ற பெயரை எடுத்துவிட்டு கழுதை என்றோ, நாய்கள் என்றோ பெயரைக் கொடுக்கலாமா என்றால் அதற்கும் நாம் ஆட்சேபிக்க வரமாட்டோம் முதலில் ஓட்டுக் கொடுப்போம்.

ஏனெனில் "இந்து மத" மனிதசமூகத்தில் "சூத்திரன்" என்பவனுக்கு உள்ள மதிப்பு அநேக விஷயங்களில் ஒருநாயிக்கு உள்ள மதிப்பைவிட கீழாகவே இருந்து வருகின்றது. நாய் போகக்கூடிய இடத்தில் "சூத்திரன்" போக முடியாது. பன்றி போகக்கூடிய இடத்தில் "தீண்டாதார்" என்பவர் போகமுடியாது என்பதை நினைப்புக்குக் கொண்டு வந்தால் இதன் நியாயம் விளங்கும்

தீண்டாதாருக்கு தனிக்கிணறு தீண்டாதாருக்கு தனிப்பள்ளிக்கூடம் - தீண்டாதாருக்கு தனிக்கோவில்எல்லாம் இன்று இருந்துவருவதுதவிர, இனி தோழர் காந்தியால் தீண்டாதாருக்கு தனி ரேடியோ ஸ்டேஷனும் ஏற்பாடு செய்யப்போகின்றது என்றால் இதை அறிவும், சுயமரியாதை உணர்ச்சியும் உள்ள மனிதசமூகம் எப்படித்தான் பொருத்துக்கொண்டு இருக்க முடியும் என்பதை யோசித்துப்பாருங்கள். உண்மையாக சுயமரியாதை ஆட்சி இன்று இருக்குமானால் இப்படிச் செய்கின்றவர்கள் கண்டிப்பாய் தண்டிக்கப்படுவார்கள் என்றுதான் சொல்லவேண்டி வருகின்றது.

இன்றைய கோவில் நுழைவு கிளர்ச்சி தீண்டாமை ஒழிப்பு வேலையா? அல்லது தீண்டாமையை என்றைக்கும் நிலை நிறுத்தும் வேலையா? என்று யோசித்துப்பார்த்தால் அதன் உண்மை விளங்கும்.

இதைப்பற்றி தமிழ்நாடு பத்திரிகை எழுதுகையில் "இதனால் "தீண்டாதார்" மக்களுடைய இழிவும் மேல் ஜாதியினுடைய உயர்வும் மறுபடியும் உறுதியாக்கப்பட்டதென்றே சொல்லலாம்" என்றும், "இந்த யோசனை ஒப்புக்கொள்ளப்படுமாயின் தீண்டாதாருடைய தாழ்மைக்கு புதிய முத்திரையிட்டது போல் ஏற்படுகின்றது" என்றும் எழுதி இருக்கிறது. சுதேசமித்திரன் முதலிய கலப்பற்ற பார்ப்பனப் பத்திரிகைகளும், சுலகலப்புப்பத்திரிகைகளும் வாய் மூடி மௌனம் சாதிக்கின்றன. ஆனால் அவைகள் தீண்டாதார்கள் பெயர்களைச்சொல்லிக் கொண்டு சட்ட சபைக்குபோகவும், ஊரைக்கொள்ளை அடிக்கவும் வேலை வீசுகின்றவைகளாய் இருப்பதால் இந்தப்படி வஞ்சகமாய் நடந்துகொள்ளவேண்டி இருக்கிறது.

ஆனாலும் இலவகளின் வண்டவாளத்தை சீக்கிரத்தில் மக்கள் உணர்ந்து அவர்கள் ஆசையைக் கனவாகும்படி செய்யப்பொதுமக்களுக்கு யோக்கியதை ஏற்படாமல் போகுமென்று நாம் கருதவில்லை. எவை எப்படியிருந்தபோதிலும் தேசியபுரட்டு, காதர் புரட்டு, மதியல் புரட்டு, சத்தியாக்கிரகப்புரட்டு, ஆகியவைகளை யெல்லாம் விட இந்த தீண்டாமை விலக்குப் புரட்டு கோவில் நுழைவுப் புரட்டு கொடுமை! கொடுமை!! மகா கொடுமை !!! என்று சொல்லுவோம்.

——

# இந்தியாவின் ஜனத் தொகையும், கல்வி நிலையும்.

சென்ற பத்து வருஷத்திற்கு முன் எடுக்கப்பட்ட ஜன கணித கணக்குப்படி இந்திய ஜனத்தொகை சுமார் 32 கோடியாகும். இப்பொழுது அதாவது 1931ல் எடுத்த ஜனக்கணிதப்படி இந்திய ஜனத் தொகை சுமார் 35¼ கோடியாகும்,, இவர்களில் 100க்கு 11 பெயர்களே பட்டணங்களில் வசிக்கின்றவர்கள். பாக்கி 89 பெயர்கள் கிராமவாசிகள். 100க்கு 67 பேர்கள் விவசாய ஜீவிதக்காரர்கள். பாக்கி 100க்கு 33பேர்கள்கூலி தொழிலும் மற்றும் பல வகை உத்தியோகம் முதலிய ஜீவிதங்களிலும் வாழ்கின்றவர்கள். ஜன சங்கையும், அவர்களதுவாழ்க்கையும், ஜீவனமும் இங்கிலீயில் இருக்க இனி இவர்கள் கல்வி நிலையைப் பற்றி சற்று விசாரிப்போம்.

## கல்வி விகிதம்.

மேல்கண்ட 1931ம் வருஷத்திய ஜன் கணிதப்படி மொத்த ஜனத் தொகையில் பகுதி சமூகமாகிய ஆண் சமூகத்தில் 100க்கு 15½ பேரும், மொத்த ஜனத்தொகையில் மற்றப்பகுதி பேர்களாகிய பெண்சமூகத்தில் 100க்கு 2¾ இரண்டே முக்கால் பேர்களுமே எழுதப் படிக்க கற்று இருக்கிறார்கள் என்று மேற்படி கணக்கு புள்ளி விபரத்தில் இருந்து தெரிகின்றது. "வாசித்திருக்கிறார்கள். என்றால் பி.ஏ.,எம். ஏ. வாசித்தவர்கள்என்றோ,அல்லதுதமிழ் முதலிய தம் தம் தாய்பாஷைகளையாதமிழாவது நன்றாக எழுதப்படிக்கத் தெரிந்திருக்கிறார்கள் என்றோ கருதி விடுவது ஏமாற்றத்தைக் கொடுக்கக் கூடியதாகும். எனவே மேல் கண்ட புள்ளி விபரமானது தங்கள் தங்கள் பெயர்களை எழுதுவதற்கே, அதற்குள்ள எழுத்துக்களை வேறு ஒருவர் எழுதிக்காட்டினாலொழிய எழுதமுடியாத விற்பன்னர்களையும் சேர்த்துக் கூட்டிக்கணக்கெடுத்த புள்ளி விபரமே ஆகும்,

ஆண் பெண் அடங்க மேல் கண்ட 35¼ கோடி ஜனங்களிலும் மேல் கண்ட மாதிரி கையெழுத்துப் போடக்கூடியவர்களையும் சேர்த்து கணக்குப் போட்டு மொத்த ஜனத்தொகை விகிதாசாரம் பார்த்தோமானால் 100க்கு 9¼ பேர்களாழி கள் தான் மேற்கண்டவாறு எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள் என்னும் கணக்குக்கு வரக்கூடும்

ஆகவே இந்திய மக்களின் கல்வி யறிவு 100-க்கு 9¼ பேர்வழிகள் தான் மேற்கண்டவாறு எழுதப்படிக்கத்தெரிந்தவர்களாகிறார்கள்.

இதற்குத் தான், அதாவது இந்த மக்களைக் கொண்ட நாட்டுக்கு தான் ஞான பூமி என்றும், கம்பன் கானி தாசன் வள்ளுவர் ஔவை பிறந்த பூமி என்றும் பேசி இந்தியாவின் கல்வி ஞானத்தைப் பற்றி சதா புகழ் மாலை பாடிக் கொள்ளப்படுகின்றது.

## தாழ்த்தப்பட்டார் விகிதம்.

இது ஒரு புற மிருக்க இக்கல்வியின் பிரிவினையைப் பற்றி சற்று விவரித்துப் பார்ப்போம். இந்தியமக்களில்சராசரி100க்கு 9¼போதான்கையெழுத்துப் போடத்தெரியும் என்ற கல்வி கற்றிருக்கின்றார்கள் என்றாலும் இதில் எல்லா சாதியிலும் எல்லா சமூகத்தியிலும் எல்லாப் பிரிவிலும் இந்த சராசரி 100க்கு 9¼ பேர் என்கின்ற கணக்கு விகிதமாவது இருக்கின்றதா என்று பார்த்தால் அந்தப்படி பார்ப்பது என்பதே ஒரு பெரிய வகுப்பு வாதமாகவும் வகுப்பு துவேஷமாகவும்தான்முடியும். அதோடுமொத்திரமல்லாமல் சற்று அழுத்திப் பேச ஆரம்பித்துவிட்டோமேயானால் பிறகு அது ஒரு பெரியதேசத்துரோகமாகவும்முடிந்து விடும். பிறகு இந்த தேசத்துரோகம் என்றதீர்ப்புக்குதோழர்காந்தியின் மேலொப்பமும் ஏற்பட்டுவிடும். ஆனால் நாம் அதற்கு பயப்படப் போகின்றோமா? தலைக்கு மேல் போகும்வெள்ளம்ஜாண் போனலென்ன? முழம் போனலென்ன? ஆகவேபிரித்து கணக்குப்பார்த்தால் இந்தியாவில் உள்ள அநேக வகுப்புகளில்100க்கு 100 பேர் தற்குறிகளாகவும்சில வகுப்புகளில் 100-க்கு 100 பேர் எழுதப்படிக்கத்தெரிந்தவர்களாய் மாத்திரமல்லாமல் பி. ஏ., எம். ஏ., முதலிய பட்டம் பெற்ற பண்டிதர்களையும் கொண்டவகுப்பினர்களாவும் சமூகமாய்இருக்கிறார்கள்.

உதாரணமாக சில ஊர்களில் பார்ப்பனர்களை எடுத்துக்கொண்டால் 100-க்கு 100 பேர் படித்து இருக்கிறார்கள். பல ஊர்களில் பரையர்களை எடுத்துக்கொண்டால், பள்ளர்களை எடுத்துக்கொண்டால், சக்கிலியர்களை எடுத்துக்கொண்டால் மற்றும் இதுபோன்றபலதாழ்த்தப்பட்ட வகுப்புகளை எடுத்துக்கொண்டால் 100-க்கு 100-பேர் எழுத்தென்றால்

ரூபாய்க்கு எத்தனைபடி என்று கேட்கக்கூடியதற்குநிகளாகவே இருக்கிறார்கள்.

### பெண்கள்.

பெண்கள் சமூகமும் அப்படியே சில சமூகத்தில் பார்ப்பனர் சமூகத்தில் சில இடங்களில் 100-க்கு நாறு பெண்கள்படித்தவர்களாகவும் அவர்கள்அல்லாதமற்ற அனேக சமூகத்தில் 100-க்கு 100 பெண்கள் எழுத்துவானே அறியாதவர்களாகவும் இருக்கிறார்கள். இவற்றைபற்றி யாராவதுகேட்டால் அதாவது 'பார்ப்பனர் மாத்திரம் ஆணும், பெண்ணும் 100-க்கு 100 பேர் எப்படி படிததார்கள்? பரையர்கள், பள்ளர்கள் முதலிய வகுப்பார் மாத்திரம் 100-க்கு 100-பேர் என் தற்குறிகளாய் இருக்கிறார்கள்' என்றுகேட்டால்இதற்குபதில் இது வகுப்பு துவேஷம் அல்லதுவகுப்புவாதம் என்று சொல்லுவதைத்த விரவேறுசமாதானம் இல்லவேஇல்லை

### கோடுமை! கோடுமை!!

பார்ப்பானும், பாப்பாத்தியும் கோவணம் கட்டிக்கொண்டு பாடுபட்டு, மண்வெட்டி, தண்ணீர் பாய்ச்சி தெருவில் கல் உடைத்து கஷ்டப்பட்டு சம்பாதித்து படித்தார்களா? மற்றபடி பறையனும், பள்ளனும், பஞ்சகச்சம்போட்டு பட்டு வேஷ்டி உடுத்திக்கொண்டு, மூன்று வேளுகுளித்து முழுகி நகத்தில் அழுக்குப்படாமல் தெருத்திண்ணையில் உட்கார்ந்தவண்ணமே ஊரானிட மெல்லாம் கும்பிடும் காணிக்கையும் பெற்று, சாம்பலையும்,ஆசீர்வாதத்தையும் கொடுத்து படித்தார்களா என்று யோசித்துப்பாருங்கள். பாடுபட்ட கூட்டமெல்லாம் பட்டினியாய் கிடபதோடு, தற்குறிகளாக இருக்கவும், பாடுபடாத கூட்டமெல்லாம் தின்று கொழுக்கவும், பி. ஏ., எம். ஏ., படித்து மாதம் 1000, 10000 ரூபாய் சம்பாதிக்கவும், கெம்பு வைரத்தோடும் பஞ்சர்ஸ் பெங்களூர் புடவையும், பீச்சுரோட் மோட்டார் சவாரி உல்லாசமாக யிருக்கவும் எப்படி ஏற்பட்டது? என்பதுதான் இங்கு கவனிக்கவேண்டிய விஷயமாகும். எனவே இதைப்பற்றி பேசப்போனால் இதை சோஷியலிச மென்றே போல்ஷவிசமென்றே, கம்யூனிச மென்றே சொல்லிவிட்டால் போதுமா? இது கம்யூனிசமாய் இருந்தால் என்ன, அவாகள் பாட்டனிச மான கொள்ளை கொலைகாரிசமாய் இருந்தால் என்ன? மேற்கண்டபடி நடக்கின்றதா இல்லையா என்பதும். இந்த நிலை திருத்தப்பாடடைய வேண்டுமா வேண்டாமா என்பதும் தான் இங்கு நமது கவலை.

### அரசாங்கஇ யோக்கியதை.

உலகத்திலேயே நாகரீக அரசாட்சி என்று பேர் வாங்கிய பிரிட்டிஷ் அரசாங்கம் இந்தியாவுக்கு வந்து 150 வருஷ காலம் ஆன பிறகும் பார்ப்பான் 150க்கு 150 பேர் படித்திருக்கவும், பறையன் 150க்கு 150 பேர் தற்குறியாயிருக்கவும் காரணம் என்ன என்பதற்கு என்னபதில் சொல்லக்கூடும். இப்படிக்கேட்பதை அராஜகம் என்றே போல்ஷவிசம் என்றே சொல்லி இனியும் ஏமாற்ற மோ மிரட்டவோ முடியுமா? என்று கேட்கின்றோம்.

பார்ப்பனர் முதலிய "உயர்ந்த" ஜாதியார் என்பவர்கள் செய்யும் வேலையையும் அதனால் ஏற்படும் பல னையும், பறையன் முதலான 'தாழ்ந்த" ஜாதியார்கள் என்பவர்கள் படும் பாட்டையும் அதனால் ஏற்படும் பய னையும் சற்று சிந்தித்துப்பார்க்கட்டும். சோம்பேரிகள்—ஜாரார் உழைப்பில் பயன் அடைபவர்கள்,கொள்ளை கொள்ளையாய் சம்பாதிக்கவும் பொருள் சேர்க்கவும், அவர்கள் வீட்டுப் பிள்ளைகள் தலைமுறை தலைமுறையாய் யிற்றிலிருந்து வரும்போதே புஸ்தகத்துடன் வரவும் தலைமுறை தலைமுறையாய் படிக்கவும் தலை முறை தலை முறையாய் மாதம் 400, 500, 1000, 5000 வீதம் சம்பாதிக்கவும், பாடு படுகின்ற வன் கஷ்டப் பட்டு உழைப்பவன் ஏழையாகவே இருக்கவும் அவன்பிள்ளை குட்டிகள் வயிற்றிலிருந்து வரும்போதே எர், மண்வெட்டி, சம்மட்டியுடன் வரவும் தலைமுறை தலைமுறையாய் தற்குறியாகவேயிருக்கவும் தலைமுறை தலைமுறையாய் இருக்க இடமில்லாமல் ஒண்ட நிழல் இல்லாமல் பட்டினியினால் நோயினால் மடிவுமான நிலைமைக்குயார்காரணம்? யார் காரணமாயிருந்தாலும் அக்காரணங்களும் காரணஸ்தர்களும் அடியோடு அழிய வேண்டாமா? அழியவிட்டாலும் ஒழியவேண்டாமா? ஒழியா விட்டாலும் மாறவேண்டாமா என்று கேட்கின்றோம்.

இம்மாதிரியாகக்கல்வித்துறையில் தின ஜன கணிதத்தில் 100க்கு 7 பேர்கள்தான் படித்தவர்கள்இருந்தார்கள் என்று கூப்பாடு போட்டது இந்த "காருண்யசர்க்கார் நாகரீகசர்க்கார்" காதுக்குக் கேட்கவில்லைஎன்று சொல்லிவிட முடியுமா? அல்லது இந்த "பொதுஜனதலைவர்கள்-மகாத்மாக்கள்" காதுகளுக்குகேட்கவில்லை என்று சொல்லிவிட முடியுமா? 10, 12 வருஷ காலமாக ஒத்துழையாமை, சுயராஜ்யக் கிளர்ச்சி, உப்பு சத்தியாக்கிரகம், பரதேசி மறியல், ஹரிஜன சேவை ஆகிய காரியங்கள் எவ்வளவு நடந்தன? எத்தனைகோடி ரூபாய்கள் இந்தக்காரியங்களுக்காக என்று வசூல் செய்து ஜாரிலுள்ள சோம்பேரி கூட்டம் பெண்டு பிள்ளைகளுடன் கொள்ளை கொண்டன ஆனால் இந்த மாதிரியான கல்விநிலையைப் பற்றி ஏதாவது மூச்சாவது பேச்சு உண்டா என்று கேட்கின்றோம். அதுபோல காருண்ய நாகரிக சர்க்காருக்கும் நல் அரசாட்சி செய்ய வேண்டும் என்ற ஆசையால் இந்திய மக்களை காப்பாற்ற தங்களால் அல்லாமல் மற்றவர்களால் முடியவேமுடியாது என்ற முடிவால் செலுத்தி வந்த தர்ம நீதி ஆட்சியால் இந்த 10 வருஷ காலத்தில் மக்களுக்கு ஏற்பட்டகல்வி அறிவுஞானம்எவ்வளவு? என்பதை ஒரு கடுகளவு அறிவுள்ள நடுநிலைமை ஞானமுள்ள ஒரு மனிதன் கவனித்தால்இதைவிட கொடுங்கோலாட்சியும் இந்தத் தலைவர்கள் மகாத்மாக்கள் என்பவர்களை விட ஏழை மக்கள் துரோகிகளும் உலகத்தில்எதெங்காவது இருக்கின்றார்கள் என்று சொல்ல முடியுமா என்று கேள்க்கின்றோம். அர்த்தமற்ற உப்பு சத்தியாக்கிரகத்திலும் சூட்சிநிறைந்த கோவில் நுழைவிலும் தான் கவலை இருக்கின்றதேதவிர அதைப் பற்றிய விளம்பரங்களை விஷத்தைப் போல் மக்கள் மனத்தில் புகுத்த படுகின்றதே தவிர இந்த தாழ்த்தப் பட்ட மக்கள் கல்வி அறிவைப் பற்றி பேசப்படுகின்றதா? அதற்காக ஒரு கடுகளவு கவலை கொள்ளப் படுகின்றதா என்று பாருங்கள். இதன் கருத்துதன்ன? எந்தக் காரணத்தாலாவது உலகில் 100க்கு 90 மூடர்கள் எழுத்து வாசனை அற்ற பாமரர்கள் இருந்தால் தான் 100க்கு 10 வீதமாவது அயோக்கியர்கள் சோம்பேரிகள், பேராசைக்காரர்கள், ஜாரார் உழைப்பில் வயிர் வளர்ப்பவர்கள் ராஜாக்கள் மகாராஜாக்கள் சக்கரவர்த்திகள்ஜமீன்தாரர்கள், மகாத்மாக்கள் சங்கராச்சாரிகள் பண்டார சன்னதிகள் புரோகிதர்கள் குருமார்கள் முதலாகிய பக்கல் கொள்ளைக் கூட்டம் வாழமுடியும். என்பதேயாகும். ஆதலால் இங்கிலையில் மக்களுடைய கல்விபைப்பற்றியோ அறிவைப்பற்றியோ, பகுத்தறிவும் ஞானத்தைப்பற்றியோ பேசுவது என்பது அரசாங்கங்களுக்கும் தேசியத்திற்குமே விரோதமான காரியமாகிவிடும். ஆகவே சுயமரியாதை சமதர்மக் கட்சியார் என்பவர்கள் அரசியலில் பிரவேசித்து சட்டசபைகளுக்கு போவதாலல் அவர்கள் அடுத்த மூன்று வருஷக்காலத்திற்குள் கல்வித்துறையில் தாழ்த்தப் பட்டவர்களில் 100-க்கு இத்தனை வீதம் உள்ள மக்களுக்கு நன்றாய் எழுதப்படிக்க கற்றுக்கொடுப்பது என்பதாக ஒரு மூன்றுவருஷத்திட்டம் போட்டு அதில் பெரும்பாலும் உழைப்பதாகவும் உறுதி செய்து கொள்ளவேண்டும். கள்ளுக்கடை மறியலும், பரதேசி துணிமரியலும் கோவில்நுழைவும் பார்ப்பன காங்கிரசுக்கும் வயிற்றுப்பிழைப்பு தேசியத்திற்கும் விட்டுவிட வேண்டியதே. ஒழிய அவைகள் இந்தக்கல்விக்கொடுமையைவிட பிரமாதமான காரியமல்ல. ஆகையால் இவ்விஷயத்திற்கு இப்போதேஒரு திட்டம்வகுத்துக்கொள்ள விரும்புகின்றோம்.

## வேண்டுகோள்.

நமது மகாணத்தில் ஆங்காங்குள்ள சுயமரியாதை சங்கத்தார்களும், மற்றும் அதன் லக்ஷியத்தையே லக்ஷ்யமாய்க் கொண்டு நடைபெற்று வரும் சங்கத்தார்களும் தங்கள் தங்கள் சங்கத்தின் ஊர் பேர். நிர்வாகஸ்தர்கள் பெயர், அங்கத்தினர்கள் எண்ணிக்கை முதலியவைகளைக்குறித்த விபரம் ஒன்று உடனே தெரிவிக்க வேண்டுகிறோம். எனெனில் துண்டு பிரசுரங்களையும், சிறு புத்தக வெளியீடுகளையும் அப்போதைக்கப்போது அனுபவி வரவும் கடிதப் போக்குவரத்து வைத்துக் கொள்ளவும், சங்கங்களைக் குறித்து ஒரு சிறு புத்தகம் வெளியிடவும் வேண்டியிருப்பதால் அதன் விபரங்களை உடனே அனுப்பக்கோருகின்றோம். உடனே சிக்கிரத்தில் புதியதாய் ஏற்படுத்தக் கூடியதையும் ஏற்படுத்தி விபரம் தெரிவிக்க விரும்புகின்றோம்.

## நாடார் மகாஜன சங்கம்.

சென்ற டிசம்பர் மாத இறுதியில் சென்னையில் கூடிய நாடார் மகாநாடு; நாடார் வாலிபர் மகாநாடு, நாடார் கல்வி மகாநாடு ஆகியவைகளின் தலைவர்களின் சொற்பொழிவுகளும், தீர்மானங்களும் இன்று நமது பத்திரிகையின் வேறிடத்து பிரசுரிக்கப்பட்டிருக்கின்றன. பொருளாதார நெருக்கடியால் பல்வேறு தொல்லைகளுக்குட்பட்டு வரும் உலகிற்கும், சுயமரியாதை இழந்து பரிதவிக்கும் இந்திய மக்களுக்கும் நாடார் மகாநாட்டுத்தலைவர்களின் சொற்பெருக்குப் போதிய வழி காட்டியாயிருக்கு மென்பதில் இருதிக்கமில்லை. வாலிபர்கள் மகாநாட்டிற்கில்லை வகித்த தோழர் கூ. சா. ஜ. பெரியசாமி அவர்களின் தம் சொற்பொழிவு பல துண்பொருளை அடக்கிக்கொண்டிருக்கிறது என்பதில் ஒரு சிறிதும் மிகையாகாது. வருமை நோய் சேவலி யில்லாத்திண்டாட்டம்!!! பொருளாதார நெருக்கடி!! பஞ்சம்!!! என்னுமிவ்வாழ்வைப் போக்கும் வழிதெரியாது பரிதவிக்கும் உலகிற்கு, "ருஷ்ய தேசத்தின் மால்கோ என்ற நகரிலுள்ள 8 முதல் 13 வயதுவரையுள்ள பள்ளிக்கூடங்கள் ஒரு சங்கமாகச் சேர்ந்து படிக்கும் நேரம் நீங்கலாக மற்ற நேரங்களில் படியாத தொழிலாளர்கள் வசிக்குமிடங்களுக்குச் சென்று அவர்களுக்குப் படிப்புச் சொல்லிக்கொடுக்கிறார்கள். மற்றும் தேசமுன்னேற்றத்திற்கான வழிகளில் சித்தத்தைச் செலுத்தி வருகிறார்கள். சிறு பிராயத்திலிருந்தே இவர்களுக்குத் தொழில், விபசாயம், ரசாயனம் முதலிய கல்விகளோடுதேகப்பயிற்சிக்கான வகுப்பிலும் கல்வி போதிக்கப்பட்டு வருகிறது. தேசப்புனருத்தாரண காரியத்தில் சிறுவர் சிறுமிகள் ஈடுபடுகிறார்கள். இதனாலன்றோ, வேலையில்லாத்திண்டாட்டமும் வருமைப்பிணியும், வியாபார மந்தமும், பொருளாதார நெருக்கடியும், அடிமைத்தனமும் அங்காட்டிலில்லை. ருஷ்யாவின் முற்போக்கைக்கண்டு இதர வல்லரசுகளும் திடுக்கிடுகின்றதென்றால் அங்காட்டின் செல்வச் சிறப்பை சொல்லவும் வேண்டுமோ" என்று குறிப்பிட்டிருப்பது நாம் அடிக்கடி. உலகப் பொருளாதாரக் கஷ்ட நிவர்த்திக்கு சுதந்தரமே வேண்டுமென்பதை உண்மையை வலியுறுத்தியிருப்பதோடார்புவர்கள் மட்டுமல்ல மக்களனைவருமே கவனிக்கத்தக்கதாகும். மகாநாட்டின் தீர்மானங்களிற் பெரும்பாலும் சமதர்மத்தீர்மானங்களேயாதித்திருக்கிறதென்று கூறலாம். நாடார் மக்கள் தங்கள் தலைவர்களின் சொற்பொழிவுகளையும் தீர்மானங்களையும் நன்குணர்ந்து யாண்டும் சமதர்மம் நிலைத்தெய்ய அவனபுரியமுன்வருவார்களாக.

---

## பகுத்தறிவு நூற்பதிப்புக் கழகம் லிமிட்டெட்.

குடி அரசில் எற்னவே அறிவித்திருந்தபடி நாடெங்கும் மூடநம்பிக்கையை யோட்டி பகுத்தறிவுக் கொள்கையைப் பரப்பும் நோக்கத்துடன் ஆங்கிலம்தமிழ் முதலிய பல மொழிகளின்மூலமாய் பத்திரிக்கைகள் நூற்கள்முதலியன வெளிப்படுத்தியும் மொழிபெயர்ப்பு நூற்கள் பல வெளியிடவிரும்பியும் பகுத்தறிவு இயக்கத்தை ஆதரிக்கும் தோழர்களை டைரைக்டர்களாகக் கொண்டு பகுத்தறிவு நூற்பதிப்புக்கழகம் 13-12-32ல் லிமிட்டெட் கம்பெனியாக ரிஜிஸ்டர் செய்யப்பட்டிருக்கிறது. சமீபத்தில் வேலையாரம்பிக்கப்படும் இலைகளைப் பற்றி எல்லைய விபரங்கள் அறிய விரும்புகிறவர்கள் அடியிற்கண்ட விலாசத்திற்கு எழுதிக்கொள்ளவும்.

விலாசம்:—

அ. இராமகன்,
நிரந்தரக்காரியதரிசி
பகுத்தறிவு நூற்பதிப்புக் கழகம்
லிமிட்டெட்
43. கச்சேரிவீதி
ஈரோடு.

---

## 1933ல் மதமில்லை

### சமதர்ம இயக்கத்தை எதிர்த்த பிஷப்புக்குத் தண்டனை.

ரஷியாவில் ஆரஸ்பர்க்கைச்சேர்ந்த பிஷப்பு "கடவுள் எதிர்ப்பு" இயக்கத்திற்கு அதாவது நாஸ்திக இயக்கத்திற்கு எதிராகப் போராடியதற்காக அவருக்கு சோவியத் சர்க்கார் 6 வருஷம் சிறைதண்டனையும், 5 வருஷம் தேசப்பிரஷ்ட தண்டனையும் விதித்தனர். சோவியத் 1933ம் வருஷத்திற்குள் ரஷியாவிலுள்ள எல்லா மதங்களையும் ஒழித்து விடவேண்டுமென்று திட்டம் போட்டிருக்கின்றனர்.

## "சுப்பராயன் மகோதா" விளம்பரம்.

கோவில் பிரவேச மகோதா என்னும், டாக்டர் சுப்பராயன் மகோதாவுக்கு சிறிது காலத்துக்கு முன் ஜின்டான் மாத்திரைக்குச் செய்யப்பட்ட விளம்பரத்துக்கு மேலாகவே செய்யப்பட்டு வருகின்றது. இவ் விளம்பரம் தோழர் ராஜகோபாலாச்சாரி சிபார்சின் மீது தோழர் காந்தியாலும் செய்யப்பட்டு வருவதைக் கண்டு டாக்டர் சுப்பராயனேப்பாராட்டாதவர்கள் இல்லை. டாக்டர் சுப்பராயன் அவர்களுக்கு இது ஒரு சகட யோகமேயாகும். ஆனால் மகோதாவின் யோக்கியதை என்ன என்பதையும், பயன் என்னவென்பதையும், இதன் கருத்து என்னவென்பதையும் எதை உத்தேசித்து இத்தப் பித்தலாட்ட பிரசாரம்மகாத்மாக்களாலும், தேசிய பத்திரிக்கைகளாலும் நடைபெருகின்றது என்பதை சேகரத்தில் நாமேவிவரமாகவெளிப்படுத்திருக்கிறோம். சிறிது தாமதம் ஆவதால் ஒன்றும் முழுகிப்போகாது. ஆதலால் அது சம்மந்தமாக வந்திருக்கும் பல வியாசங்களை வெளியிடாததற்கு நிருபர்கள் பொருத்துக் கொள்வார்களாக.

---

## கத்தோலிக்கர்களுக்கோர் விண்ணப்பம்.

நமது பகுத்தறிவு இயக்கத்தைதாக்கி எழுதும் முறையில் திருச்சி "இன்ஸ்ரோவி" என்றஆங்கில மாதச்சஞ்சிகையையும், சர்வோதயா என்ற ஒரு தமிழ் வாரப்பத்திரிகையும் நம்மை திட்டி எழுதியிருந்தவைகளை நமக்கோர் நற்சாட்சிப்பத்திரமாக எண்ணி நமதுகொள்கைகளை ஆதரிக்கும் அமெரிக்கா, ஐரோப்பாவிலுள்ள பகுத்தறிவு இயக்க ஸ்தாபனங்களுக்கு அதன் பிரதிகள் சிலவற்றை வாங்கி அனுப்பினேம். அவர்கள் நமது தொண்டைக்கண்டு மகிழ்ந்து அதற்கு வெகுமதியாக 1. Priest the Women and the Confessional 2. Question for Catholics 3. Roman Catholicism Analyzed 4. Fifty years in the church of Rome 5. Confession of a Nun முதலிய புத்தகங்களை அனுப்பியுள்ளார்கள். அவைகளின் மொழிபெயர்ப்பு இனி குடி அரசில் வெளிவரவேண்டி வரும். கத்தோலிக்கர்களுக்கும் மற்ற வைதீக கிறிஸ்துவர்களுக்கும் நாமாக ஏதாவது சொல்வதாயிருந்தால்தான் அவர்கள் கோபித்துக்கொள்ள இடமேற்படலாம். ஆதலாலேயே இனிகத்தோலிக்கு பாதிரிகளும், பிஷப்புகளும் மற்றும் கிறிஸ்துய அறிஞர்களும் சொன்னவற்றையேமுதலில்சமர்ப்பிக்கிறோம். இதற்கும்கூடகோபிப்பார்களோ என்னமோ தெரியவில்லை. நம்மைக்கண்டிப்பவர்கள்நாம் எழுதியவைகளை எடுத்தெழுதியோ, எழுதியோ அவற்றிற்கு சமாதானத்துடன் கண்டித்தால் மிகவும் நன்றி. உள்ளவர்களாய் இருப்போம் என்பதை அன்புடன் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

---

## இடமில்லை.

குடி அரசு பத்திரிகையில் பல முக்கிய வியாசங்கள் வெளிவருவதற்கே இடம் போதாமல் கஷ்டப்பட வேண்டியிருப்பதால் நிருபர்கள் அனுப்பும் பல வியாசங்கள் செதிகள் முதலியவைகளை உடனுக்குடன் பிரசுரிப்பதற்கு முடியாமல் இருக்கின்றதுடன், சிலவற்றிற்கு இடம் கிடைப்பதே கஷ்டமாய் இருக்கின்றது. ஆகையால் நிருபரேயோர்கள் தங்கள் வியாசங்களையும், சேதிகளையும் பிரசுரிக்கவில்லை என்று மனவருத்தமடையாதிருக்க வேண்டப் படுகிறோம்.

---

## சீன-சோவியத் உறவு
### ஜப்பானை பாதிக்காது.

டொகு உடமைக் கட்சியின் மத்தியக்கமிட்டித் தலைவர் கமிட்டியின் விசேஷக் கூட்டத்தில் பேசியபோது ரஷியா இப்பொழுது புதிதாக சீனவுடன் ஒப்பந்தம் செய்ய உறவு கொண்டிருப்பதால் ரஷியாவுக்கும், ஜப்பானுக்குமுள்ள நேசபான்மைக்குப் பங்கம் நேரிடுமென்று கருதப்படும் கருத்தைப் பரிகாசம் செய்து பின் வருமாறு கூறினர்:—ரஷியா தனது பொருளாதாரத் திட்டத்தை கவனிப்பதற்கே அதுதனது கவனத்தைச் செலுத்த வேண்டியிருப்பதால் அண்ணிய நாடுகள் ஒன்றுக்கொன்றுள்ள தகராறுகளில் அது தலையிடுவதற்கு ரஷியாவுக்கு அவகாசம் கிடையாது. கீழ்நாடுகள் சம்பந்தமாக சோவியத் சர்க்கார் கொண்டுள்ள கொள்கை சமரசமானது. உலகப்பொருளாபிவிருத்தி கலன்களில் மீட்சியை ஏற்படுத்த எல்லா அமைதியான நாடுகளுடனும் ஒத்துழைக்க சோவியத் சர்க்கார் விரும்புகிறது.

## ஆதிதிராவிடர் பொதுக்கூட்டம்.

24.12-32- ந்தேதி மாலை 5மணிக்குகூடப்பட்டணம்பழையகால்நடை ஆஸ்பத்திரிக்கு அருகாமையிலுள்ள திடலில் ஓர் பொதுக்கூட்டம் தோழர் வேலு தலைமையில் கூடியது. தலைவர்மு கவுரைக்குப்பிறகு "தீண்டாமை" சம்பந்தமாகவும், "ஆதிதிராவிட வாலிபர் முன்னேற்ற வாசகசாலை" என்று ஒன்று ஏற்படுத்துவதைக்குறித்தும் தோழர்கள் வி. சாமிநாதன், கே. முருகேசன், வாத்தியார், ஆர். வி. கோபால், நாகலிங்கம், எ. சிவராமசாமி, முதலியவர்கள் சொற்பொழிவாற்றினர்கள். இறுதியாக பல ஆதிதிராவிட தோழர்கள் வாசகசாலை மெம்பர்களானர்கள். கூட்டம் இரவு 8மணிக்கு கலைந்தது.

ஈரோடு

மோட்டார் சொந்தக்காரர் சங்கம்.

——:0:——

ஈரோடு தாலூகா மோட்டார் பல் சொந்தக்காரர்களின் சங்கம் 20-12-32 மாலை 4 மணிக்கு பவானி யூனியன் மோட்டார் சர்வீஸ் ஆபீசில் தோழர் கே. ரங்கசாமி அய்யங்கார் அவர்களின் தலைமையின் கீழ் கூடியது. கூட்டத்திற்கு உள்ளூர் பஸ் சொந்தக்காரர்கள் எல்லோரும் விஜயம் செய்திருந்தார்கள். அதிசமயம் சொற்பொழிவாற்றிய தோழர்களான ராகை என்.பி. காளியப்பன் அ. இராகவன் முதலியோர்கள் பஸ் சொந்தக்காரரின் கடமையும், ஒற்றுமையையும் தொழிலின் முன்னேற்றமும் என்பதைப்பற்றி பேசியபின், தலைவரவர்களால் இன்று ஆரம்பிக்கப்பட்ட இச் சங்கத்தில் எல்லா பஸ் சொந்தக்காரர்களும் அங்கத்தினராய் சேரும்படி கேட்டுக் கொண்ட பின், இதற்குரிய காரியங்களை யெல்லாம் கவனிப்பதற்கு தோழர் ரங்கசாமி அய்யங்கார் அவர்களையே காரியதரிசியாயிருக்க வேண்டு மென்று சபையோர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு ஏகமனதாய் நிறைவேற்றப் பட்டது. அங்கத்தினராய் சேரவிரும்பும் ஒவ்வொரு பஸ் சொந்தக்காரரும் அவரவர்களிடம் இருக்கும் பஸ் ஒவ்வொன்றிற்கும் பிரதி வாரம் புதன்கிழமையன்று பஸ் ஒன்றுக்கு ஒரு ரூபாய் வீதமும், சிறிய பஸ் உடையவர்கள் பஸ் ஒன்றுக்கு எட்டணா வீதமும் சந்தா செலுத்த வேண்டுமென்ற தீர்மானம் ஏகமனதாய் நிறைவேறியது. மற்றும் ஜில்லா போர்டாரவர்களால் சாலைடவில் கொஞ்சம் கொஞ்சமாக வரியை உயர்த்தி தற்சமயம் அதிக வரி வசூலித்துக் கொண்டு வருவதைப்பற்றி வருந்தி மேல்குறித்த வரி விகிதத்தை 1927-28 வருஷங்களில் வசூலித்தபடியே தற்சமயம் குறைத்துக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்வதாய் சங்கத்தின் மூல்யமாக மகஜர் செய்து கொள்வதென்ற தீர்மானம் நிறைவேறியது.

சங்க கேட்டுகளை நீக்கியதற்கு பதிலாக மோட்டார்காரர்களுக்கு மாத்திரம் மாகாணவரி யென்று ஏற்படுத்தியதை வருஷத்திற்கு நான்கு தவணைகளாக பிரித்து பிரதி கால்வருஷங்களிலும் 23 பிரயாணிகள் உட்காரக்கூடிய பஸ் ஒன்றுக்கு ஒவ்வொரு கால் வருஷத்தில் 172-8-0 வீதம் வருஷம் ஒன்றுக்கு 690 ரூபாய் வரி வசூலித்து வருவதைக் கண்டித்தும் மேல்கண்ட வரியை பஸ் சொந்தக்காரரின் கஷ்ட நிலைமையை உத்தேசித்துக்குறைத்துக்கொடுக்க வேண்டுமென்றும், மேற்கண்ட வரிவிதம் ஏற்பட்ட முதல் வருஷத்தில் தவணை செலுத்தும் பிரதி கால் வருஷங்களிலும் 14 தினம் தவணை கொடுத்திருந்ததை இப்பொழுது நிருத்தி அந்தந்த கால் வருஷங்களின் முதல்தேதியே செலுத்த வேண்டுமென்று ஏற்பாடாயிருப்பதைக் கண்டித்தும் மூன்றாவது தீர்மானமாக மோட்டார் சொந்தக்காரர்களின் மாதிரி 14நாள் தவணை கொடுக்க வேண்டுமென்றும், அது விஷயமாக மகஜர் மூலமாக கவர்ன்மெண்டாரவர்களுக்கு தெரியப் படுத்திக் கொள்வ தென்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டது என சங்கக்காரியதரிசி எழுதுகிறார்.

——

கராச்சியில்

பிரமசமாஜ வருஷ விழா.

——

போது உடமைக்கோள்கையே சமத்வம் நல்க வல்லது.

1-1-33-ல் நடைபெற்ற பிரம சமாஜ விழாவில் பல மதங்களின் பிரதி நிதிகளின் மகாநாடொன்று கூடப்பட்டது. நடவடிக்கைகளை ஆரம்பித்து வைத்து சாது வாஸ்வானி பேசியபோது பின் வருவாறு தெரிவித்தார்;—தற்காலம் ஜன சமூகம் சீர்கேடுற்றிருக்கிறது. மேனாட்டார் மதத்தை ஒரு லாகிரி வஸ்து என்று கருதிக் கொண்டிருக்கிறார்கள். ஆதலால் அதற்குப் புதிய வியாக்யானமும் அளிக்கக்கூடிய யோசனைகளை இங்கு வந்திருக்கும் பிரதிநிதிகள் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பல மதங்களையும் சேர்ந்த பிரதி நிதிகள் சீக்கியமதம், யூதமதம், புத்தமதம், இஸ்லாம் மதம், ஆரிய சமாஜ மதம், பிரம்மஞான மதம், முதலிய மதங்களைப் பற்றிப் பேசிய பின்பு டாகடர் தாராசந்திர லால்வானி எழுந்து பொது உடமையைப் பற்றிப் பேசியபோது பின்வருமாறு தெரிவித்தார்:—

பொது உடமைக் கொள்கை ஒப்புக்கொள்ள வேண்டுமென்று சபையோரைக் கேட்டுக்கொள்கிறேன். பௌதிக பதத்தை அவை போதிக்கின்றன. பணக்காரரையும், எளியோரையும் அம்மதம் சமமாக்குகிறது. ஆடவர் பெண்டிர்களுக்கு சமதவத்தை அளிக்கிறது அதில் வெளிமுகமான ஈர்த்தனைகள் கிடையா. பல மதஸ்தாபகர்களாலும் தெரிவிக்கப்பட்ட கொள்கை அதுவாகும். ஆனால் அது ரஷ்யர்களால் மட்டுமே அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது.

பட்டுக்கோட்டை

பனகாலரசர் வாசகசாலை.

ஷ வாசகசாலையின் வாராந்திரக் கூட்டம் 20—12—32ந் தேதி தலைவர் தோழர் எ. சுப்பிரமணியம் அவர்கள் தலைமையில் கூடியது. பின் எஸ். அருணாசலம் "முன்னேற்றம்" என்பது பற்றியும், கோதண்டபாணி "கடவுள் இயற்கையா, செயற்கையா" என்பதுபற்றியும், பி. எஸ். லிங்கம் கே.எஸ்.எஸ். கிருஷ்ணன் "கல்வி" என்பதுபற்றியும் கே. ஈ. ஷேக்பரீத் 'காந்தியும், ஆலயப்பிரவேசமும்' என்பதுபற்றியும் முறையே உபந்யாசம் செய்தனர். இறுதியாக 10 மணிக்கு தலைவர் இரங்கி உரையுடன் கூட்டம் கலைந்ததெனக் காரியதரிசி எழுதுகிறார்.

[8-ம் பக்கத்தொடர்ச்சி]

செப்பனிட்டு கடவுளை உற்பத்தி செய்து தன்னையே கொன்றுகொண்டு ஒரு உதவியும் கிட்டாமல், ஒரு ஏற்பாட்டிலும் அடங்காமல் பரிதவிப்பதை ஒரு பக்கமும், தொழிலாள வகுப்பார் புத்திசாலித்தனமாக வார்த்தைகளுக்கு அடிமைப்படாமல், விஞ்ஞானம், பொதுஜன அபிப்பிராயம் இவைகளில் பணக்கார நன்மைக்கென உற்பத்தி செய்யப்பட்டவை எவை? தங்களுக்கு ஏற்பட்டவை எவை எனக்கண்டறியும் சக்தியுடன் பணக்கார ஜனநாயகத்தையும் தொழிலாளர் ஜனநாயகத்தையும் கண்டுபிடிக்கும் ஆற்றலுடன் மற்றொரு பக்கம் விளங்குவதையும் என் வாசகர்களுக்குவிளக்கப்படக்கூடாது. இதை விட்டு தாங்கள் ஏன் இப்படிச்செய்தீர்கள்?

என் மனம் மிகவும் பதருகிறது.

இப்படிக்குத்தங்கள்.

V. V.

P. S. எதைப்புஸ்தகம் ரிஜிஸ்டர் தபாலில் அனுப்பினேன். அது தங்களுக்குக் கிடைத்ததா? தங்கள் நேக சௌக்யத்திற்குத் தகுந்த வைத்தியர்களைக்கொண்டு மருந்து சாப்பிடவும். இதை நான் வற்புறுத்திச் சொல்லுகிறேன். உடம்பை குணப்படுத்திக் கொண்டால் தான் பணி காலத்தில் சளிப்புப் பிடிக்காமல் பிரயாணம் செய்யலாம். பணி காலத்தில் பிரயாணம் செய்வது ஆபத்தானது.

இப்படிக்குத் தங்கள்,

V. V.

Vladimir Ulyanov

இக்கடிதம் 1913 நவம்பர் மத்தியில் எழுதப்பட்டு 1924ல் லெனின் நிரட்டு முதல் வால்யத்தில் வெளியிடப்பட்டது. தொடரும்

——

கோவை ஜில்லாபோர்டு தேர்தல்.

தோழர் எஸ். என். பொன்னையா வெற்றி.

——

கோபிசெட்டிபாளையம் சர்க்கிள் தாலூகா ஜில்லா போர்டு மெம்பர் கள் தேர்தல் இம்மாதம் 9-ந் தேதி குறிக்கப்பட்டிருக்கிறது அவற்றுள் ஜில்லா போர்டு ஸ்தானம் ஒன்றுக்கு கோவை ஜில்லா போர்டு வைஸ்பிரசிடெண்ட் தோழர் எஸ். என். பொன்னையா அவர்களும், கோபி மாஜி தாலூகா போர்டு பிரசிடெண்ட் தோழர் எஸ். முத்துவேலப்ப கவுண்டரும் முக்கிய போட்டி மெம்பர்களாக ஸ்லிப்பு போட்டு வெகு உக்கிரமமாக தேர்தல் வேலை செய்தார்கள். கடைசியாக தோழர் எஸ். முத்துவேலப்பகவுண்டர் தேர்தலில் நிற்பதிலிருந்து விலகிக்கொண்டதாகவும், தோழர் பொன்னையா அவர்களுக்கே தன்னை ஆதரிப்பவர்களும் ஓட்டுக்கொடுக்கவேண்டுமென்று தெரிவித்துவிட்டதாக தெரிய வருகிறது.

——

ராசிபாளையம்

சுயமரியாதை வாசக சாலை.

31—12—32 தேதி சனிக்கிழமை இராசிபாளையம் உண்மை நாடுவோர் வாசகசாலைக் கட்டிடத்தில் தோழர் கே. கிருஷ்ணன் தலைமையில் நடந்தது. அதுசமயம்இவ்வாசகசாலையின் பெயரான உண்மை நாடுவோர் வாசகசாலை என்ற பெயரை மாற்றி சுயமரியாதை வாசகசாலை என்ற பெயரிடத் தீர்மானிக்கப்பட்டது.

ஜாதிபட்டத்தை ஒழிப்பதால் சட்ட பூர்வமான ஆட்சேபணை ஏதாவதுண்டா என்பதை நமது இயக்க வழக்கறிஞர்கள் மூலம் அறியவேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டதென ஒரு நிருபர் எழுதுகிறார்.

சுயமரியாதைச்சங்கம்.

நாகப்பட்டினம்

18-12-32-ந்தேதி மாலை 6மணிக்கு சங்க வாராந்திரக்கூட்டமென்று சங்க உபதலைவர் தோழர். எம். ஆர். பதி அவர்கள் தலைமையில் கூடியது.

தோழர் வி. சாமிநாதன் "சுயமரியாதைக்கீதம்" பாடினார். தோழர்கள் ஆர். வி. கோபால், வி. சாமிநாதன், கே. முருகேசன் முதலியவர்கள் "சுயமரியாதை இயக்கம் எட்டுவருட காலமாக சாதித்ததென்ன" என்பது பற்றி நீண்டநேரம் பேசினார்கள். பின்பு தலைவர் முடிவுரையோடு கூட்டம் இரவு 8மணிக்கு முடிந்ததென ஒரு நிருபர் எழுதுகிறார்.

1933ஹூ காலண்டர் இனம்!

மதன காமேஸ்வரி லேகியம்.

பெயர்பெற்ற மலபார் கஞ்சா தாது புஷ்டி மருந்து இதுவே. ராத்தல் 1-க்கு ரூ. 8. தபாற் சிலவு அணா 8. கேட்லாக் இனம்.

சித்தஔஷதவைத்தியசாலை, A. போஸ்டு, முல்லச்சேரி,

தென் மலையாளம்.

கொக்கோகம்.

அதிவீர ராமபாண்டியன் பாடியது மூலமும் உரையும் கலிகோ பயிண்ட் 64 வகை சித்தின் பசல் கிளேஸ் போட்டோ படங்கள். சதிபதிகளும் தனிமாதர்களும் சேர்ந்த தனி கட்டடத்தோடு இரண்டு ரூ. 5-0-0

வெளி நாட்டினர் ரூ. 5 8-0 மூன்பணம் அனுப்பவேண்டும்.

T. G. பாக்கியம் & கோ.

வேப்பேரி, சென்னை.

[6-ம் பக்கத்தின் தொடர்ச்சி]

போவதில்லை. மக்களுடைய அறிவு விசாலமானால், மக்கள் அறிவை உபயோகிக்க ஆரம்பித்து விட்டால், 'கடவுள்' போன்ற கற்பனைச்சொற்கள் ஒடி ஒழியும் என்பது நமது முடிபு. படைக்கள்ளிக்கு வந்த பூச்சி நோய் போல் கடவுளுக்கும் ஆராய்ச்சி என்ற ஒரு பூச்சி தோன்றி கடவுளைப்பலமாகப் பீடித்துவிட்டது. அவ்வாராய்ச்சி என்னும் நோயால் கடவுள் திணறிவிட்டார். எனவே இனிக்கடவுள் மிஞ்சப்போவதில்லை. எப்படியும் பிழைக்கவே மாட்டார். இப்படிச் செல்லுவதால் நம் மேல் அவசரமாக மனஸ்தாபம் கொள்ளாமல் ஆலோசித்துப் பாருங்கள். "தட்டுங்கள் (அறிவு) கதவு திறக்கப்படும்" ஆகவே அவசியம் உண்மை விளங்கும். யோசித்துப் பார்த்தால் கோபிக்க மாட்டீர்! இது நிண்ணம்!

ஒரு மணி நேர ஆராய்ச்சிக்கு முன்னால் நிற்க முடியாகடவுளை, தீண்டாதவரை (Untouchables) பார்த்தவுடன் மாண்டுவிடும்கடவுளை "சர்வ வல்லவன்" "அபார சக்தியுள்ளவன்" என்று சொல்லுவது பொருந்துகின்றதா? சர்வ சக்தியுள்ள கடவுள் என் ஒருவர் கண்ணிலும் படாமல் ஒளிந்து திரிய வேண்டும் என்பது தான் தெரியவில்லை. அந்தோ! ஐம்புலனுக்கும் அகப்பட மாட்டாராம்! ஐம்புலனாலும் அறிய முடியாத கடவுளை எப்புலனால் எவ்வாறு கண்டனரோ நமது தோழர் காந்தியார். அல்லது தோழர் காந்தியாருக்குள்ள ஆறாவது புலன் எதுவோ அது.

கடவுளின் அடையாளங்களைப் பற்றியும், குணங்களைப்பற்றியும், பலர் பலவிதமாகச் சொல்லுகின்றனர். இப்படிக்கடவுளைப்பற்றி அபிப்பிராய பேதத்தால் எத்தனை கலகங்கள் நிகழ்கின்றன! கடவுள் வகுத்த மதங்கள் எத்தனை விதமாக இருக்கிறது! அந்தக்கடவுளாவது தனது உருவத்தைபோட்டோ (Photo) மூலம் காண்பிக்கக்கூடாதா? தனது கொள்கைகளைப்பற்றி ஒரு "பிரசங்கம்" செய்யக்கூடாதா? ஏன் ஒழிந்து திரியவேண்டும்? தோழர் காந்தியாரிடம் மட்டும் என் சம்மந்தம் வைத்து சதா கொஞ்சிக்குலாவிக் கொண்டு திரியவேண்டும்? அவருக்கு மட்டும் என் அடிக்கடி கட்டளைகள் இட்டுக்கொண்டிருக்கவேண்டும்.

அல்லது கடவுளிடமிருந்து ஏதாவது அதிகாரம் பெற்றோ, அல்லது எழுத்து மூலமாக பிரதிநிதித்வத்திரம் வாங்கி வந்தவர்களோ உணடோ அல்லது எல்லோருமே காந்தியார் சொல்வதுபோல் "எனக்குக் கடவுள் சொன்னார்" "என்னைக் கடவுள் நடத்துகிறார்" "என்னிடம் கடவுள் நேரில் வந்து சொல்லிப்போனார்" என்று யாவரும் சொல்ல ஆரம்பித்து விட்டால் உலகம்வேடிக்கை மேடையாக ஆகிவிடாதா? காந்தியாருக்கு மாத்திரம் சொல்லும் கடவுள் மற்ற வருக்கு சொல்லாமலிருக்குமா? கடவுள் என்று ஒருவர் இருந்தால் உலகம் இவ்வளவு அல்லோல கல்லோலப்படும்போது நேரில்வந்து உண்மை விளக்கம் செய்யமாட்டாரா? என்பதை யெல்லாம் யோசித்தல்.

"கடவுள்" என்று ஒரு கற்பனைச் சொல்லை ஏற்படுத்தி அதன் பேரால் மதம் வகுத்து அதற்குப் புராணங்கள் தொகுத்து சடங்குகள் கற்பித்து ஒரு கொள்ளைக்கூட்டம் பிழைத்து வருகிறது என்பது தெரியவில்லையா? இக்கொள்ளைக்கூட்டத்தாரின் சொல்லை நம்பியே நமது மக்கள் சின்ன பின்னப்பட்டு அறிவுக்கதவைப்பூட்டி வைத்துவிட்டு அலங்கோலமாய்க் கிடந்து தவிப்பது விளங்கவில்லையா? இவ்வளவு கஷ்டப்பட்டு கடவுளைக் காப்பதற்கும், மதத்தைக்காப்பதற்கும் ஏன் சிலர் வெளியேறுகிறார்கள்? இவைகள் ஒழிந்தால் ஜனங்கள் அறிவு பெற்று ஏமாறமாட்டார்கள் என்றும் வைதீகர்கள் பிழைப்பில் மண்விழுந்து விடும் என்றும் பயந்துதானே சுயமரியாதை இயக்கத்தை அழிக்க ஒரே கூப்பாடு போடுகின்றனர். கடவுளுக்கில்லாத கவலை இக்கடவுள் காப்பாளருக்கு அதிகமாய் இருப்பானேன். கடவுளால் ஆகாத காரியம் இக்காப்பாளரால் ஆகிவிடும் என்று நினைப்பது அறிவீனமா? ஆணவமா?

ஆகவே எங்கள் நோக்கமென்ன? மூட நம்பிக்கை, சடங்குகள், பொய்ப்புராணம், சாதிபேதம், சமயவெறி, மதவைராக்கியம், கடவுள் பைத்தியம் யாவும் எங்கள் "சமதர்ம"த்திற்கு முட்டுக்கட்டையாக இருப்பின் அவைகள் அப்பால் ஒதுக்கப்பட வேண்டியவைகளேயாகும். நாங்கள் மக்களின் நலத்தைக் கவனிப்போமேதவிர கடவுளுக்காகவோ, மதத்திற்காகவோ மக்களின் நலத்தை இழக்கச் சம்மதியோம். கடவுள் நலத்தைவிட மக்கள் நலமே மேல் ஆகையால் கடவுள் போச்சே! மதம் போச்சே! சாதி போச்சே! என்று வீண் கூக்குரலிடாமல் உங்கள் கடவுளும், மதமும், சாதியும் என் போகிறது என்றும், உங்கள் கடவுள் எப்படிப் பட்டவர், எதற்காக அவர் இருக்க வேண்டும்? என்பதையும் யார் அவரைக்கண்டது? என்பதையும் எடுத்துச்சொல்லுங்கள்!

எங்கள் சமதர்ம வாழ்வில் உங்கள் கடவுளும் ஒருவராயிருந்து சமத்துவமாக வாழ இச்சைப்பட்டால் வாழட்டும், இல்லையேல் ஓடட்டும் என்றுதான் சொல்லுகிறோம். "எல்லாம் வல்லவர்" என்றும், "அழிவற்றவர்" என்றும் சொல்லும் நீங்கள் சுயமரியாதை இயக்கம் கடவுளை ஒழிக்கிறது "கடவுள் போச்சு" "மதம்போசசு" என்று இனனும் சொல்லுவீர்களானால் எங்கள் எதிர்ப்பினால் இவ்வளவு சீக்கிரமாக ஒழியும் கடவுள் யாரைக் காக்க முடியும்? என்ன செய்ய முடியும்? என்று மக்கள் நினைக்க நீங்களே வழி காட்டிய "நாஸ்திகர்"களாகி விடுவீர்கள்? நீங்களும், நாங்களும் நாஸ்திகத்தை நாடியே செல்லுகிறோம் என்பது தெரிந்ததா? ஆதலால்

நாஸ்திகம் ஓங்குக!

ஆஸ்திகம் ஒழிக!!

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

நிலைமையானது தற்காலத்தில் நாம் காணுமாப்போல் இராமல் சற்றுவது மேம்பட்டு விளங்கியிருக்கும் என்பதே எனது பூரண அபிப்பிராயம். தவிர, நாம் காணும் இந்த உலகத்தின் உன்னதம் எத்தன்மைத்து? ஒரு சிறுகிண்ணத்தில் மின்னலொளி பிரதி பலிப்பது போலவே தான் இருக்கின்றது. பார்க்கப் போனால் இவ்வுலகம் மாந்தர் நிரந்தரமாக வாழும் ஓர் வாசஸ்தலமாக இல்லை என்? ஒரு காலத்தில் நமது மனித உலகம் முற்றிலும் மறைய வேண்டியதே! விஞ்ஞான ஆராய்ச்சியால் நாம் அறியும் உலக தத்துவத்தின் (Energy) பிரகாரம் - அதன் சக்தியும் குறைவதில்லை, பதார்த்தமும் (Matter) குறைவதில்லை. எனவே மாந்தர் இந்த உலகத்திலிருந்து ஓர் காலத்தில் மறைய வேண்டியதாக இருப்பின் அந்நாந்த உலக தத்துவத்திற் கேற்ப, அவ்வாறு இங்கு மறைந்த பதார்த்தங்களும், சக்திகளும் இந்த உலகத்திற்கு அப்பாற்பட்ட இடங்கள் (Planets) எங்கே போவது மாறுபட்ட மாதிரியில் (In one form or other) தோன்றித் தான் ஆக வேண்டும். அவ்வித மாறுபாடுகள் எங்கு எக்காலத்தில் ஏற்பட்ட போதிலும், சீக்கிரமாகவோ அன்றி அனேக காலம் கழிந்த பிறகோ அவைகளும் ஓர் நிலை விட்டு மற்றோர் நிலைக்கு மாறி மாறிக் கடைசியில் ஒரு ஸ்திர ஸ்திதியை அடைந்தே தீரவேண்டும். விஞ்ஞானிகள், உஷ்ணத்திற்கு, மின்சக்திக்கும் உள்ள சம்பந்தத்தை ஆராய்ந்து தெளிந்துள்ள இரண்டு தத்துவங்களிலே, இரண்டாவது தத்துவத்தின் (Second law of thermo dynamics) பிரகாரம் நமது உலகமானது கற்போதிருக்கும் நிலைமையை விட இன்னும் கீழான நிலைமைக்கே அதி சீக்கிரமாகப் போய்க் கொண்டிருக்கின்ற தென்பது உண்மையே அதன் பிரகாரம் பார்க்கப் போனால் முடிவில் இவ்வுலகிலே ஒரு விதத் தோற்றமும் இல்லாமற் போகுமென்பது திண்ணமே, ஆனால் இவ்வித உண்மைத் தத்துவதையே நாம் வேண்டுமானால் கடவுள் பெயருடன் பிணைத்து, பிரளய (Dooms—day) காலத்தில் கடவுள் சமஸ்த தோற்றங்களையும் தன்னுள் அடக்கிக் கொள்ளுகிறார் என்றும் பிறகு மற்றோர் யுகத்தில் தன்னிடத்தினின்றும் படைக்கின்றார் என்றும் கூறி விடலாம். ஆனால் அவ்வித கொள்கை ஏதோ ஓர்ரம்பிக்கையைப் பொருத்ததாக ஆகி விடுகிறதே ஒழிய, மற்றபடி விஞ்ஞான ஆராய்ச்சியின் பயனால் பன்னூட்கள் பாடுபட்டுக் கணித்துக் கண்டதோர்கருத்தென்பதாக ஆகின்றதில்லை என்பதை நீங்கள் கவனிக்க வேண்டும். வான, பூத, பௌதிக, ரஸாயனம் என்பனவாகிய விஞ்ஞான சாஸ்திரங்களால் நாம் ஆராய்ந்து தெளிந்த உண்மைத் தத்துவம் என்னவெனில் (Theory of evolution and involution) படிப்படியாக அநேக பேதா பேத தோற்றங்களில் உழன்று உழன்று, அனுபவம் என்ற சேகேறியதன் பயனாய் நாம் இப்போது இந்த மானிட மகோன்னத பதவியை பல துயரங்களையும் பொருட்படுத்தாது அனுபவித்துவருகின்றோம்; மறுபடியும் பற்பல தோற்றங்களினூடே படிப்படியாகப் பிரண்டருண்டு, ஒரு தோற்றமுமில்லாத சூன்ய நிலைக்குச் சேருகின்றோம், என்பதுவே. இவ்வித நிலைமையை யடைவதுதான் மாந்தரது படைப்பின் நோக்கம் :என்பதாக மதம் கூற முற்படுமெனின் அவ்வித—ஒரு பொருத்தமாகப் புலப்படாத தோர் நோக்கம் என்பதாகத் தான்நான்கூறுவேன்—என்?—கண்கொண்டு காணும் புண்ணிற்குக்கைக் கண்ணாடியும் வேண்டுமா? நாம்நமது அறிவால் அறியும் விஷயத்தைவெளியிட ஓர் கடவுளும் நமக்கு வேண்டுமோ! எனவே,—அதில் எவ்வளவு பொருத்தமற்ற நோக்கம்இருக்கின்றதெனினும், அது எவ்வளவு ஆதாரமற்ற கொள்கையையுடையதாக இருப்பினும்—கடவுள் என்ற ஓர் பொருள் இருக்கிறது என்பதை ஏற்றுக் கொள்ள ஒரு விதகாரணமும் இல்லவே இல்லை யென்கின்றேன்.

இத்தத் தர்க்க ரீதியான ஆராய்ச்சியில் பழைய வேத புராண சம்பந்தமான வைதீக தர்க்க சம்பிரதாயங்களை நான் முழுதும் புறக்கணித்து விட்டேன்—ஏன்? மத வாதிகளை அவற்றை ஆதாரமற்ற ஆபாசக் கூற்றுகளெனக் கருதி எள்ளி நகையாடித் தள்ளிவிட முற்பட்டு விட்டனர் என்பதாலேயே யாம். (தொடரும்.)

---

## சென்னை

### சுயமரியாதை இளைஞர் மன்றம்.

மேற்படி மன்றத்தின் வாராந்திரக் கூட்டம் 3-வது தடவையாக 1-1-33 பகல் 2மணிக்கு மன்றத்தின் காரியாலயத்தில் தோழர். எஸ். சதாசிவம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அது சமயம் தோழர். கே. எஸ். நாதன் "சுயமரியாதையும், சமூக பழக்க வழக்கமும்" என்பது பற்றி பேசினார் என ஒரு நிருபர் எழுதுகிறார்.

31—12—32 காலை 9 மணிக்கு 14-வது நாடார் மகாநாடு மீண்டும் கூடியது. நாடார் மகாஜன சங்கத் தலைவர் பொறையார் தோழர் வி. கன சபை அக்கிராசனம் வகித்தார்.

கொளும்பு நாடார்கள் சங்கம், ஆசிரியர் அன்பையன், தோழர்கள். சாமிநாதன், டப்ளியூ. பி. ஏ.

[4-ம் பக்கத்தொடர்ச்சி.]

திருத்த ஸ்தலஸ்தாபனங்கள் சட்ட சபை முதலியவைகளுக்கு நமது சமூக முன்னேற்றங்கருதிப் பாடு படுபவர்களை அபேக்ஷகர்களாக நிறுத்தி அவர்களுக்கு ஆதரவளித்து அதிக மான ஸ்தானங்களை நாம் கைப்பற்ற வேண்டுவதவசியம். இதையும் நமது மகாநாட்டிலே ஆலோசனை செய்து ஓர் முடிவுக்கு வருவீர்களென்று நம்புகின்றேன்.

### நாடார் வாலிபர் மகாநாட்டில் நிறைவேறிய தீர்மானங்கள்.

நாடார் வாலிப மகாநாட்டில் கீழ்க் கண்ட தீர்மானங்கள் நிறைவேறின:-

1. நாடார் மஹாஜன சங்கத்தின் தீர்மானங்களை நிறைவேற்ற ஆங்காங்கு கிளைச்சங்கங்கள் ஏற்படுத்தவேணுமென இம்மகாநாடு கேட்டுக்கொள்ளுகிறது.

2. நமது சமூக பழக்கவழக்கங்களில் சமூக முன்னேற்றத்துக்கு இடையூறுகவும் வீணுசுவுமுள்ள எல்லாவற்றையும் விலகி அறிவுக்குப் பொறுத்தமானவைகளை கைக்கொள்ள இம்மகாநாடு கேட்டுக்கொள்ளுகிறது.

3. திருநெல்வேலி ஜில்லாவில் நாடார்களுக்குச் சொந்தமாக கூட்டு முறையில் சினி உற்பத்தி தொழிற் சாலை ஒன்று ஏற்படுத்த தலைவர்கள் முயற்சியெடுக்கும்படியும் மகா ஜன சங்கம் கவுன்சிலில் இதைப்பற்றி கவனம் செலுத்தும்படியும் இம்மகாநாடு கேட்டுக்கொள்ளுகிறது.

4. நாடார்களின் முன்னேற்றத்திற்கு 5-வருட திட்டம் ஒன்று ஏற்படுத்த வேண்டுமென்று கருதுவதால் அதில் கீழ்க்கண்ட முதல் ஒருவருட திட்டத்தை ஏற்படுத்த இம்மகாநாடு கேட்டுக்கொள்ளுகிறது.

(எ) சாரதா சட்டப்படி 14 வயதுக்கு மேற்பட்ட பெண்களுக்கு விவாகம் செய்ய ஏற்பாடு செய்தல்.

(பி) விதவைகளை மறுமணம் செய்தல் செய்வித்தல்.

(சி) சுபா சுப காரியங்களில் செய்யப்படும் அர்த்தமற்ற வீண் சடங்குகளை நிறுத்தி பருத்தறிவை கையாளச் செய்தல்.

(டி) முக்கிய பட்டணங்களில் கல்யாண மண்டபங்கள் ஏற்படுத்தி சுவந்டமின்றியும் பொருள் விரயமின்றியும் சிக்கன துறையில் மண மக்களின் குடும்பத்தார்கள் இருவரும் கூடி கல்யாணம் நடத்த ஏற்பாடு செய்தல்.

(இ) ஆரம்பக் கல்வியும், இலவச வாசகசாலையும் கிராமாந்திரங்களில் கம்மவர்களுக்கு ஏற்படுத்தல்.

# நாடார் மகாநாடு.

## தலைவர் தோழர் கனகசபையின் பேருரை.

சமத்வ உணர்ச்சியை எவரும் அழிக்க முடியா.

—:0:—

சௌந்திரபாண்டியன், சின்னத்தம்பி நாடார், ஈரோடு ஈ. வி. ராமசாமி இவர்களிடமிருந்து மகாநாட்டிற்கு வந்து கலந்துகொள்ள முடியாமற் போனதற்கு வருந்திவந்திருந்த தந்திகளை சபையில் காரியதரிசி படித்தார்.

### தலைவர் பிரசங்கம்.

தோழர்களே!

சீர்திருத்தம், சுயாதீனம், விடுதலை யென்ற இயக்கங்களின் மூலமாக நம்மைச் சுற்றிலும் பலமான ஒரு உணர்ச்சி தோன்றி வியாபித்திருக்கிறது. விசேஷ பலாபலன்களை விளைவிக்குமென எதிர் பார்க்கப்படும் பல முக்கிய மாறுபாடுகள் ஏற்பட விருக்கும் ஒரு காலத்தை அபேட்சிதவர்களாய் நாம் இப்போது கூடியிருக்கிறோம். சரியாய் நூறாண்டுகளுக்கு முன் 1832-ல் இங்கிலாந்தில் ஏற்பட்டதான பொது ஜனவாழ்க்கையில் குறிப்பிடத்தக்க மாறுபாடுகளை விளைவித்ததை யொத்த ஒரு இயக்கம், இப்போது நமது வாழ்க்கையின் அரசியல் துறையில் ஏற்பட்டுள்ளது. மத விஷயங்களில் நெடுங்காலமாய் அனுஷ்டானத்திலிருந்து வரும் பழக்க வழக்கங்கள், கொள்கைகள் நம்பிக்கைகள் சம்பிரதாயங்கள் முதலியவைகள் உலையிலிடப்பட்டு மாறுபடும் நிலையிலுள்ளன; சமுதாயத்துறையில் ஸ்திரீகள் தாழ்த்தப்பட்ட வகுப்பினர் என்பவர்களின் விடுதலைக்குரிய ஒரு இயக்கம் நடந்து வருகின்றது செல்வ நிலையோ, உலகெங்குமே ஒரே நிலையாய்க் குவிந்துள்ள வர்த்தக மந்தம் நம்மையும் பாதிக்கின்றது. வாழ்க்கை நிலையின் ஒவ்வொரு துறையும் மாறுபாடடையும் சந்தர்ப்பத்திலிருக்கின்றது. இம்மாறுபாடுகளின் பலாபலன்களின்னவை யென்று நாம் இப்போது ஊகிக்க மட்டும் இயலும் இது சமயத்தில் மகாநாடு கூடுவதென்பது உங்கள் மீதும், என் மீதும் மகத்தான பொறுப்புகளைச் சுமத்துகின்றது. வகுப்பு முன்னேற்றத்திற்கும் தேசப் புனருத்தாரணத்திற்கும் ஆதாரமான அரசியலறிவு ஒத்துழைக்கும் மனப் பான்மை என்ற குணங்களமையப் பெற்ற ஜனங்களான ஒரு வகுப்பான நம வகுப்பை நாம் அமைக்க வேண்டும்.

இது காலே தீண்டாமை யொழித்தல், ஆலயப் பிரவேச உரிமை என்ற இரு விஷயங்களைச் சார்ந்த பெருத்த போராட்டம், இதர எல்லா விவகாரங்களையும் மறைத்து விட்டது இவ்விரு நெருக்கடியான விஷயங்களின் முடிவையே இந்து மதத்தின் எதிர் காலம் மிகுதியும் சார்ந்திருக்கிறது. இவைகளைப் பொருத்து நடந்துவரும் கொடிய போராட்டத்தைப் பற்றி உங்களனைவருக்கும் தெரியும். இவைகளுக்கு ஆகரவும், எதிர்ப்பும் கலப்பும் தோன்றுகின்றன. தென்னாட்டில் தான் நிலைமை மிகவும் மும்முரமாயிருந்து வருகின்றது.

சமதர்மம் கொண்டாடுதல் என்ற சகஜ உணர்ச்சியால் ஏற்பட்டுள்ள இவ்வியக்கத்தை முற்றிலும் அழித்தலென்பது இயலாத காரியம். தீண்டாமை, ஆலயப் பிரவேச நிர்ப்பந்தம் என்ற விஷயங்களில் ஸ்வாதீனம் நிலையாக ஸ்தாபனமாகும் காலத்தை வேண்டுமாயின் கைதீகம் கடத்தலாம். இந்து மதத்திற்கே ஆபத்து நேரிட்டதாக இடப்படும் கூக்குரலும் சாத்வீகச் செய்கைகளையும் ஆக்கமிப்புச் செயல்களெனக் குறை கூறும் போக்கும் கட்டுப் பாடுகளை நிலை நாட்டி முயலும்வைதீகவைராக்கியத்தின் விபரீதங்களேயாகும். மத வைராக்கியத்திலுல் ஏற்பட்டுள்ள நிர்ப்பந்தங்களினின்றும் விடுதலை பெற நாமும் நீதியான இவ்விஷயத்தை முழு மனதுடன் ஆதரிப்பதே நமது தெளிவான கடமையாகும்.

ஸ்திரீகளுக்கு வாக்குரிமையளிக்கும் விஷயத்தில் பல நிர்ப்பந்தங்கள் இருந்து வருகின்றன ஸ்திரிகளுக்குள் இருந்து வரும் வகுப்பு வேற்றுமைகளும், சமுதாய வேற்றுமைகளும். கல்வியறிவின் நிலையில் வேறுபாடுகளும், இளம்பிராயமிருந்து அவர்கள் பழகும் பழக்க வழக்கங்களும் இவ்வித இடையூறுகளாகும் நமது மகாநாட்டுடன் இவ்வருஷம் சேர்த்து நாம் நடத்தும் கல்வி மகாநாட்டில் ஸ்திரீகளின் கல்வி விஷயத்தில் விசேஷ கவனம் செலுத்தியதை நான் பெரிதும் பாராட்டுகிறேன். கல்வியை ஆதாரமாகக் கொண்டு ஸ்திரீகளுக்கு வாக்கு சுதந்திரம் அளிக்கலாமென யோசிக்கப்பட்டு வரும் இந்த சமயத்தில் இவ்விஷயத்தை நாம் ஊக்கமாய்க் கவனிக்க வேண்டும்.

### வாலிபர் கடமை.

பெறுதற்கரிய இந்தப் பொறுப்பை நமது வாலிபர்களே ஏற்க வேண்டும் சமீபத்தில்தோழர்சிந்தாமணியவர்கள் கூறியுள்ளது போல நமது வகுப்பின் எதிர்காலம் 25 வயதுக்குள்பட்ட நமது வாலிபர்களையும், நமதுபெண்களையும் பொறுத்ததாகவே யிருக்கின்றது. நமது முதியோர்களின் காலம் காலம் கடந்து வருகின்றது. நம் வகுப்பினருள் அவர்களுக்குள்ள செல்வாக்கும் குன்றியே வருகின்றது அவர்கள் ஏற்கனவே செய்து வந்த வேலை மாறுபாடடைந்துள்ள இக்காலத்தில் முழு மனதுடனும், ஊக்கத்துடனும் உழைக்கக் கூடிய வேலையை வாலிபர்களே ஏற்கவேண்டிய அவர்கள் கடமையாகின்றது.

ஆந்திர சர்வகலாசாலையின் உதவி அத்யட்சகரான பெரியார் கூறியுள்ளபடி மத மென்ற நாமத்தில் லட்சக்கணக்கான நமது சகோதர சகோதரிகளுக்கு சகஜமான உரிமைகளையும் வழங்க மறுக்கும் இந்த வைராக்கியத்தை எதிர்த்து மாற்ற வேண்டுவது ஓர் முக்கிய கடமையாகும் இவ்விஷயத்தில் நமது வகுப்பினர் மீது மட்டுமன்றி இதர வகுப்புகளிடையிலும் சந்தர்ப்பங்கள் ஏராளமாய் வாய்த்துள்ளன. நம்மில் எவ்வளவு அற்பராயினும் இக்காரியத்தில் ஈடுபட்டு தம்மாலியன்றவுதச் செய்யலாம். பழையன கழிந்து புதியன புகுங்காலமான இக்காலத்தில் ஜன சமூக சேவையின் பொறுப்பை நமது வாலிபர்கள் ஏற்க வேண்டுவது அவசியம். பொதுஜன சேவையில் மனப்பூர்வமாயும். முழு ஊக்கத்தையும் உற்சாகத்துடனும் ஈடுபட வேண்டுவது அத்யாவசியம் என்பதை விட நம் வாலிபருக்கு புகட்டக் கூடிய புத்தி எதுவுமில்லை. இதற்கு உபசாதனங்களான பொருள், ஓய்வு காலம் தேக வலிமை, தியாக உணர்ச்சி முதலியன ஒருங்கேயோ அல்லது தனியாகவோ அமையப் பெற்றுள்ள நமது வாலிபர்கள் நகரங்களிலும், நாடுகளிலும் வாழ்க்கை சாதனங்கள் குறைந்த நமது சகோதரர்களிடையே ஊழியம் செய்ய வேணடும். சமூகச்சேவை உணர்ச்சி நிரம்பியவர்களாக வைதீகம் வலுவாய் வேரூன்றிக் கிடக்கும் நாட்டுப்புரங்களில் சென்று தொண்டு புரியப் புறப்படும் வாலிபர்களுக்கு அன்பான வரவேற்பு அளிக்கப்படும் என்பதற்கு ஐயமில்லை.

### தீர்மானங்கள்.

"கல்வியபிவிருத்தி நிதிக்காக நாடார்கள் மூன்றுவது ஸ்காலர்ஷிப் லாட்டரி யேற்படுத்தி நடத்தவேண்டுமென இம்மகாநாடு தீர்மானிக்கிறது"

"ஷெ லாட்டரி நடத்த ஒரு கமிட்டி நியமிக்க தோழர்கள். எஸ். பி. ஜெயராம்நாடார், எஸ். பி. ஆதித்த நாடார் இவர்களுக்கு இம்மகாநாடு அதிகாரமளிக்கிறது."

"ஆண்களைப் போலவே பெண்களுக்கும் சொத்துரிமை கொடுக்கவேணுமென இந்தியா சட்டசபையில் தோழர் ஹரிசிங்கவர் கொண்டுவந்திருக்கும் தீர்மானத்தை இம்மகாநாடு ஆதரிக்கிறது."

"நமது சமூகத்தினருக்குச் சொந்தமான பாடசாலைகள் பொதுஸ்தாபனங்கள், ஆலயங்கள் இவற்றில் எவ்வித ஜாதிமத பேதங்களுமின்றி சமத்துவம் காட்டவேண்டுமென இம்மகாநாடு தீர்மானிக்கிறது."

---

## நாடார் கல்வி மகாநாடு.

நாடார் மகாஜன மகாநாட்டின் முதல் நாள் நடவடிக்கைகள் முடிந்ததும் அன்று மாலை 4—30 மணிக்கு அதேயிடத்தில் நாடார் கல்வி மகாநாடு நடந்தது. இந்த மகாநாட்டை தோழர் என். பி. அருமை நாயகம் ஆரம்பித்துவைக்க ஏற்பாடாயிருந்தது. ஆனால் சில அசௌகரியங்களை முன்னிட்டு அவர் மகாநாட்டுக்கு வரக்கூடவில்லையாதலால் அவருடைய ஆரம்பப் பிரசங்கத்தை தோழர் எஸ். யேசுதாசன், எம். ஏ. சபையில் படித்தார். பின்னர் சிவகாசி தோழர் கே. ஏ. எம். ஏ. காளியப்ப நாடார் தலைமை வகித்து தனது அக்கிராசனப் பிரசங்கத்தைப்படித்தார்.

### தீர்மானங்கள்.

"நம்மவர்களால் நடைபெற்று வரும் கலாசாலைகளில் கைத்தொழில் கல்வியைப்போதிக்க வேண்டுமாய் இம்மகாநாடு கேட்டுக்கொள்கிறது.

"கல்வி இலாகாவில் மற்ற வகுப்பினருக்கு பள்ளிக்கூடங்களில் குறைந்த சம்பளம் ஏற்படுத்தியிருக்கும் ஜாபிதாவில் நாடார் மாணவர்களுக்கும் குறைந்த சம்பளம் ஏற்படுத்தும்படி சர்க்காரை இம்மகாநாடு கேட்டுக் கொள்ளுகிறது.

---

## வரவேற்பு தலைவர் பேச்சு.

நாடார் வாலிபர் மகாநாட்டின் வரவேற்புக் கழகத்தலைவர் தோழர் இ. சின்னப்பா அவர்களுடைய பின்வரும் பிரசங்கத்தை தோழர் எ. கே. துரைராஜ் பாண்டிய நாடார் படித்தார்.

இக்காலத்தை இளைஞர் காலமென்றே கூறலாம். ஏனெனின் எத்துறையை யெடுத்துக்கொண்டாலும் இளைஞர்களே முன்னணியில் நிற்கிறார்கள் என்பது தெள்ளத்தெளியும். சமீப காலத்தில் இச்சென்னை ராஜ்ய சரித்திரத்தைப் பத்திரிகை மூலமாக அறிந்தவர்களுக்கு இளைஞரின் முற்போக்கை எடுத்துக்கூற வேண்டுவதில்லை. உதாரணமாக 32 வயதுள்ள ஒருவர் முதல் மந்திரி பதவியும் 28 வயதுள்ள ஒருவர் கார்ப்பொரேஷன் தலைவர் பதவியையும் பெற்றதைக் கூறலாம்.

கட்டாயக் கல்வி விஷயமாய் சர்க்கார் கூடுமான சட்டங்கள் இயற்றியிருக்கின்றனர் என்பது உண்மையே. ஆனால் பொது ஜனங்களின் ஆதரவில்லாவிடில் அச்சட்டங்கள் என்ன செய்ய முடியும்? ஆகவே கட்டாயக்கல்விக்குச் சாதகமாக ஜனங்களின் அபிப்பிராயத்தை ஒரு படுத்தவேண்டும். அதன் பின்னரே கட்டாயக் கல்வியை அமுலுக்கு கொண்டுவந்தால் திட்டமான பலன் கிடைக்கும். நம்மவர் வசிக்கும் பெரிய நகரங்களிலாவது கட்டாயக் கல்வித்திட்டத்தை அமுலுக்கு வரும்படி ஏற்பாடு செய்யவேண்டும்.

இச் சந்தர்ப்பத்தில் மற்றொரு முக்கிய விஷயத்தைக் குறிப்பிட விரும்புகிறேன். அதாவது வயது வந்தவர்களுக்கு கல்வி போதிப்பதாகும். இவ்விஷயத்தில் நமது மாணவர்கள் சிறிது ஊக்கங்காட்டினால் போதிய வெற்றி கிடைக்கும் என்று நம்புகிறேன். ஒரு வாரத்திற்கு முன் சர். பி. சி. ரே என்பார். மாணவர்கள் தினம் தமது பாடங்களைப்படிப்பதில் 2-மணி நேரம் செலவழித்துவிட்டு மிகுந்த நேரத்தை சமூக சீர்திருத்த விஷயத்திலும் பொருளாதார அபிவிருத்தி விஷயத்திலும் உழைக்க வேண்டுமென்ற கூறியிருக்கிறார். பிரபலமான டேனியல் திட்டப்படி ஒரு மாணவர் 10 ஆண்களுக்கு மூன்று மாதத்தில் எழுதப்படிக்க சிறு கணக்குகள் போடக் கற்பித்து விடக்கூடும். இம்மாதிரி செய்தால் வருஷத்தில் 120 பேர்களை அஞ்ஞானக்கடலிலிருந்து அகற்றிவிடலாம். ஒரு பள்ளிக்கூடத்தில் சுமார் 100-மாணவர்கள் மட்டும் இவ்வேலையைச் செய்வார்களானால் மெச்சத்தகுந்த பலனை ஒரு வருஷத்திலேயே காணலாம். இது விஷயத்தை மேலும் பரிசீலனை செய்து ஒப்பக்கூடுமானால் குறிப்பிட்ட ஒரு நகரத்தில் பரீக்ஷார்த்தமாக அமுலுக்கு கொண்டு வரமது கல்விச்சாலை நிர்வாகிகளைக் கேட்டுக்கொள்கிறேன்.

---

## திருமங்கலம் சுயமரியாதைச்சங்கம்.

27—12—32 மாலை 6 மணிக்கு தோழர் கே. டி. கே. தங்கமணி அவர்களின் தலைமையில் சுயமரியாதைத் தோழர்களின் பொதுக்கூட்டம் ஒன்று கூடியது. தோழர்கள் மணிமாறன், பழனிமலையன், சுந்தரபாண்டியன், பச்சைக்கண்ணு முதலியோர் "சுயமரியாதை இயக்கத்தின் அவசியம்" என்பது பற்றி பேசினார்கள். பின் சங்கத்திற்கு நிர்வாகஸ்தர்களைத் தேர்ந்தெடுத்த பின் கூட்டம் கலைந்ததென ஒரு நிருபர் எழுதுகிறார்.

---

## சுயமணி.

23-12-32-ந்தேதி வெள்ளியன்று திருச்செங்கோடு தோழர்கள் ராஜம்மாள்—எஸ். கே. வரதராஜலு அவர்கட்கு ஓர் பெண் மகவு பிறந்தது. 9-ம் நாளன்று புண்ணியார்ச்சனை என்னும் எவ்வித மூடச்சடங்கு மின்றி சுகாதாரத்தை மட்டும் கவனிக்கப்பட்டது. குழந்தைக்கு "சுயமணி" எனப்பெயரிடப்பட்ட தென ஒரு நிருபர் எழுதுகிறார்.

(மேற் பக்கத்தொடர்ச்சி)

தென அறிக. காட்டு மிராண்டிகளாய் இருந்து மனிதர் நாளடைவில் நாகரீகத்தை அடைந்ததற்கு மூல காரணமாகவும், தூண்டு கோலாகவும் இருந்ததற்கு மனிதனுடைய அதிருப்தியே காரணமாகும். (Dissatisfaction is the mother of all progress.) அதிருப்தியே எல்லா முன்னேற்றத்திற்கும் தாய் என்றார் பெரியோர். ஆகலின் சமதர்ம சமூகத்தில் திருப்தி என்பதே இருக்காது. இருக்கும் சுகத்தைவிட மேலான சுகம் பெறவேண்டுமென்ற எண்ணம் குடி கொண்டே இருக்கும். இந்த மனப்பான்மையை திருப்தி செய்ய முயற்சி எழுந்தவாறு இருக்கும். இன்று பாதரட்சை, நாளைக்கு மின்சார விளக்கு, அதன் பிறகு உயர்தரக கல்வி அதன்பின் ஓய்வுநேரம் பின்னர்சுத்த வனம், கல்விவீடு, கல்ல பிள்ளைகள், நல்ல மனிதர், இவ்வாறுபடிப்படியாக வாழ்வு உயர்ந்து கொண்டே வரும். அவ்வுலகில் மனிதன் மென் மேலும் தனது வாழ்வை உயர்த்திக்கொண்டே போவான். இந்த (Evergrowing life) சதா உயர்ந்துக் கொண்டே போகும் வாழ்வுக்கு வேண்டிய பொருள்களை உண்டாக்க எல்லோருக்கும் வேலை இருந்துக்கொண்டே இருக்கும். இந்த சமதர்ம சமூகத்தில் இறந்து போனவர்களுக்கும் இதற்கு முன்னர்களுக்கும் சமானமானவர்களுக்கும் மாத்திரம் வேலை இல்லாமலிருக்குமேயொழிய மற்ற உயிர் வாழும் எந்த மனிதருக்கும் வேலை இல்லாமலிராது. அத்தகைய உலகில் (Retrenchment) சிக்கனமென்ற தும் (Cut in Salary or wages) சம்பளக் குறைவு என்றதும், ஆள் குறைத்தல் என்பதும் கனவிலும் கேட்பதரிது.

வேலையின் இன்பம் (Love of work) சமதர்ம சமூகத்தில் தன் கணமுடியும். சமுதாய சமூகத்தில், நாமெல்லாம் உழைத்துவிட்டு அதன் பயனெல்லாம் வேலை செய்யாதவன் அடையவும், வேலை செய்தவன் சொற்ப கூலியோடு செல்லும் காட்சியைக்காண முடியாது. சமதர்ம சமூகத்தில் தான் செய்த வேலையின் முழுப்பயன் தனக்கே கிடைக்குமாதலால், ஒருவேலையுடனும் அலுப்படைந்து அவ்வேலையை நிறுத்திட்டவிடுவதை செய்வான். வேண்டா வெறுப்பாய் செய்யும் நற்கால வேலை சமதர்மத்தில் இருக்கா.

சமதர்ம சமூகத்தில் வேலை நேரம் குறைந்தே வரும். 8, 9, 10 மணி நேரம் செய்யும் நற்கால வேலைகள் சமதர்ம சமூகத்தில் இருக்கவே இருக்கா. வாழ்வுக்கு வேண்டிய பொருள்கள் யாவும் உலகிலுள்ள மக்கள் 4-மணி நேர உழைப்பாலேயே கிடைக்கக்கூடுமென பொருளாதார விற்பன்னர்கள் ஒருகணக்கெடுத்திருக்கின்றனர். அதாவது நமது உலகம் கல்வி பெறவேண்டுமானாலும், யாத்திரை செய்யவேண்டுமானாலும், சங்கீதம் பாடல் கேட்கவேண்டுமானாலும் நாடகக் காட்சியை அனுபவிக்கவேண்டுமானாலும், நல்லுணவு, நல்ல ஆடை, நல்ல வீடுபெறவேண்டுமானாலும், நல்ல புத்திரர்களை வளர்க்கவேண்டுமானாலும் மனிதனுடைய காலு மணி நேர உழைப்பே இவைகளுக்கு வேண்டிய அனுகூலங்களை உண்டாக்க போதுமென்று மதிப்பெடுத்திருக்கின்றார்கள். இந்த செல்வாக்கு சமதர்ம சமூகத்தில்தான் கிடைக்க முடியும்.

மற்ற நேரங்களை எவ்விதம் கழிப்பதென்றுகேள்வி பிறக்கலாம். அதற்கு விடையாதெனில் மன உல்லாசம், நிரோக உல்லாசம் பொது ஜன சேவையில் உல்லாசம், விஞ்ஞான ஆராய்ச்சியில் உல்லாசம் முதலிய சுகப்பேற்றை அனுபவிக்கக்கூடும். தற்போதோ லட்சத்தில் (100000) ஒருவர் கூட இந்த உல்லாசப்பேற்றை அனுபவிக்க முடியவில்லை. உலக யாத்திரை யாரால் செய்ய முடிகின்றது? மெஞ்ஞான ஆராய்ச்சி யாரால் செய்ய முடிகின்றது? கவலை இல்லாத தூக்கம் யாரால் அனுபவிக்க முடிகின்றது? அரசியல் இன்பத்தை யாரால் பெற முடிகின்றது? உலக சுகபோகங்கள் யாருக்கு கிட்டுகின்றது? லட்சத்தில் ஒருவருக்குக் கூடகிட வில்லையே! ஆனால் ஒய்வு நேரம் அதிகமாக கிடைக்கும் பட்சத்தில் சகலரும் உயர்தரவித்தைகளை கற்க அனுகூலமாகுமன்றோ? காலா காலங்களாக வேலையில் ஆனந்தமனுபவிப்போர் சிலரே. ஆனால் சமதர்ம சமூகத்தில் உலகிலுள்ள யாவரும் அவரவர் செய்யும் வேலைகளை ஆநந்தத்துடனேசெய்யப்புகுவர். இந்த மூன்றே உலகம் சுகமுய்யப்போதுமானதாகும்.

பொருளாதார விதியாசமற்ற சமூகத்தில் ஆணுக்கும், பெண்ணுக்கும் சரி சமத்துவம் உண்மையாக ஏற்படும். காலை முதல் இரவுவரை அலுப்பங்கரையில் உழைக்கவும் தர்ப்பாவியம் பெற்ற குடும்பங்களில் என்ன ஆபத்து, என்ன இன்பம்விளைக்கும்? ஏழை குடும்பங்கள் இருக்கும் வரை—பல ராஜாகுடும்பங்கள் இருக்கும்வரை உலகில் ஒருவருக்கும் கவலை இல்லாமல் இராது. பணமில்லாத கவலை எளியோனுக்கும், பணம்படைத்த கவலை (திருடர் கொள்ளைக்காரர், கொலைகாரர்களால் நேரிடும் பயத்தால் வருங்கவலை) பொருளாளிக்கும் இருந்தேவரும். ஒருவன் தயவால் கொடுக்க, மற்றொருவன் இல்லாமையால் வாங்க அதாவது தருமம் செய்யவும், தருமத்தைப்பெறவும் நேரிடும் தர்ப்பாக்கியம் இந்த பொருளாதார விதியாசத்தால் தான் பண்டைக்கால முதல் உலகை நாசமாக்கி வந்திருக்கின்றது. புருஷன் கொடுக்கவும், பெண் வாங்கவும், கொடுப்பது விதியாசமே

க்குப் பெண்தாழ்த்தப்பட்டதாகென அறிக. காலாகாலமாக பேண் கள் ஆணுக்கு தீழ்ப்பட்டதற்கு காரணம் இந்தப் பொருளாதார வித்தியாசத்தால். நேர்ந்துளதென அறிக. இந்த பொருளாதார வித்தியாசம் உலகிலோ, எந்த சமூகத்திலோ, இருக்கும் வரை ஆணுக்குப் பெண் தாழ்பணிந்தே நடக்க வேண்டிவரும். இந்தப் பொருளாதார வித்தியாசத்தை நீக்காமல் 'ஆணும் பெண்ணும் சரி சமத்துவம் பெறவேண்டும்என்பது பிறவிக்குருடன் சூர்யதரிசனம்செய்த கதையையொக்கும்.

சமதர்ம சமூகத்தில் ஆணுக்கும் பெண்ணுக்கும் அமைக்கப்படும் வேலையில் வித்தியாசமிராது. ஆணும் பெண்ணும் சரிசமத்துவமாகவே எந்த வேலையும் செய்யவருவார்கள். வேலைக்குறிய ஊதியும் இருவரும் சரி சமான மாகவே வாங்குவார்கள். வாழ்வுக்கு வேண்டிய அவசியமான வைகளுக்கு இருவரும் பாத்திரமுள்ளவர்களாவார். ஒருவனுக்கு மற்றொருவன் தாழ்ந்து வாங்கவேண்டுமென்பதே, சமதர்ம சமூகத்தில் கிடையாது. ஆணுக்கும், பெண்ணுக்குமுள்ள பொருளாதார வித்தியாசம்மறைந்தவுடன்பெண்கள் அற்றுத்தான், தங்கள் பிரப்புரிமைகளாகிய இல்லர சுதந்தரம்,சமத்துவம், சகோதரத்துவம் பெறுவார்கள். அந்த வித்தியாசம் ஒழியும்வரை பெண்களின் அடிமைத்தனம் நீங்கவே நீங்கா. மற்ற முயற்சிகள் யாவும் காலப் போக்கே. ஆதலின் சமதர்ம சமூகத்தில் ஒன்றில்தான் பெண்கள் ஆணுடன் சரிசமத்துவமும்பெறமுடியும்.

சமதர்ம சமூகத்தில் மாத்திரம்தான் பிள்ளைகளைப் பெறும் பேற்றை பாக்கியமென்று சொல்லலாம். மற்ற சமூகங்களில் பிள்ளைகளைப் பெறுதல் கோடான கோடி மக்களுக்குச் சுமை (Burden) என்றே கூறல்வேண்டும். (Childern are burden to the poor) செல்வம்இல்லாதவர்களுக்கு மக்கள் பெரும்பாரமென்றூர் பெரியோர். இல்லாதாள் வீட்டில் கர்ப்பம் தரிப்பதும் துக்கம், கர்ப்பம் தரித்தும் கர்ப்பத்தில் வளர்வதும் துக்கம், பெற்ற பிறகு வளர்ப்பதும் துக்கம், வளர்ந்த பிறகு கல்வி கேள்வி கொடுக்க முடியாததும் துக்கம் இத்தியாதி துக்கங்களுக்கு தற்கால தாய்மார்கள் கஷ்டப்படவேண்டிய தாய் இருந்து வருகிறது. ஆனால் பிள்ளைகளை பெறும் பொருப்பு தாய் மார்களுடையது என்றே எண்ணி வருவதால் இத்தியாதி கஷ்டங்களுக்குத் தாய்மார்கள் உட்படவேண்டி வருகிறது. இந்தக்கொடிய மனப் பான்மையை அகற்றி பிள்ளைகளைப் பெற்று வளர்த்தல் சமூகப்பொருப்பு (Social Responsiblity) என்ற மனப்பான்மையை ஆதரிக்கும் சமதர்ம சமூக ஒன்றில்தான் பிள்ளைகளைப்பெறுவதும் வளர்ப்பதும் தாய் செய்த பாக்கியமென்னலாம். தற்காலத்தில் பிள்ளைகளைப் பெறவும், வளர்க்கவும் பாக்கியம் பெற்றவர்கள் மிகவும் சிலரே. எல்லாம் படைத்துள்ள இல்லாளே பாக்கியம் பெற்ற தாயாவாள். ஆனால் பொருளாதார சமத்துவம் பெற்ற சமதர்ம சமூகத்தில் எல்லா பெண்களும் பிள்ளையைப் பறுவது பாக்கியமென்றே கருதுவார்கள். ரஷிய உலகில் கர்ப்பவதிக்கு பிள்ளை பிறப்பதற்கு முந்தியும் பிந்தியும் ஆறுவாரம்முதல் எட்டுவாரம் வரை சம்பளத்துடன் விடுமுறை கொடுக்கின்றார்கள். மருத்துவம் இலவசமாக செய்யப்படும். குழந்தைகள் வளரும் கழகங்கள் நாடு முழுதும் நிறைந்துள. ஒவ்வொருதொழில் புரியும்தொழிற்சாலைகளினருகேஇந்தக் கழகங்கள்அமைக்கப்பட்டுள்ளன. கல்வி, உயர்தரக் கல்வி,தொழிற்கல்வி,தேசியகல்வியாவும்இலவசமே.இந்தசமதாமசமூகத்திலொன்றில்தான் குழந்தைகள் அழுவதில்லையாம். அரசாளும் ஸ்டாலின் (Stalin) பிள்ளையாய் இருந்தாலும் எந்தத் தொழில் புரியும் மிலிகாப் (Milikopp) பிள்ளையாய் இருந்தாலும் மறுத்துவ சிகிச்சையும் ஒன்றே. வைத்தியமும் ஒன்றே. உணவும் ஆடையும் வீடும் ஒன்றே! இந்த காரணங்களால் அன்றோ, (Russia is the Paradise for Children) "ரஷிய நாடு குழந்தைகளின் குபேர நாடு" என்று சொல்லப்படுகிறது! இந்தநாடு ஒன்றுதான் சமதர்ம நாடென அறிக. இந்தப்பாக்கியத்தை மற்ற உலகம் பெறவே சமதர்மிகளாகிய நாம் உழைக்கவேண்டும். இதனை விட்டுவிட்டு உலகசெல்வங்களை நாமே அபகரித்துக் கொண்டு, ஏழை மக்களைபிள்ளைபெற வொட்டாமல் கர்ப்பத்தடை செய்யுங்கள் என்று கூப்பாடு போடுவதா மானுஷீகத்தன்மையெனக் கேட்கின்றோம்?

சுருங்க உரைக்கில் சகலருக்கும் போதுமானசமத்துவஉணவு, ஆடை, வீடு கிடைக்க வேண்டுமானால் அவை சமதர்ம ஆட்சியில்தான் (Socialist Raj) பெறமுடியும். தொழிலாளருக்கும், விவசாயிகளுக்கும் ஓய்வு நேரம் கிடைக்கவேண்டுமானால் சமதர்மத்தில்தான் கிடைக்கும். சகலரும் உயர்தரக்கல்வியை பபெற்று மூடஜாதி, மத, நம்பிக்கைகளிலிருந்து விடுபடவேண்டுமானால் சமதர்ம ஆட்சி மூலமாகத்தான் முடியும். பெண்கள் ஆணுடன் சமத்துவம் பெறவேண்டுமானால் சமதர்மத்தில்தான் அனுகூலப்படும். இனி வரும் சந்ததியாரை பஞ்சத்திலிருந்தும், பட்டினியிலிருந்தும், நோயிலிருந்தும் விடுவிக்கவேண்டுமானால் அது சமதர்மத்தில்தான் (Socialism) கூடிவரும். நமக்குப் பின்னால்உலகம் ராஜகத்துவேஷமோகமற்று, சண்டையற்று, போராற்று அன்புடன் கூடிவாழவேண்டுமானால் சமதர்மத்தில்தான் முடியும். இப்பேற்றைப்பெற தற்கால பொருளாதார வித்தியாசத்தினை மூற்றிலும் மாற்றவேண்டிவரும். இக்கொடிய திட்டத்தை மாற்றும் மார்க்கத்தினை இனி எடுத்துக்காட்டுவோம்.


குப்பைகூளத்தில் கூட்டம் சேர்ந்தால்
காலரா வரும், பிளேக்கு வரும்.

புருஷர்களுக்கு அசக்தியை போக்கடித்து புருஷத்துவம் தாதுபுஷ்டி ஜீரணசக்தி, முதலியவைகளைக் கொடுக்கும் டானிக.

## மன்மத குளிகை

எந்தக்காரணத்தினாலும் இழந்தபலம், தாது நஷ்டம் போகசக்திக்குறைவு, மன உற்சாகம், இவைகளை திரும்பக் கொடுத்து இல்லற ஒற்றுமை வீரியவிர்த்தி முதலியவைகளைக்கொடுப்பதில் இணையற்றது. 20 குளிகை ரூ. 2—0—0 60 குளிகை ரூ. 5—0—0.

மகேயப்பசாமி வைத்தியசாலை, பழனி.

## சாலாமிசிரி லேகியம்

(ரிஜிஸ்ட்டர்டு)

சிறந்த தாதுபுஷ்டி மருந்து.

மிகுந்த பலத்தையும், வீரிய விருத்தியையும் உண்டாக்கும்.

இந்த லேகியத்தால் குணமாகும் நோய்கள்.

| | |
|---|---|
| கை கால் அசதி<br>இடுப்புவலி<br>பலக்குறைவு<br>ஆயாசம்<br>நரம்புத்தளர்ச்சி<br>சொர்ப்பனஸ்கலிதம் | திடசரீரத்தைஉண்டாக்கும். மனதிற்கு உற்சாகத்தைக் கொடுக்கும். எவ்வளவுகடின வேலை செய்தாலும் யாதொருகளைப்பும் உண்டாகாது. சுக்கிலத்தை ஸ்தம்பனம் செய்யும். சம்போக இன்பத்தை முற்றிலும் அனுபவிக்கச்செய்யும். சாப்பிட மதுரமுள்ளது. |
| சம்போக காலத்திலேற்படும் துரிதஸ்கலிதம் முதலிய வைகளை நீக்கும். | |
| ஆண் தன்மைமை அதிகரிக்கச் செய்யும். தளர்ந்த நரம்பைக்கெட்டிப்படுத்தும். வீரியத்தை விருத்தி செய்யும் | ஆண், பெண், சிறுவர், வயோதிகர் யாவரும் சாப்பிடலாம். பத்தியமில்லை, |

1-சேர் டப்பி ரூ. 2-8-0

பாக்கிங் தபால் செலவு பிரத்தியேகம். மலாய் நாட்டு வாசிகள் ஆர்டருடன் முன்பணம் அனுப்பவேண்டும். விலாசம் தெரிவித்தால் கேட்லாக் அனுப்பப்படும். கமிஷன் ஏஜண்டுகள் தேவை

டி. சி. சிங்காரம் அண் கோ.,
சித்த-ஆயுர்வேத வைத்தியசாலை,
தேப்பக்குளம் போஸ்ட், திருச்சி.

"SUPERSTITION OF KHADI"

A Discussion By S. Ramanathan, Pattabhi Sitharamyya, & N. S. Varadachari in English.

Price annas. 0-2-0

## விற்பனைக்காக நம்மிடம் உள்ள இதர பதிப்புப் புஸ்தகங்கள்.

| | | |
|---|---|---|
| 1. | சிதம்பர ரகசியம் ... | 0—8—0 |
| 2. | சுதந்தரப்போர் அல்லது உப்பள முற்றுகை | 0—4—0 |
| 3. | மாதர் சுதந்தரம் or பெண்மக்கள் பெருமை | 0—8—0 |
| 4. | ஆராய்ச்சி அணிகலம் ... | 0—12—0 |
| 5. | சுயமரியாதை தத்துவ கீதங்கள் ... | 0—4—0 |
| 6. | சென்னை லோக்கல் போர்டு ஆக்ட் ... | 2—0—0 |
| 7. | மோட்டாக்கார் இயந்திர சாஸ்திரமும் அதன் அனுபோகப்பயிற்சியும் (50 படங்களுடன் 200 பக்கங்கள் அடங்கிய பெரிய புஸ்தகம் ஆர்டருடன் 4 அணை ஸ்டாம்பு அனுப்பவேண்டும்) ... | 2—0—0 |
| | சுயராஜ்யம் யாருக்கு ... | 0—1—0 |
| | சாமிகளின் அடிமைகள் ... | 0—12—0 |

The crux of the Indian Problem
By Dr. PARANJPYE (in English.)
விலை ரூ. 1—0—0
"குடி அரசு" சந்தாதாரர்களுக்கு ரூ 0—8—0

குறிப்பு:—புஸ்தகங்களுக்கு ஸ்டாம்பு வைத்து அனுப்புகின்றவர்கள் புஸ்தக கிரயத்துக்கு மேலாக புஸ்தகம் ஒன்றுக்கு ஒன்றரை அணை ஸ்டாம்பு அனுப்பவேண்டும். 8 அணைவுக்குக் குறைந்த ஆர்டருக்கு வி. பி. அனுப்பப்படமாட்டாது. ஆர்டர்களுக்கு பாதித்தொகையாவது முன்பணம் அனுப்பவேண்டும்.

### 'குடி அரசு' 'ரிவோல்ட்' மாலைகள்.

குடி அரசு மாலைகள் கோர்வையாக முதல்வருஷத்திலிருந்து சென்ற வருஷம்வரை 6 வருஷகாலம் வெளியான மலர்களைத்தனித் தனி வருஷமாக பைண்ட் செய்து புஸ்தகமாக வைக்கப்பட்டிருக்கிறது.

ஒவ்வொரு வருஷமாலை கிரயம் ரூ. 4—0—0
ரிவோல்ட்டு ஒருவருஷமாலை பைண்ட் செய்தது கிரயம் ரூ. 4—0—0

மானேஜர், குடி அரசு புத்தகாலயம்,
ஈரோடு.

குமரன் பிரஸ்

# 1933

## ஆபீஸ் காலண்டர்

பிரசித்தி பெற்ற நமது "குமரன் பிரஸ்" தினசரி தாள் கிழிக்கும் காலண்டர் சென்ற வருஷம் போலவே நல்ல கிளேஸ் காகிதத்தில் அச்சிட்டு வழவழப்பான ஆர்ட் பேப்பரினுல் ஒட்டிய சித்திரைக்கலை திகழும் அழகிய தடித்த அட்டையில் சேர்த்து சேர்த்தியாக பைண்டு செய்யப்பட்டு கண்கவர் வனப்புடன் விளங்குகிறது.

இது சாதாரணமாய் காலண்டர் 1க்கு ஒரு ரூபாய் பெறுமென்று யாவரும் மதிப்பிடுகிறார்கள். உங்கள் பங்களாக்களையும் ஆபீஸ் ரூம்களையும் கூடங்களையும் அழகு படுத்திக்கொள்ள மிக ஏற்றது.

மூன்று மாதிரிகள்.

1. பெரிய எழுத்தில் இங்கிலீஷ் தேதி, வருஷம், மாதம், கிழமைகளோடு கூடியது.

2. இங்கிலீஷ், வருஷம், மாதம், தேதி, கிழமைகளோடு தமிழ் வருஷம், மாதம், தேதி கிழமையும்; அமாவாசை கிருத்திகை முதலிய முக்கிய இந்துமத விரதாதிகளோடு கூடியது.

3. இங்கிலீஷ், தமிழ், துலுக்கு ஆகிய மூன்று வருஷம், மாதம், தேதி, கிழமைகளும் பண்டிகைகளும் (சிறிய அளவு)

| விலை | 1-கொ. | 2-கொ. | 3-கொ. | தபால் செலவு 1 & 2 | 3-கொ. |
|---|---|---|---|---|---|
| 1-க்கு | 0—6—0 | 0—6—0 | 0—1—0 | 0—4—0 | 0—1—0 |
| 12-க்கு | 1—2—0 | 1—2—0 | 2—12—0 | 2—1—0 | 1—12—0 |

ஒரு காலண்டர் வி. பி. யில் அனுப்பப்படமாட்டாது. காலண்டர் கிரையம் 0—6—0, தபால் செலவு 0—1—0, சேர்த்து 0—10—0 ஸ்டாம்பு அனுப்பினுல் ஒரு காலண்டர் அன்றிஜிஸ்டர் தபால் பார்சலில் அனுப்பப்படும். வியாபாரிகளுக்கு நல்ல கமிஷன். தேவைக்கு உடனே எழுதவும்.

குமரன் பிரஸ், காஞ்சீபுரம்.



Dr.T.K.V. Chalam.

## Goshaye office pillss .
## கோஷாயி
## ஆபீஸ் மாத்திரை

மலச்சிக்கலுள்ள ஆண், பெண், பாலர், விருத்தர்களும் எவ்வித பத்தியமுமில்லாமல் சாப்பிட்டு குணமாகக்கூடிய கோஷாயி ஆபீஸ்மாத்திரை 51 கொண்ட சீசா 1க்கு ரூ. 1—10—0 101-க்கு 3—0—0. வி. பி. பாக்கிங் சார்ஜ் வேறு.

Proprietor. T. K. வெங்கடாசலம்,
(Disciple of Late Dr B. A. Ehiraj Cholera Bairi)
கோஷாயி வைத்தியசாலை,
தேன்னூர், திருச்சி.

மதத்தை ஒழிப்பது
உயர்வு தாழ்வை ஒழிப்பதாகும்.

அதிர்ஷ்டம் மாத்திரமல்ல
அறிவுதானம் செய்த பலனுமுண்டு.
பச்சையப்பன் கலாசாலை
## லாட்டரி.

ரூ. 1,00,000- பிரைஸ்கள் 3059. முதல்பிரைஸ் ரூ. 20,000
ஒரு டிக்கட் விலை. ரூ. 1
முடியும் தேதி 30-6-33. எடுக்கப்படும் தேதி 31-7-33.
மற்ற விபரங்களுக்கு கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதவும்.
காரியதரிசி,
வி. திருவேங்கிடசாமி எம். ஏ.
பச்சையப்பன் ஹால்டல், சேத்துப்பேட்டை, மதராஸ்.

கடவுள் உணர்ச்சியை ஒழிப்பது
பணக்காரத்தன்மையை ஒழிப்பதாகும்.

# குடி அரசுப் பதிப்பக வெளியீடுகள்.

## கைவல்யம் அல்லது கலைக்கியானம்.

இது கைவல்ய சாமியாரவர்களால் எழுதப்பட்ட கட்டுரைகளைத் தொகுத்து வெளியிடப்பட்டது. இங்கட்டுரைகளைப் படிப்பதால் அனேக சரித்திர புராண, இதிகாசங்களையும் அவற்றில் உள்ள சாதிப்புரட்டு சமயப்புரட்டு, முதலியவைகளையும் உணர்ந்து நிகரற்ற பண்டிதராகலாம். இதன் விலை அணு. 0—8—0

## இராமாயண ஆராய்ச்சி.

இதில் இராமாயணத்தின் ஆபாசங்களை அறியலாம். கம்பஇராமாயணம், வால்மீக இராமாயணம் இரண்டிலும் உள்ள ஊழல்களையும், ஒன்றற்கொன்று உள்ள வேறுபாடுகளையும் ஆராய்ந்து அவற்றில் உள்ள தெய்வீகப் புரட்டுகளை வெளியாக்குவது.

இதன் விலை முதற்பாகம் பாலகாண்டம் அணு. 0—4—0
இரண்டாம் பாகம் அயோத்தியா காண்டம் அணு. 0—8—0

## ஞானசூரியன்.

இதில் வேதம், புராணம், ஸ்மிருதி முதலியவைகளின் ஆபாசங்களைக்காணலாம். மதங்களின் ஆபாசங்களையும், மதச்சடங்குகளின் ஆபாசங்களையும் அறியலாம். இதை ஒரு முறை படித்தால் ஆரியர்களின் புராதன நர்கீகத்தின் வண்டவாளம் முழுதும் தெரியும் பெரிய புத்தகம் 150 பக்கம். இதன் விலை அணு. 0—4—0

## ஈ. வெ. இராமசாமியின் சீர்திருத்த மகாநாட்டுச் சொற்பொழிவு.

இதில் ஜன சமூகம், சீர்திருத்தம் பெற்றுச் சுகமாக வாழ வேண்டியதற்கான வழிகளைக் காணலாம், மக்கள் அடிமைப்பட்டுப் பகுத்தறிவின்றி வாழ்வதற்குக் காரணங்களோ உரைக்கலாம், ஈ. வெ. ராமசாமியின் சொற்பொழிவுகளில் இது தலை சிறந்ததாகும்.

இதன் விலை அணு. 0—2—0,

## தர்மபரீக்ஷை அல்லது புராண ஆபாசம்.

இது ஒரு பழைய நூல். இதில் புராணங்களின் பொருத்தமற்ற கதைகளையும், முன்னுக்குப்பின் முரணான கொள்கைகளையும் தெள்ளத்தெளிய உரைக்கலாம். இரண்டு இளைஞர்கள் மாறுவேடம் பூண்டு பொதுஜனங்களுக்குப் புராணப் புரட்டுகளை வெளிப்படுத்தும் முறையில் எழுதப்பட்டிருக்கிறது.

இதன் விலை அணு 0—3—0

## பங்கஜம் அல்லது பார்ப்பனக்கொடுமை.

இது ஒருநாடகம், பார்ப்பனர்களின் புரட்டுக்களையும், ஜாதி வேற்றுமை, மதக்கொடுமை, சாஸ்திரக்கொடுமை முதலியவற்றையும் விளக்கிச் சமதர்மத்தைப் போதிப்பது. இதுவே தமிழில் உள்ள முதல் சுயமரியாதை நாடகம்.

இதன் விலை அணு 0—4—0

## மேயோகூற்று மெய்யா? பொய்யா?

இது அமெரிக்க நாட்டு மாதாகிய "கன்னிமேயோ" எழுதிய நூலிலுள்ள உண்மைகளையும், அதில் சொல்லப்படாமல் இருக்கும்—நமது நாட்டிலுள்ள வேறு பல ஆபாசங்களையும் எடுத்துக் காட்டிச் சீர்திருத்த வேண்டுமென்னும் உணர்ச்சியை உண்டாக்குவது.

இதன் விலை அணு 0—3—0

## அகத்தியர் ஆராய்ச்சி.

இதில் முச்சங்கங்களின் புரட்டுக்களையும், அகத்தியர் சரித்திரப் புரட்டுக்களையும் தமிழ்நூல் ஆதாரங்களோடு விளக்கப்பட்டிருக்கிறது. சென்னை, பண்டிதர் கா. நமச்சிவாய முதலியாரால் எழுதப்பட்டது.

இதன் விலை அணு 0—2—0

## கடவுளை நிந்திக்கும் கயவர்கள் யார்?

இதில், கடவுளை நிந்திப்பவர்கள் சுயமரியாதைக்காரர்கள் அல்லவென்றும், புராணமரியாதைக்காரர்கள் தான் கடவுளை நிந்திக்கும் கயவர்களென்றும், இதிகாசப் புராணங்களின் ஆதாரங்களைக்கொண்டே விளக்கிக் காட்டப்பட்டிருக்கிறது. பண்டிதர் அ. ராகவன் அவர்களால் எழுதப்பட்டது.

இதன் விலை அணு 0 2—0

## கடவுளும், பிரபஞ்சமும்.

"கடவுள்" என்ற ஓர் அர்த்தமற்ற வார்த்தையை நம்பிகாலத்தையும், செல்வத்தையும், அதற்காகச்செலவு செய்து சோம்பேறிகளாய் வாழ்வது மதியீனமும் அறியாமையுமென்பது இப்புத்தகத்திலிருந்து தெரியலாம். சிறந்த ஆராய்ச்சி நூல். கல்லினுள் தேரையும், மாங்கொட்டையில் புழுவும் எப்படி ஜீவிக்கின்றன? கோழிமுந்தியதா? முட்டை முந்தியதா? என்ற கேள்விகளுக்கு விடையுடன் கூடியது.

இதன் விலை அணு 0—4—0.

## சத்தியாக்கிரகமா சண்டித்தனமா?

விலை பை. 0—0—3

## காந்தியின் உண்மைத் தோற்றம்.

விலை பை. 0—0—3

## இராமசாமியின் இலங்கை உபன்யாசம்.

விலை பை. 0—0—6

## இந்தியாவின் குறைபாடுகள்.

டாக்டர் பராஞ்சினை எழுதியது விலை அணு. 0 8—0
குடி அரசு சந்தாதாரர்களுக்கு விலை அணு. 0—6—0

## மனுநீதி மருமம்.

விலை அணு. 0—2—0

## இராமலிங்க சுவாமிகள் பாடல் திரட்டு.

விலை அணு. 0—2—0

## சுயமரியாதைப்பாடல்.

விலை அணு 0—2—0.

## கதர்-மூடநம்பிக்கை (இங்கிலீஷ்)

விலை அணு 0—2—0

மானேஜர், குடி-அரசு புத்தகாலயம், ஈரோடு.

உண்மை விளக்கம் பதிப்பகத்தில் அச்சிடப்பட்டு சோழர், நாகம்மாள் அவர்களால் வெளியிடப்பட்டது.